வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

அன்றும் இன்றும் என்றும்
நீங்கள் விரும்பும்

மில்க் வைற்




நீல சோப்
புகழ்பெற்றது

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 மாசி திங்கள் 8-ம் நாள் (19—2—1966) சனிக்கிழமை ஷவ்வால் 27 | இதழ் 39

# தமிழ்க் கடிதங்கள் நாசம்

## தபால் இலாகாவில் நடைபெறும் சதி

### இடதுசாரிகளே காரணமாம்

தமிழ்க் கடிதங்களும், தமிழர்கள் எழுதும் கடிதங்களும் அரசாங்க திணைக்களங்களில் தினந்தோறும் கட்டுக்கட்டாக நாசமாக்கப்படுகின்றன என்றும், இதற்கு பெரிய அதிகாரிகள் சிலரும் துணையாக இருக்கின்றனரென்றும் அறியப்படுகிறது. இடதுசாரித் தலைவர்களின் ஆலோசனையுடனேயே இந் நாசவேலைகள் நடப்பதாக கூறப்படுகிறது. இந்த நாசவேலையில் மிகவும் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளும் வண்ணமும் தமது ஆதரவாளர்களுக்கு இடதுசாரித் தலைவர்கள் எச்சரித்துள்ளார்களாம். இந்த நாசவேலைக்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று தமிழ்மொழி சட்டவிதிகள் அமுல் நடாத்தப்படுவதற்குக் குந்தகம் விளைவிப்பது. மற்றது எட்டாம் திகதிய சம்பவங்களுக்கு அரசாங்கத்தைப் பழிவாங்குவது.

வட-கிழ் மாகாணங்களிலிருந்தும், ஏனைய பகுதிகளிலிருந்தும் கொழும்புக்கு அனுப்பப்படும் தமிழ்க் கடிதங்களும், தமிழர்களுக்கு அனுப்பப்படும் ஆங்கில முகவரியுடன் கூடிய கடிதங்களும் பெருந்தொகையாகத் தினமும் நாசமாக்கப்படுகின்றனவாம். இதே போன்று கொழும்பிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் தமிழ்க் கடிதங்களும், தமிழர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களும் நாசமாக்கப்படுகின்றனவாம்.

இந்த நாசவேலை இரு மூனைகளில் நடைபெறுகின்றதாம். வெளியூர்களிலிருந்து தலைநகருக்கு வரும் கடிதங்கள் அஞ்சல திணைக்களத்திலேயே பெரும்பாலும் கிழித்தெறியப்படுகின்றன என்று கூறப்படுகிறது. அஞ்சற் திணைக்களத்தில் உள்ளவர்களின் கையிலிருந்து தப்பி அரசாங்க திணைக்களங்களுக்குச் செல்லும் இக்கடிதங்கள் அங்குள்ள இடதுசாரித்தீவிர சிங்கள ஊழியர்களால் நாசமாக்கப்படுகின்றனவாம். ஒரு திணைக்களத்தில் மட்டும் கடந்தவாரம் ஒரே நாளில் எண்பதிற்கு மேற்பட்ட கடிதங்கள் இங்ஙனம் நாசமாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திணைக்களங்களில் நடைபெறும் இந்த நாசவேலைக்கு, சில உயர்தர அதிகாரிகளும் ஆங்காங்கே துணைபாகஇருக்கிருர்களாம். பதிவு செய்யப்பட்ட கடிதங்கள்கூட இங்ஙனம் நாசமாக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

கொழும்பிலிருந்து வெளியூருக்குச்செல்லும் தமிழர் சம்பந்தப்பட்ட கடிதங்கள் முதலில் திணைக்களங்களில் வைத்தே அழிக்கப்படுகின்றனவாம். திணைக்களங்களிலிருந்து தப்பிச்செல்லும் கடிதங்கள் அஞ்சலகத்தில் நாசமாக்கப்படுகின்றதாம். இதே போன்று தனி நபர்கள் கொழும்பிலிருந்து தமதுஉறவினர்களுக்கு அனுப்பும் கடிதங்களில் சரிபாதி தினமும் நாசமாக்கப்பட்டு வருகிறதாம்.

தபால்மூலம் அனுப்பப்படும் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் குறிப்பிட்ட முகவரியுடையவருக்கு அனுப்பப்படாது, பழைய பேப்பர் வியாபாரிகளுக்கு நிறைக் கணக்கில் பட்டுவாடா செய்யப்படுகிறதாம்.

இந்த நாசவேலைக்கு இடதுசாரியினரே காரணம் என்று தெரிகிறது. இடதுசாரித்தலைவர்களின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நாசவேலை நடைபெற்றுவருகிறதாம். மூன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளும் வண்ணமும் இவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிருர்களாம்.

இந்த நாசவேலைக்கு இரண்டு காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன.

(9-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகளின் புதிய திட்டம்

### அவசர நிலையை வாபஸ் பெற நல்லபிள்ளை நாடகம்

அவசரகால நிலையை ஏப்ரல் திங்களுக்கு முன்னர் நீக்குவதற்கான முறையில் தங்கள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது. ஏப்ரல் திங்களுக்கு முன்னர் அவசரகால நிலை வாபஸ் பெறப்பட்டாலே மேதினத்தைச் சிறந்த முறையில் ஒழுங்குசெய்யலாம் என்று இவர்கள் நம்புகிருர்களாம். மேதினக் கூட்டத்தை மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக்கூடியதாக நடத்துவதே எதிர்க்கட்சிகளின் திட்டம் என்றும் தெரிகிறது.

பரபரப்பு ஏற்படுத்தக் கூடிய முறையில் எத்தகைய நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லையென்று எதிர்க்கட்சிகள் முடிவுசெய்திருப்பதாகக் கூறப்படுகிறது. பாராளுமன்றத்துள்ளும், பொதுமக்கள் சம்பந்தப்படாத மறையிலும் தங்கள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், நாட்டில் அமைதி நிலவுவதாகக் காட்டி அவசரகால நிலையை வாபஸ்பெறச் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளனவாம்.

மேதினத்திற்கு முன்னர் அவசரகால நிலை வாபஸ் பெறப்பட வேண்டுமென்பதே எதிர்க் கட்சிகளின் விருப்பமாகும். மேதினத்திற்கு முன்னர் அவசரகால நிலை வாபஸ் பெறப்பட்டால் மேதினக் கூட்டத்துடன் மக்

(9-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் திரு. ஜீ. ஜீ.

### கட்சிச் சார்பற்ற வரவேற்பு உண்மையா?

திருமலையில் திரு. பொன்னம்பலம் அவர்களுக்குக் கொடுத்த வரவேற்பில் உள்ளூர் பிரமுகர்கள் சிரத்தை காட்டவில்லையாம். திரு. பொன்னம்பலத்தை வரவேற்றுப் பேசியவர்களில் இருவர் மட்டுமே திருமலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. ஒருவர் அரசியல் பேச மற்றவர் அதைக் கண்டித்தாராம். இவர்களின் சூழ்ச்சியை அறிந்த திரு. சிவானந்தன் நகரசபையின் சார்பில் வரவேற்புக் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

கடந்த 12-ம் திகதி தமிழ் காங்கிரஸ் திருகோணமலை மக்களை ஏமாற்றிவிட்டது, திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க ஒழுங்கு செய்தவர்கள் அந்த வரவேற்பு கட்சிச் சார்பற்ற ஒன்று என்று கூறி திருமலை மக்களின் ஆதரவைப் பெற முயன்ருர்கள். ஆனால் 12-ம் திகதி நடைபெற்ற (வரவேற்பு) தமிழ் காங்கிரசின் பிரச்சாரக் கூட்டமாக உருவெடுத்தது. கடந்த பொதுத் தேர்தலில் வடபகுதியில் த. கா. வேட்பாளராகப் போட்டியிட்ட ஓர் இளைஞர் தலைமையில் இரண்டு பஸ் நிறைய த. கா. ஆதரவாளர்கள் மாலைகளுடனும், வெடிகளுடனும் வரவேற்புக்கு முதல்நாள் இரவு திருமலையை நோக்கிப் படையெடுத்தனராம்.

திருமலை பிரதான வீதியில் உள்ளவர்களுக்கு மாலைகளும் வெடிகளும் வழங்கப்பட்டதாம். சிலர் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்களாம். த. கா. ஆதரவாளர்களே ஆங்காங்கு வெடிகளைக் கொழுத்தி திரு. பொன்னம்பலத்திற்கு மாலையிட்டனராம்.

திருமலையைச் சேர்ந்த இருவர் மட்டுமே விழாவில் பேசினர்களாம். அவர்களில் யாழ்ப்பாணத்தைத் தற்போதைய வசிப்பிடமாகக் கொண்ட திரு. ஏ. ஐ. இராசசிங்கம் என்பவர் யாழ்ப்பாணத்தையும், வவுனியாவையும் சேர்ந்த பலர் பேசிய பின்னர் "இந்த வரவேற்பில் திருமலையில் பிறந்தவர்களில் ஒருவன் என்ற ரீதியில் முதற்தடவையாகப் பேசுவதில் பெருமையடைகிறேன்" என்று கூறினர்.

அடுத்துப் பேசியவர் திருமலையைச் சேர்ந்த திரு. ஏ. சரவணமுத்து. இவர் பேசுகையில் கட்சிச்சார்பற்ற வரவேற்பில் அரசியல் பேசியதைக் கண்டித்தார்.

தமிழ் காங்கிரசாரின் சூழ்ச்சியை முன்னதாகவே அறிந்திருந்த டாக்டர் எஸ். சிவானந்தம் திருமலை நகரசபையின் சார்பில் ஒரு வரவேற்புக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

சர்வர் சுந்தரம்

புதுமுறை சினிமாப் போட்டி

விபரம்

அடுத்த வாரம்



எஸ்·பொன்னுத்துரை

செந்தில்நாதனை அப்படிக் கட்டியங் கூறி வரவேற்றவர்கள் மூத்த பெண் மாலினியும், மூத்த மகன் ஸ்ரீ காந்தனுந்தான் மாலினி காந்தனுக்கு மாங்கொட்டை விளையாட்டுப் பழக்கிக் கொண்டிருந்த பொழுது 'ஐயா'வின் முகதரிசனங் கிடைத்தது. உற்சாக மிகுதியாற் கூச்சலிட்டு விட்டார்கள்.

அன்னல[...]ாசலுக்கு விரைந்[...]ள். அவள் தோய்ந்து [...]ளித்து, உலாந்தும் உலரா[...]துமாக இருந்த கூந்தலைப் பழைய 'ரவுக்கை' ஒன்றுடன் முடிந்திருக்கிறாள். பூச்சும் பொட்டுமாகப் புதுப் பொலிவு சிந்தி வழிகின்றது. அவள் 'குமர்ப் பொட்டை'யாக இருந்தது தொடக்கமே 'பிரேஸியஸ்' அணிந்ததில்லை. இருப்பினும், 'ரவுக்கை'யின் கீழ் முடிச்சுக் கொடுத்த உந்தலில் அவளுடைய பால்முலை நிமிர்ந்து நிற்கும் வடிவில் செந்தில்நாதன் புதுக்கவர்ச்சி கண்டு 'சொக்'குகிறார்.

திடீரென்று செந்தில்நாதனைக் கண்டதும் அன்னலட்சுமி பூரிப்பில் விரிகின்றாள். அவளுடைய இதழ்கள் வெட்டிப் பிளக்க, வெற்றிலைக் காவி இழையோடியிருக்கும் பற்கள் வரவேற்புச் சிரிப்பினைத் தாங்கி நிற்கின்றன. அந்தச் சிரிப்பின் மதர்ப்பு விரிப்பிலே கண்கள் சிறுக்கின்றன. கன்னத்திலே அந்தப் புளியங்கொட்டையளவு குழி நன்றாகத் தெரிகின்றது. அந்தக் குழி 'நல்ல வடிவா இருக்கு' என்று எத்தனையோ தடவைகள் செந்தில்நாதன் நினைத்திருக்கிறார்; சொல்லியுமிருக்கிறார்.

'என்னெணை மலைச்சுப் போய் நிக்கிறீர்? 'டக்'கெண்டு நினைச்சாப்போலை புறப்பட்டு வந்துட்டன் அது தான்வாறனெண்டு ஒரு போஸ் காட்டுக்கூடப் போடேல்லை'

'...மெய்யப்பா, இண்டைக்கு ரெயில் பிந்தியே வந்தது?'

'ஓமெணை சரியான கூட்டம், நெரிபட்டதிலை உடம்புக்கு அரைப்போத்தில் சாராயம் போட்டு உழக்கினாலும் இந்த மேல் வருத்தம் தீராது...'-இப்படி மெய் வருத்தங்களைக் கற்பித்து, அன்னலட்சுமியினதும் செல்லப்பாக்கிய ஆச்சியினதும் அனுதாபங்களைச் சம்பாதிப்பது செந்தில்நாதனின் பிறிதொரு சுபாவமாகும்.

'பிரயாணம் எண்டாலே கரைச்சல் தானே? சனவெக்கையும், அதுகும் இதுகும். கொழும்பிலை நல்ல வெய்யிலும் போலை கறுகறெண்டு கறுத்துப்போய் இருக்கிறியள்,'

'நீர் எண்டாப் போலை என்ன? போன கோசு கண்டதுக்கு நல்லா மெலிஞ்சிருக்கிறீர்.'

'நீங்கள் இண்டைக்கு வருவியளெண்டுதான் நினைச்சன்.'

'சும்மா புலுடா விடாதையும். நேற்றெனவ நான் வருவனெண்டு கனவேகண்டனீர்?'

'உண்ணணையப்பா, உங்கை காகங்கள் கரைஞ்சு திரிஞ்சுதுகள் நீங்கள் வருவியளோ எண்டு நினைச்சுக் கொண்டு பறந்து கத்திக்காட்டச் சொன்னன். அதுகளும் பறந்து கத்திக் காட்டிச்சுதுகள்... பேந்து நேரம் செனடாப் புறகுதான் நீங்கள் வர மாட்டியளோ எண்டு ஐமிச்சப்பட்டன்...'

நாலாம் கால் 'பொடிச்சி'யான ரோகிணி 'தத்தக்க புத்தக்க' என்று நடந்து வந்து, புது மனுஷனைக் கண்பதான மருட்சியுடன் தாயின் 'கொய்த'கத்தைப் பிடித்துக் கொண்டு மறைகின்றாள்.

'எணை யம்மா! நீங்கள் காகங்களுக்குச் சோறுவைக்கிற புரட்டாசிச்சனி. அது தான் கத்தினதுகள்' என்று மாலினி குறுக்கிட்டாள்.

'மூத்தபிள்ளை மொக்குப் பிள்ளை எண்டு சொல்லுவினம் இவளெண்டால் வலு கெட்டிக்காரி இவள் மட்டும் பொடியனாப் புறந்திருந்தால் என்ன பிச்சைப்பட்டும் இஞ்சினியரிங்குக்குப் படிப்பிச்சுப் போட்டுத்தான் செத்திருப்பன்' என்று செந்தில்நாதன் நினைத்துக் கொள்ளுகின்றார். கந்தோரில் ஆங்கில மாதங்களுடனும் திகதிகளுடனும் 'மாரடி'க்கும் அவருக்கு இப்பொழுதுதான் இன்று புரட்டாசிச் சனி என்ற உண்மையும் புலனாகுகின்றது.

'பொம்புளைப் புள்ளையள் தகப்பன்மாரின்ரை புள்ளையள் எண்டது மெய்தான். பாத்தியளே அவள் உங்கடை பக்கத்துக்குக் கதைக்கிறதை...'

'இல்லை ஐயா அம்மாவும் பாவம் காகங்கள் இண்டைக்கு அலைச்சுப் போட்டுது. இவவைச்ச சோறைக் காகங்கள் எட்டிப்பாக்கவும் இல்லை பேந்து தண்ணி தெளிச்சுக் கிளிச்சி வைச்சப் புறகுதான் திண்டதுகள்.'

'அது புள்ளை, கறியிக்கை ஏதேன மயிர்கியிர் விழுந்திருக்கும். அதுதான் புறியங் காட்டியிருக்க வேணும்' என்று மாலதிக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டே, 'கிற்பாக்'கைத்திறந்து பிஸ்கற் பெட்டியையும் 'ரொப்பி'டின்னையும் எடுத்துக் கொண்டு, தாயின் கொய்யகத்திற்குப் பின்னால் ஒளித்து விளையாடும் ரோகினியைப் பார்த்து, ஐயாட்ட வாருங்கோ பவா!...' என்று செலவம் கொட்டி அழைக்கிறார். அவள் தாயின் சேலையைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக் கொள்ளுகிறாள்.

'என்னெணை, அவவி உன்ரை சீலையைப் புடிச்சுக் கொண்டு தொங்கிறாள்?'

'நீங்கள் ஆடியிலை ஒருக்கா அமவாசையிலை ஒருக்கா வருவியள். அவளுக்குப் புறத்தி மனுஷரின்ரை முகம் போலை கிடக்காக்கும்' என்று சொல்லிக் கொண்டே ரோகிணியைத் தூக்கிக் கக்கத்திலே வைக்கிறாள்.

'புள்ளை நீ சாப்பிட்டு நிக்கிறாய் அவரைக்குளிச்சிட்டுச் சாப்பிடச் செரல்லன். வந்த வரோடை நிப்பாட்டிக் கதைச்சுக் கொண்டிருக்கிறாய்...' என்று கட்டளையிட்ட வண்ணம், மாட்டுத் தொழுவத்தின் பக்கம் செல்லப்பாக்கிய ஆச்சி வாளியுடன் செல்லுகின்றாள். 'வாயில்லாச் சீவன்'களில் செல்லப்பாக்கிய ஆச்சிக்கு நல்ல கரிசனை அதுகள் இவவுக்கு நல்ல ராசியும்கூட. கழுநீர், 'ஆத்திகேட்டு'க்காகச் செல்லப்பாக்கிய ஆச்சி' தேங்காய்ச் செட்'டுடன் குடித்ததுபோக எஞ்சியிருக்கும் கஞ்சி, மரகறி வகை'யில் கழித்துவிடும் தோல்கள், கந்துகள், பிழிந்த தேங்காய்ப்பூ— இவற்றையெல்லாம் வலு அக்கறையுடன் வாயில்லாச் சிவன்களுக்காக அந்த வாளியிற் சேர்த்து வைப்பாள். அந்தவாளியைத்தான் மாடுகளுச்குக் காட்டுவதற்காக எடுத்துச் செல்லுகின்றாள்.

செல்லப்பாக்கிய ஆச்சியின் குரல் கேட்டதும் அவரை 'நிப்பாட்டி வைத்து'ப் பேசுவது முறையில்லை என்பதை அன்னலட்சுமி உணருகின்றாள். ஆச்சி எதையும் குறிப்பாகத்தான்சொல்லுவாள். அவள் எதையும் தன் நன்மைக்காகச் சொல்ல மாட்டாள்; குடும்பத்தின் நன்மைக்காகத்தான் சொல்லுவாள் என்பது எல்லோருக்குந் தெரியும்.

அவன் கட்டித் தோய்ந்த உடுத்தாடைதான் கொடியிலே காய்கிறது. அதை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கின்றாள்.

அதைக் கட்டியபடி காற்சட்டையைக் களைகின்றார். 'பக்கற்'றில் பக்குவமாக வைத்திருந்த பணத்தை எடுத்து, 'கொம்மாவைக் கூப்பிட்டு இதைக்குடணை' என்று கொடுக்கின்றார். அம்மாவிடம் கொடுக்கும் பொருளென்றால் அது பணமாகத்தான் இருக்கும் என்பதை அன்னலட்சுமி அறிவாள். அவர் தாயிடம் எவ்வளவு கொடுக்கிறார், வாங்குகிறார் என்ற சங்கதிகளை அவள் அறியமாட்டாள். அவள் ஒரு சதம் என்றாலும் தன் முடிச்சில் வைத்துச் செலவு செய்து அறியாதவள்



வெயில் உடலைப் பிழிந்து வியர்வையைத் தேகமெல்லாம் கொட்டி வைத்திருப்பதை அப்பொழுதுதான் உணரலானார். பிஸ்கற் பெட்டியையும், 'ரொப்பி' டின்னையும் 'எல்லோருக்கும் சமமாகப் புறிச்சுக்' கொடுக்கும்படி அன்னலட்சுமியிடம் கொடுத்து, 'கிற்பாக்'கைக் கொண்டுபோய் உள்ளே வைத்தார். சேட்டைக் கழற்றி, கிருஷ்ணர் படம் மாட்டியிருக்கிற ஆணியிலே தொங்கப்போட்டார்.

'எணெய், உந்தக் கொடியிலை உணருற சீலையை எடுத்தாணை' என்று அன்னலட்சுமிக்குக் குரல் கொடுக்கிறார்.

காற்சட்டையை நன்றாக மடித்துக் 'கிற்பாக்'குள் வைத்துவிட்டுச் சாறனை எடுத்துத் தோளிலே போடுகின்றார். இரு சிப்பு விலா எலும்புகளும் அப்படியே தெரிவதாக அன்னலட்சுமிக்குப் படுகின்றது. 'பாவம் அந்தாளும் ஆவ் ஆவெண்டு பறந்து பறந்து உழைக்கிறது. கொழும்பிலை ஆனமான சாப்பாடே கிடைக்குது?' என்னும் அனுதாப உணர்வும் பிறக்கின்றது. அதற்கிடையில் தன்னுடைய கையில் பணம் என்னும் தாங்க முடியாத பாரம் இருப்பதையும் உணருகின்றாள். அதனைச் செல்லப்பாக்கிய ஆச்சியிடஞ் சேர்ப்பதற்காக அவள் மாட்டுத் தொழுவப் பக்கஞ்செல்கின்றாள்.

செந்தில்நாதன் கிணற்றடிக்குப் போகின்றார்தோளிற் போட்டிருந்த 'சாறனை'க் கதிகாலிற் போட்டுவிட்டு, இரண்டு பட்டை தண்ணீர் மேலிலே ஊற்றுகின்றார். அப்பொழுதுதான் துலா 'உலாஞ்சு'வதை அவதானிக்கின்றார். கதிகாலில் ஏறி, கதிகால கொப்புகள இரண்டினைப் பிடித்துக் கொண்டு, துலாவிலே தன்னுடைய முதுகைச் சாய்த்துக் கொண்டு, 'மூலம் புறப்பட'த் தக்கதாக நாலு முக்கு முக்கித் துலாவைச் சரிசெய்து கீழே இறங்குகின்றார்.

'பாவம் அதுகளும் என்ன செய்யுங்கள். ஆண துணை இல்லாததுகள். ஆரேன் நளவன் பள்ளன் வந்தாத்தான் உதுகளைச் செய்விக்கலாம். அவர்களுக்குமோ இப்பகெப்பர் மிஞ்சிப் போச்சு. துலாவை அரக்கினால் பந்தியிலை வைச்சுச சோறு தாறியளோ எண்டு கேக்கிற அளவுக்கு வந்திட்டாங்கள்...' இந்த நினைவுகள் குறுக்கேயோட, துலாவைத் தான் தனியாகவே அரக்கியதில் பரம திருப்தி கொண்டு, தன்னுடைய குளியலைத் தொடரலானார். 'துலாவைத் தாட்டு வைச்சிட்டு, ஊத்தை உரஞ்ச ஆரம்பித்த அவருடைய கண்களிலே இன்னொரு சங்கதி படுகின்றது. அவா குளிக்கும் தண்ணீர் மரங்களுக்குச் சுவறாமல், ஒழுங்கையிலே பொசிந்து கொண்டிருக்கிறது. கக்கூசடியிலே கிடந்த மண்வெட்டியைத் தூக்கி வந்து கமுக மரங்களுக்குத் தண்ணீர் பாயக் கூடியதாக வாய்க்கால் கோலத் தொடங்கினார்.

மாட்டுத் தொழுவத்தடிக்குச் சென்று தாயிடம் காசைக் கொடுத்துவிட்டு, அடுக்களைப் பக்கம் வந்து கொண்டிருந்த அன்னலட்சுமி இதைக் கவனித்துவிடுகிறாள்.

'நீங்கள் குளிச்சிட்டு வாருங்கோ. வந்தும் வராததுக்கும் முந்தி உதெல்லாம் என்ன வேலை. பேந்து ஆறுதலாகப் பார்க்கலாம்' என்று குரல் கொடுக்கிறாள்.

'இதெல்லாம் பெரிய வேலையே? தண்ணி வீணாப் போகுது' என்று சமாதானம் கூறிக்கொண்டே அவர் தன்னுடைய கருமத்தைத் தொடருகின்றார்.

அன்னலட்சு அப்படித்தான் சொல்லுவாள். கோடாலி எடுத்து அவர் விறகு கொத்தத் தொடங்கினால், போதும் விடுங்கோப்பா, பேந்து நேஞ்சுக்குள்ளை பிடிக்கும்' என்று அவள் சொல்லிக்கொண்டேயிருப்பாள். அவரும், 'இன்னும் ஒரு கட்டைதானெணை' என்று கொல்லிக்கொண்டே முழு விறகையும் கொத்தி முடித்துவிடுவார். பாவம், கந்தோரிலை கதிரையிலைகுந்தியிருக்கிற ஆளுக்கு இந்தக் கயிட்டமான வேலைகள் செய்ய முடியாது' என்ற இரக்கம் அன்னலட்சுமிக்கு உண்டு. செல்லப்பாக்கிய ஆச்சிக்கும் மருமகனைப் பூப்போல வைத்திருக்கிறது தான் விருப்பம். அவரை விறகு கொத்தும்படி அவள் சொல்லவும் மாட்டாள். வஞ்சகமில்லாமல், உந்த விறகை வந்து கொத்திட்டுப் போகச் சொல்லி நாகனிட்டைச் சொல்லி மூண்டு நாளாகுது, அவனும் இந்தா வாறன், அந்தா வாறன் எண்டு பூச்சாண்டி காட்டுகிறான் என்றுதான் சொல்லுவாள். 'பாவம், ஆண் துணையில்லாததுகள்' என்ற அனுதாப உணர்ச்சியுடன் செந்தில்நாதன் கோடாலியைத் தூக்கி விடுவார். 'இண்டைக்குப் பாட்டுக்கு நாலஞ்சு கொள்ளியள் கொத்தினாப்

(14-ம் பக்கம் பார்க்க).




கே. ஆர். விஸ்வப்பா,
லுனுகல.

கே: திரு. தொண்டமானும், ஐஞப் அசிசும் கூட்டுச்சேர்ந்தால் மலைநாட்டு மக்கள் பிரச்சினையைச் சுலபமாய் தீர்க்கலாம் அல்லவா?

ப: முன்பு கூட்டுச்சேர்ந்து ஒரே ஸ்தாபனத்தில் தானே இருந்தார்கள். ஒருபிரச்சினையையும் தீர்க்கவில்லையே!

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: வகுப்புவாதம் பேசித் திரிந்த இடதுசாரிகள் இப்போ என்ன சிந்தனையில் இருக்கிறார்கள்?

ப: அதற்கும் இடமில்லாது போய்விட்டதே என்று கவலைப்படுகிறார்களாம்.

ஃ

எஸ். எம். எம். ஹனீபா,
மிருவோடை.

கே: உலகக் குத்துச்சண்டை வீரன் முகம்மதலி (கிளே)யைப் பற்றி மூன்று விடயம் கூறுங்கள் பார்க்கலாம்!

ப: 1. 23 வயது பூர்த்தியாக முன்பே குத்துச் சண்டையின் மூலம் 30 கோடி ரூபாய் சம்பாதித்துவிட்டார்.

ப: 2. ஆனால் பணத்தை மென்மேலும் சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

ப: 3. தன்னை என்றுமே யாரும் தோற்கடிக்க முடியாது என்று கூறுகிறார்.

ஃ

எஸ். பெனடிக்ற்,
மன்னார்.

கே: ஈழத்தில் அல்லது இந்தியாவில் தனித் தமிழ்நாடு எப்போதாவது தோன்றுமா?

ப: 'அல்லது' ஏன்? இரு நாட்டிலும் இரு தமிழ் ராஜ்யங்கள் ஏற்படுவது சாத்தியமே!

ஃ

கதிர். செல்வநாயகம்,
மாதகல் மேற்கு.

கே: தங்களுடைய இனத்தவர்களை, அந்நியரைக்கொண்டு அவமானப்படுத்துகிறார்களே சிலர். காரணம் என்ன?

ப: பணம் காரணமாயிருக்கலாம்.

ஃ

ஏ. எம். றஜப்தீன்,
ஹெம்மாதகம.

கே: வகுப்பு வாதத்தைத் தூண்டும் பத்திரிகைகளை அரசாங்கம் தடைசெய்தமைதப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: அரசாங்கம் எந்தப் பத்திரிகைகளையும் தடைசெய்யவில்லையே! இரு அச்சகங்களை மட்டும் மூடியிருக்கிறது-சில பத்திரிகைகள் தங்களைத் தாங்களே தடைசெய்து கொண்டன.

ஃ

வி. ஆர். கிருஷ்ணன்,
கொழும்பு-13.

கே: அரசியலிலிருந்து தொழிற்சங்கத்தைப் பிரிக்கமுடியுமா?

ப: முடியாது, அரசியல் இல்லையேல் தொழிற்சங்கமில்லை. ஆனால் அரசியற்கட்சிகளின் ஆதிக்கத்திலிருந்து தொழிற்சங்கங்களைப் பிரிக்கலாம்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

'தமிழ்மகன்'
சுன்னாகம்.

கே: விக்கிரமாதித்தன் கதையில் தான் ஒரு வேதாளம் மீண்டும், மீண்டும் முருக்கமரம் ஏறிற்று. ஈழத்தின் கதையில் கூட ஒரு வேதாளம் மீண்டும் முருக்கமரத்தில் ஏறிவிட்டதே!

ப: பாவம்! இந்த வேதாளத்துக்கு ஏறுவதற்குமுருக்க மரம் தவிர வேறுமரம் கிடைக்கவில்லையே. விரைவில் இறங்கிவிடும். அல்லது மரத்துடன் சேர்ந்து கீழே சாய்ந்துவிடும்.

ஃ

வி. சிந்தனைச் செல்வன்,
கல்முனை.

கே: இந்தியாவில் தேர்தல் நிதி திரட்டும் கட்சிகள் இருக்கின்றன. அதுபோல் இங்கும் தேர்தல் நிதி திரட்டுவார்களா?

ப: இந்தியாவின் பாதுகாப்புக்கு இங்கு சில பத்திரிகைகள் பாதுகாப்புநிதி திரட்டின. அப்பத்திரிகைகள் இந்தியாவில் நடைபெறும் தேர்தலுக்கு இங்கு தேர்தல்நிதி திரட்டினாலும் வியப்பில்லை.

ஃ

இ. தமிழரசி,
மூளாய்.

கே: வட இலங்கையில் சிறப்பாகவும், இலங்கையில் பொதுவாகவும் தமிழ் இடதுசாரிகளின் நிலை என்ன?

ப: சிலர் வகுப்புவாதம் வேண்டாமென்று கூறி இடதுசாரி முத்திரையைவீசியெறிந்துவிட்டனர். சிலர் வகுப்புவாதபாயிருந்தாலும் இடதுசாரியாக இருப்பதிலேயே இன்பம் காணுகின்றனர். மற்றும் சிலர் ஒருசாரியும் வேண்டாமென்று கூறி அரசியலுக்கே முழுக்குப் போட்டுவிட்டனர்.

ஃ

நா. சிவசுப்பிரமணியம்,
அ. வி. ஸ்ரனிஸ்லஸ்.

கே: கொழும்பு-5-ல் நடந்த மரணச்சடங்கொன்றில் ஒரு பெண் ஆங்கிலத்தில் அழுதார். ஆனால் அவர் தமிழச்சி.

ப: சிரிப்பதும் அழுவதும் அகில உலகிலும் மனிதர்களிடம் காணப்படும் இரு செயல்கள். அவற்றை உலக மொழியில் செய்வது சாலவும் நன்று. எனவே அழுவதையும் சிரிப்பதையும் ஆங்கிலத்தில் செய்வதில் தவறில்லை.

ஃ

க. சாரதி, தாவடி.

கே: மாவட்டசபை நிறுவப்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓடும் பஸ்களிலுள்ளஇலக்கத்தகடுகள் எந்த எழுத்தில் பொறிக்கப்[illegible]

ப: பல ப[illegible]சினைகளுக்கு சாதகமான [illegible]டிவை ஏற்படுத்தவிருக்கும் மாவட்டசபை அமைப்பு, இப் பிரச்சினைக்கும் ஒரு நல்ல முடிவை நிச்சயம் ஏற்படுத்தும். என்ன மொழியில் வண்டிகளின் இலக்கத் தகடுகள் இருக்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள்சம்பந்தப்பட்ட மாவட்டசபைஉறுப்பினராகவேஇருப்பார்கள்.

ஃ

க. சுப்பிரமணியம்,
காரைநகர்.

கே: நான் காதலித்துத் தோல்விகண்டவன். இப்போது எனக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. பழைய காதலியை துறந்து 1 வருடத்திற்கு மேலாகிவிட்டது. அந்த ஒருவருட காலத்தில் கனவிலும் வராத என் மாஜிக் காதலி, இப்போது கலியாணம் நிச்சயமாகிய 1 மாத காலத்தில் பலமுறை கனவில் தோன்றி, என்னைக் கலக்குகிறாளே?

ப: கனவில் தானே தோன்றுகிறாள்? விட்டுத் தள்ளும்.

ஃ

எஸ். அன்ரன் ஜெயக்குமார்,
கரவெட்டி.

கே: நான் செவ்வாய்க் கிரகத்திற்குப்போக எண்ணியுள்ளேன். நீரும் வந்தால், அங்குள்ளவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறலாமே!

ப: முதலில் இங்குள்ளவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறி முடித்துவிட்டல்லவா செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வதுபற்றி யோசிக்கவேண்டும். எதற்கும் முதலில் நீர் சென்று வாரும், பின்னர் யோசிப்போம், வழியில் பேச்சுத்துணைக்கு ஆள்வேண்டும் என்றால் மிஸ் குயுக்தியாரை அனுப்பிவைக்கிறேன்.

## சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்

"தனிவழிக் கவிராயர்"

சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

உரித்து மிக வெனவே
உலக மிது தனிலே
விரித்த உறவு எல்லாம்
மெய்என நான் நம்பிக்
காலங்கழித் தேன் இக்
காசினியில் என் வாழுள்
சால வித்தை போலே
இராப்பகலாய்க் கழிந்த தெண்ணி
சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

எத்தனையோ சிந்தனைகள்
இடையிடையே வேதனைகள்
சித்தமதில் அன்பு என்னும்
திறம் தொடுத்த வாதனைகள்
அத்தனையும் செய்த பலன்
அளந்துரைத்தால் இங்கே என்
புத்தி எல்லாம் உலகத்தார்
பொக்கிஷம் போலில்லை யதால்
சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

காத லெனும் பேருணர்வு
கருணையுள மளிக்கு தென
ஏதேதுவோ நான் புகன்றேன்
இவ்வுலக மாந்தருக்கும்
காத லென்றால் விலை பொருளாய்
கருணையென்றால் வெறும் பேச்சாய்
தீது நினை மாந்தர் பலர்
துணை ஏற்ற நிலை கண்டு
சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

போலிக் கதைகளையும்
பொய்ச் சமய விதிகளையும்
கேலிமிகு சாதி என்னும்
கொடிய செயல்களையும்
நம்பாதிர் என்றே நான்
நயந் துணர்த்தும் வார்த்தைகள்
வம்பெனவே சொல்லும் இந்த
வையத்தார் மடமை எண்ணிச்
சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

காதலுணர் வாலே நான்
காட்டிவரும் அன்புளத்தை
தீதாய்க் கருதி எந்தன்
தூயஉள்ளம் துடி துடிக்க
வீணே புறக்கணிக்கும்
வேடிக்கை உலகமிதை
நாண மில்லாத தென்று
நவில அஞ்சுவாரை நம்பிச்
சிரிக்கின்றேன் சிரிக்கின்றேன்
சிரித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி
ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது,
சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

# பல்கலைக் கழக விசாரணைக்குழு அறிக்கை

**இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கிளர்ச்சிகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு தனது அறிக்கையைக் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் பல முக்கிய விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவற்றையிட்டு இக்கட்டுரை ஆராய்கிறது.**

# இடநெருக்கடியைக் கட்டுப்படுத்த கிளைக் கல்லூரிகள் அவசியம்

## வேலையில்லாப் பிரச்சினையை பட்டப் படிப்புடன் பிணைக்க வேண்டாம்

பூங்குன்றன்

இலங்கைச் சர்வகலாசாலையில் கடந்த டிசம்பர் திங்கள் 7ம் நாள் நடைபெற்ற கிளர்ச்சிகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. முப்பத்திமூன்று பக்கங்களைக் கொண்ட இவ்வாணைக் குழுவின் அறிக்கையில் நாலு முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. இடநெருக்கடி உருவாகக்கூடிய முறையில் அளவுக்கு மிஞ்சி மாணவர்களைச் சேர்பதில் உடனடியாகக் கட்டுப்பாடுவிதிக்கவேண்டும்.

2 அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்ட மாணவர்களும், ஆசிரியர்களும் பல்கலைக்கழகத்தில் இருக்கக் கூடாது.

3. வெளி மாணவர்களின் நலனைக் கவனிப்பதற்கு ஒரு பொது நலக்குழு அமைக்கப்பட வேண்டும்.

4. துணைவேந்தரின் பதவிக் காலம் வரையறை செய்யப்பட வேண்டும்.

இந்த நாலு பிரச்சினைகளையுமிட்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஆணையாளர் தமது அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறார்.

### இடநெருக்கடி

இடநெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கும் தமது அறிக்கையில் ஆணையாளர் வழிவகைகளைக் கூறியுள்ளார். கலையியற் பிரிவுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் முறையில் கட்டுப்பாட்டை விதிப்பதன் மூலம் இடநெருக்கடியைக் கட்டுப்படுத்தலாம் என்பது ஆணைக் குழு அறிக்கையின் சிபார்சு.

பல்கலைக் கழகத்தின் நடப்பு ஆண்டு ஆரம்பத்திலேயே இடநெருக்கடிப் பிரச்சினை பற்றி ஆராயப்பட்டது. இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு பல வழிவகைகள் கூறப்பட்டன. முடிவில் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலுக்கு பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பிரச்சினையை முடிவு கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குதிரைப் பந்தயத் திடலுக்கு பல்கலைக் கழகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் இடநெருக்கடிக்கு முடிவான தீர்வைக்காண முடியாதென்பதை அப்பொழுது பலரும் வலியுறுத்தினார்கள். நடைமுறையில் பல்கலைக்கழகம் குதிரைப் பந்தயத்திடலுக்கு விரிவுபடுத்தப்பட்டதேயன்றி, இடநெருக்கடிக்குத் தீர்வுகாணப்படவில்லை. பேராதனையிலும் சரி, கொழும்பிலும் சரி மாணவர்கள் தங்கிப்படிப்பதற்கு இடமின்றி தவித்துக் கொண்டேயிருக்கின்றனர். எத்தனையோ பெண்கள் ஒழுக்கமுடன் வாழ முடியாத இடங்களுக்கெல்லாம் சென்று இடம் தேட வேண்டிய நிர்பந்தத்திற்கு இலக்கானார்கள்.

### திட்டங்கள்

விரிவுரைகளை நடாத்துவதற்கு மட்டும் மண்டபம் கிடைத்துவிட்டால் அது பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கு இடவசதி கிடைத்துவிட்டதாகக் கருதப்பட்டது இந்த ஒரு பக்கமுடிவே டிசம்பர் திங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு மூலகாரணம் என்பதையும் ஆணையாளரின் அறிக்கை கூறுகிறது.

பல்கலைக்கழக இடநெருக்கடியைப் போக்குவதற்கு முதலில் முன்வைக்கப்பட்ட திட்டம், நாலு சேவகிக பல்கலைக்கழகக் கிளைகளை மாகாண ரீதியில் ஆரம்பிப்பதென்பதே. இத்திட்டம் பெரும்பாலும் அமுலுக்கு வரலாம் என்று ஆரம்பத்தில் பலராலும் நம்பப்பட்டதுடன், நம்பிக்கை உருவாகக் கூடிய முறையிலேயே சம்பந்தப்பட்டவர்களும் கருத்து வெளியிட்டிருந்தார்கள். முடிவில் போதிய காரணமெதுவுங் கூறாது இத்திட்டம் கைவிடப்பட்டது.

மாகாண ரீதியில் பல்கலைக் கழகக் கிளைகளை நிறுவுவதால் பொது மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் பல நன்மைகள் உண்டு. இன்று மாணவர்கள் தாங்கள் தங்கியிருக்குமிடத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்வதற்கு பஸ் வசதியில்லையென்று குறைப்படுகிறார்கள். மாணவர்களின் குறையை நீக்குவதற்கு ஆறுமாதங்கள் தேவைப்பட்டிருக்கிறது அரசாங்கத்திற்கு மாகாண ரீதியில் பல்கலைக் கழகக் கிளைகள் நிறுவப்பட்டிருந்தால் இதுபோன்று சிறு குறைகள் ஏற்பட்டிருக்கவும் மாட்டாது, அவற்றைப் போக்க அரசாங்கம் சிரமப்பட்டிருக்கவும் தேவையில்லை.

### பணக் கஷ்டம்

கொழும்பிலும், பேராதனையிலும் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலோர் நடுத்தர வகுப்புக் குடும்பத்தையும், அதற்குக் கீழ்பட்ட குடும்பத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களின் கல்விக்காக குடும்பத்தினர் குடியிருக்கும் காணியை ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாவுக்கு ஈடு வைத்திருக்கிறார்கள், தனது பிள்ளை பல்கலைக் கழகம் செல்லுகிறது, அதன் வளர்ச்சியைத் தடை செய்யக் கூடாது என்ற எண்ணத்துடனும், ஆசையுடனும் பெற்றோர்கள் குடியிருக்கும் நிலத்தையே ஈடுவைத்து மாதா மாதம் பணம் அனுப்புகிறார்கள்.

மாகாண ரீதியில் பல்கலைக் கழகக் கிளைகள் நிறுவப்பட்டிருந்தால் இந்தளவு தொகை பணம் நிச்சயமாக மாணவர்களுக்குத் தேவைப்பட்டிருக்காது. பெரும்பாலான மாணவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தே தினம் தினம் வகுப்புக்குச் செல்லக் கூடியதாக இருந்திருக்கும். இதனால் அறை வாடை, கைப்பணம் மாதம் முப்பது-நாற்பது ரூபாவும், உணவுக்கான பணத்தில் பெரும் பகுதியும் மிச்சமாகியிருக்கும். அத்துடன் மாணவர்கள் சுகாதாரமான சூழ்நிலையில் வாழவும் முடியும்.

மாகாண ரீதியில் பல்கலைக் கழகக் கிளைகள் நிறுவப்பட்டிருந்தால் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு உடனடித் தேவைகள் எழுந்திருக்கமாட்டாது. இட நெருக்கடியைக் கட்டுப்படுத்தவும் தேவையில்லை, வெளி மாணவர்களின் நலனைக் கவனிப்பதற்கு பொது நலக் குழு நியமிக்கப்படவும் தேவையில்லை.

இடநெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கு கலையியல் பகுதிக்கு மாணவர்களை எடுக்கும் அளவைக் குறைப்பது என்பது சனநாயக ரீதியான ஒரு முடிவாக மாட்டாது. பல்கலைக் கழகத்தில் இடவசதி ஏற்படுகின்ற அளவுக்கு மாணவர்கள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படுவார்கள். அப்படியானால் இவ்வாண்டில் சராசரி 76 புள்ளிகளைப் பெற்று ஒவ்வொரு பாடத்திலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஒரு மாணவன் இட நெருக்கடி காரணமாக பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை இழக்கிறான். ஆனால் அடுத்த ஆண்டில் சராசரி 50 புள்ளிகளைப் பெற்ற ஒரு மாணவன் இடவசதி இருப்பதன் காரணமாக பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுகிறான். இது கல்வியில் பரிசு பெறுவது போன்று திறமைக்கு முக்கியத்துவமில்லாமல், அதிட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கிறது. எனவே இடவசதிக்கு ஏற்ப கலைத் துறைக்கு மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டுமென்ற முடிவு சனநாயக சம்பிரதாயத்தில் நம்பிக்கையுடைய நமது நாட்டுக்குப் பொருத்தமானதல்ல.

ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளை அமுல் நடாத்துவதற்குச் சிறந்த ஒரே மார்க்கம் மாகாண ரீதியாக பல்கலைக் கழகக் கிளைகளை நிறுவுவதேயாகும்.

### வேலையில்லாப் பிரச்சினை

பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினை கூடுவதாக சிலர் வாதிக்கலாம். அப்படியானால் பட்டம் பெறுதவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் இன்று நடைமுறையில் இல்லாது இருக்க வேண்டுமே? பட்டதாரிகளை உருவாக்காது, தொழிற் துறைப் பயிற்சி கொடுப்பதற்கு முயற்சித்தால் பிரச்சினை தீரும் என்று சிலர் வாதிடலாம். இதில் இரண்டு விடயங்களை நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டும். ஒன்று கலைத்துறையில் பட்டம்பெற விரும்புபவர்கள் அல்லது தகுதியுடையவர்கள் நிச்சயம் தொழிற் துறையில் பயிற்சிபெற விரும்பமாட்டார்கள். விரும்பினாலும் அவர்களால் அத்துறையில் சிறப்புற முடியாது. அடுத்து, டாக்டர்களுக்கே வேலையில்லையென்ற நிலை உருவாகும் பொழுது, நாளை தொழிற் பயிற்சி பெற்றவர்களும் வேலையின்றித் தவிக்க வேண்டிய நிலை உருவாகலாம்.

எனவே, வேலையில்லாத் திண்டாட்டம் வேறு, பட்டதாரிகளை உருவாக்குவது வேறு.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பொருளாதார அடிப் படையில் மாற்றம் வேண்டும், அதற்காக பட்டதாரிகளை உருவாக்கி பண்பட்ட நல்ல சமுதாயத்தை தோற்றுவிக்கும் முயற்சிக்கு நாம் தடையாக இருக்கக்கூடாது.

### ஒழுக்கக் கட்டுப்பாடு

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் திறமைக்கு மாத்திரமன்றி ஒழுக்க சீலத்திற்கும் ஒரு பரீட்சை நடாத்துவது அவசியம் என்ற கருத்து ஒருசில வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வனம் கருத்து வெளியிடுபவர்கள் ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். மாணவர்களின் ஒழுக்கம் உயர்நிலைப்பள்ளியில் கல்விகற்கும்பொழுதிலேயே கெட்டுவிட்டதாக இவர்கள் கருதுகிறார்களா? அல்லது பல்கலைக் கழகம் சென்றபின்னர் இவர்கள் ஒழுக்கத்தில் பாதிக்கப் படுவதில்லையென்று கருதுகிறார்களா?

சூழ்நிலையும், சுற்றாடலுமே ஒழுக்கத்தைப் பாதிக்கும் முதற் காரணங்களாகும். அடுத்து சம்பந்தப் பட்டவர்களின் உளப் பாங்கையும் பொறுத்திருக்கிறது.

ஒழுக்கத்திற்குப் பரீட்சை வைக்க வேண்டுமென்றால் அது உளவியல் அடிப்படையில் அல்லவா அமைய வேண்டும். அது சாத்தியமானதா என்பதைக் கருத்து வெளியிடுபவர்கள் எண்ணிப்பார்க்கத் தவறி விடுகிறார்கள்.

பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க முன்னர் ஒழுக்கம் பரீட்சிக்கப்பட வேண்டுமென்றால், மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலேயே கெட்டுவிடுகிறார்கள், என்ற முடிந்த கருத்துக்கு நாம்வர வேண்டியிருக்கிறது. அப்படியானால் உடனடியாக உயர்நிலைப்பள்ளிகளையல்லவா சீர்திருத்தம் செய்ய வேண்டும். இது வேண்டுமென்றே உயர் நிலைப் பள்ளிகளின் மீதுபோர் தொடுப்பதுபோன்று உள்ளது.

உளவியலறிஞர்களின் கருத்துப்படி மாணவர்களின் ஒழுக்கம் பாதிக்கப்படும் காலம் பதினாறும் அதனை அடுத்த பத்தொன்பதாம் அகவைக்கும் இடைப்பட்டகாலமாகும் இக்காலம் பல்கலைக் கழகத்திற்குள் இருக்கக் கூடிய காலம் எனவே பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப் படமுன்னர் ஒழுக்கத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்து எதார்த்த ரீதியிலாயினுஞ்சரி, தத்துவ ரீதியிலாயினுஞ்சரி ஏற்புடைத்தல்ல என்பதைக்

(9-ம் பக்கம் பார்க்க)


## ஆடவர்களுக்கு மட்டும்....

கல்யாணம் கட்டப்போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.

வைத்தியாச்சாரி

**பி. எச். திசாநாயக்க,**

தபால் பெட்டி : 1281,

கொழும்பு.

## இவ்வாரச் செய்தி தெரியுமா?

**பெப்புரவரி 6 ஞாயிற்றுக்கிழமை**

சகல பாடசாலைகளிலும் சிங்களத்தைக் கட்டாய பாடமாக்க வேண்டும் என்னும் தீர்மானம் ஒன்று எதிர்க்கட்சியினரால் மேல் சபையில் கொண்டு வரப்பட இருக்கிறது.

வருகிற வியாழக்கிழமை பர்மாவின் தலைவரான ஜெனரல் நீவின் இலங்கை வரவிருக்கிறார்.

சந்திரனில் இறங்கியுள்ள ரஷ்யாவின் 'லூனா-9' என்ற விண்வெளி நிலையம் சந்திர மண்டலத்தைப் படம் பிடித்து அனுப்பி இருக்கிறது.

**பெப்புரவரி 7 திங்கட்கிழமை**

இலங்கைக்கு ஒரு புதிய அரசியற் சட்டம் ஒன்றை உருவாக்க, மக்கள் சபை உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒருமனதாக முடிவு செய்தது.

அவசரகால நிலையை நீடிப்பது என அரசாங்க பாராளுமன்றக்குழு முடிவு செய்திருக்கிறது.

தமிழ் மொழிக் கல்வி அபிவிருத்திக்கு ஒரு ஆலோசனைச் சபையை நியமிப்பது பற்றி கல்வி அமைச்சர் ஆலோசித்து வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், இம்மாதம் 17ம், 18 திகதிகளில், மட்டுநகரில் கூட விருக்கிறது.

கெய்ரோ வானொலியில், கூடியகெதியில் தமிழ் ஒலிபரப்பு ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கியூபா பிரதமர் திரு. பிடல்கஸ்ரோ சீனாவை மிகப் பலமாகக் கண்டித்திருக்கிறார். ரஷ்யாவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை கியூபா ராணுவத்தினருக்கு சீனா விநியோகித்து வருவதாகக் குற்றஞ்சாட்டிய அவர், பித்தலாட்டம், அயோக்கியத்தனம், சகோதரனைக் காட்டிக் கொடுத்தல், நம்பிக்கைத் துரோகம், விஷம் கொடுத்தல் ஆகிய கொடிய குற்றங்களைச் சீனா செய்து வருவதாக கூறியிருக்கிறார்.

சத்திர சிகிச்சையின்றி முறிந்த எலும்புகளைச் சேர்க்க ஒரு புது வைத்திய முறையை சீனர்கள் கண்டுபிடித்துள்ளதாக நவ சீன செய்தி ஸ்தாபனம் கூறியது

**பெப்புரவரி 8 செவ்வாய்க்கிழமை**

இலங்கைக்குப் புதிய அரசியலமைப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதில், அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணங்கியதைத் தொடர்ந்து, தமிழரசுக்கட்சி பாராளுமன்றக்குழு, அதனால் தமிழ் பேசும் இனத்துக்கு ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை ஆராய்ந்தது.

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட தமிழ் மொழி விசேட விதிகள், அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாயிருக்கின்றன.

தமிழ் மொழிச் சட்டத்தை நிறைவேற்றியது ஒரு மாபெரும் சாதனை என்று திரு. வி. என். நவரத்தினம் பா. உ. கூறியிருக்கிறார்.

தமிழரின் தியாகத்தில் கிடைத்ததே தமிழ் மொழிச் சட்டம் என்று உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் மானிப்பாயில் கூறினார்.

வியட்னாமில் தாம் உறுதியுடன் போர்புரியத் தயாராக இருப்பதாக, சனாதிபதி திரு. ஜோன்சன் கூறியிருக்கிறார்.

**பெப்புரவரி 9 புதன்கிழமை**

யூன் மாதம் தொடக்கம், கைத்தறித் துணிகளை இலங்கையில் இறக்குமதி செய்வதைத் தடை விதிக்க விருப்பதாக உள்நாட்டு அமைச்சர் அறிவித்துள்ளார்

திருமலைத் துறைமுகத்தை தீர்வையற்ற சுதந்திரமான வெளிநாட்டு வர்த்தகப் பிரதேசமாக்க வேண்டும் என்ற திட்டக்குழு அறிக்கையை திருமலைத் துறைமுக அபிவிருத்திக்குழு பரிசிலனை செய்து வருகிறது.

பர்மாத்தலைவர் நீவின் நாளைப் பிற்பகல் இலங்கை வருகிறார்.

**பெப்புரவரி 10 வியாழக்கிழமை**

சபாநாயகர் மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையில் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

அமைச்சர் சுகததாசாவைக் கொலை செய்ய நடைபெற்ற ஒரு சதி நிகழ்ச்சியை பொலிசார் அம்பலப்படுத்தியுள்ளதாக ஒரு செய்தி கூறியது.

வியட்னாம் சமாதான நடவடிக்கைகள் குறித்து வட வியட்னாம் சனாதிபதி ஹோ-சி மின்-டாக்டர் ராதா கிருஷ்ணனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

சந்திரனில் ராணுவத்தளங்களை அமைப்பதற்காக, இராணுவ வட்டாரங்கள் சந்திரனை ஆராய்ந்து வருவதாக சோவியத் பிரதிநிதி திரு, செம்யன்சரப்கின் கூறியிருக்கிறார்.

**பெப்புரவரி 11 வெள்ளிக்கிழமை**

பர்மியத்தலைவர் ஜெனரல் நீவின் நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார், உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வமுட்பட, பிரமுகர்கள் பலர் விமான நிலையத்தில் அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

வட பகுதியில் உபரியாக வெங்காயம் தேங்கிக் கிடப்பதாயும், பம்பாய் வெங்காயத்தைத் தடை செய்ய வேண்டுமென்றும் திரு. க. துரைரத்தினம் பா. உ. வர்த்தக அமைச்சரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு இயன்றவரை எல்லா நாடுகளும் உதவ வேண்டுமென பரிசுத்த பாப்பரசர் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்.

கடந்த வாரம் வியட்னாமில் 1835 பேர் மரணமடைந்திருப்பதாக யு. எஸ். அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

**பெப்புரவரி 12 சனிக்கிழமை**

இராமேஸ்வரத்திற்கு அலைகளினால் இழுப்புண்டு சென்ற இலங்கையைச் சேர்ந்த 17 மீனவர்கள், திரு. க. துரைரத்தினம் முயற்சியால் இராணுவத்தினர் உதவியுடன் மீண்டும் அழைத்து வரப்பட்டனர்

திபேத்தில் உள்ள மிகப்பழைய பௌத்த மடாலயங்களையும், கோவில்களையும் சீனர்கள் உடைத்து அட்டகாசம் புரிந்திருப்பதாக தலாய்லாமா கூறியிருக்கிறார்.

தாஷ்கெண்ட் ஒப்பந்தத்தை அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் பொதுக்குழு அங்கீகரித்தது.

---

## யாழ். மாவட்டத்தில்

# படித்த வாலிபர்களுக்கு நிலப் பங்கீடு

### புதிய வழக்கறிஞர்



யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்த சமாதான நீதவான் சுப்பிரமணியம் சதாசிவம் அவர்களின் மகன் லோகிஸ்வரன் அவர்கள் கடந்த வாரம் நீதியரசர் சிறிஸ்கந்தராசா அவர்கள் முன்னிலையில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

திரு. லோகிஸ்வரன் அவர்கள் கொழும்பு அக்குவைனஸ் பல்கலைக் கழகக் கல்லூரி, சிறீ சோமஸ் கந்தக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர். இவர் தமது மாணவ காலத்தில் கலை, கலாசார விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டுழைத்து வந்துள்ளார். பல கல்வி கலாசார மன்றங்களின் செயலாளராகவும், தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

சாந்திய சேவா சங்கம் நடாத்திய அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியொன்றில் பங்கு கொண்டு முதற் பரிசைப் பெற்ற இவர் 'புதுவை' என்ற புனை பெயரில் சிறுகதைகளும் புனைந்துள்ளார்.

விவசாயிகள், படித்த மாணவர்கள் கமத்தொழிற் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் ஆகியோருக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெற் குடியேற்றத்திட்டத்தில் காணி வழங்கப் படவிருக்கிறது விண்ணப்பங்கள் மார்ச்திங்கள் .0-ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் காணி கோரி முன்னர் விண்ணப்பம் அனுப்பியவர்கள் மீண்டும் புதிதாக விண்ணபபம் செய்ய வேண்டும்.

வவுனிக்குளம், தென்னியங்குளம், மருதங்குளம், முருகண்டிக்குளம் ஆகிய குடியேற்றத் திட்டங்களில் படித்த வாலிபர்களுக்கும், திருமணமான விவசாயிகளுக்கும் காணி வழங்கப்படவிருக்கிறது.

### அரசாங்க உதவிகள்

இத்திட்டத்தின் கீழ் காணி பெறுபவர்களுக்கு பின்வரும் உதவிகள் அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்படும்:

(அ) 1 கத்தி, 1 கோடரி 1 அலவாங்கு 1 மண்வெட்டி.

(ஆ) காட்டைவெட்டி எரித்துத் துப்பரவாக்க ஏக்கருக்கு ரூபா 100/-க்கு மேற்படாமல் வழங்கப்படும்.

(இ) வயற்காணியில் கட்டை பிடுங்குவதற்கு ரூபா 100/-வழங்கப்படும். தண்ணீர் கொடுத்த திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள் இவ்வேலையை முடிக்க வேண்டும்.

(ஈ) நெற்காணியில் வரம்பு கட்ட ஏக்கருக்கு ரூபா 40/- வீதம் கொடுக்கப்படும்.

(உ) குடியேற்ற வாசிகள் தாங்களாகவே அரசாங்கத்தின் விதிக்குட்பட 3 வருடங்களுக்குள் மாதிரிப் படத்தின்படி வீடமைக்கவேண்டும். வேலை முடிந்ததிற்கேற்ப உதவிப்பணம் கொடுக்கப்படும். இதற்குரிய ஆகக் கூடிய உதவிப்பணம் ரூபா 1000/ வேலை தொடங்கிய திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வீடு கட்டி முடிக்க வேண்டும்.

(ஊ) மாதிரிப்படத்தின்படி மலசலகூடம் கட்ட ரூபா 75/-கொடுக்கப்படும்.

(9-ம் பக்கம் பார்க்க)


**சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!**




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைபபோருககு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகைபிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

**யானை பீடி ஸ்பெஷல்**

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

**யானை பீடி கம்பெனி,**

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 7651

# முதலாளிகளின் எதிர்ப்புக்கு இலக்கான முதலாளித்துவவாதி

## பிரதமர் தேர்தலில் நடைபெற்ற திரைமறைவுச் சம்பவங்கள்

[சென்றவாரத் தொடர்ச்சி]

பிரதமர் பதவிக்கு திருமதி இந்திராவும், திரு. தேசாயுமே போட்டியிட்டார்கள்- போட்டியிட விரும்பினுர்கள் [illegible] வெளியுலகம் இன்று [illegible]றது. ஆனுல் போட்டியி[illegible] குதிக்க பலர் முயன்றிரு[illegible]கிருர்களாம். தற்காலிகப் பிரதமர் திரு. நந்தா பொதுத் தேர்தல் வரையிலாவது பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள முயன்ருராம். திரு. சவானும் முந்திக் கொண்டு நின்ருராம். இவர்கள் அனைவரையும் விட திருமதி இந்திராவின் மாமி திருமதி விசயலட்சுமியும் ஒரு கை பார்ப்பது என்று இருந்தாராம். என்ருலும் மாநில முதல்வர்களினதும், காங்கிரஸ் தலைவரினதும் கைமேலோங்கி நிற்பதை அறிந்ததும் அனைவரும் வெற்றிகரமாகப் பின்வாங்கி விட்டார்களாம்.

திருமதி இந்திரா காந்தியுடன் பாரத துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து தேசிய வீரர்கள் வரிசை அற்றுவிடலாம் என்று நம்பப்படுகிறது. இதிலும் உண்மையில்லாமலில்லை திருமதி இந்திரா ஐம்பது வயதுகூட நிரம்பப் பெருதவர். இவர் நீண்ட காலம் இப்பதவியில் தொடர்ந்திருக்கப் போகிருர். திரு. நந்தா, திரு. தேசாய் போன்றவர்கள் இன்று அறுபத்தைந்தையும் தாண்டியவர்கள். இன்னும் பல தேசிய வீரர்கள் அகவையில் மூத்தவர்களாக அமைச்சரவையில் இருக்கிருர்கள். அவர்கள் திருமதி காந்தியிலும் பார்க்க அனுபவம், அறிவு, தியாகம் அனைத்திலும் மேலோர்கள்.

இவர்கள் பாரத துணைக்கண்டத்தின் கூட்டுச் சேரா நடுநிலைக் கொள்கையை ஒழுங்கு முறையாகக் கடைப்பிடிப்பவர்கள். இவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கலாம்- கொடுத்திருக்கலாம் என்பது இன்று தீவிர அரசியலிருந்து ஒதுங்கியிருக்கும் காங்கிரஸ் தியாகிகளின் கருத்து என்று தெரிகிறது. இத்தகையவர்கள் திரு. நந்தாவையும், திரு. சவானையும் மனதில் வைத்தே இப்படிக் கருத்து வெளியிட்டுள்ளார்கள் என்று நம்பமுடிகிறது.

### முதலாளிகளும் எதிர்த்தனர்

திரு. தேசாய் முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்பவராகஇருந்த போதிலும், அவர் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவதை பல முதலாளிகள் விரும்பவில்லையாம். இதற்குக் காரணம் திரு. தேசாய் நிதியமைச்சராக இருந்த காலத்தில் அவர் கொண்டு வந்த தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டமே காரணம் என்று தெரிகிறது. இன்றைய நிலையில் திரு. தேசாய், திரு. நந்தா போன்றவர்கள் பாரத துணைக் கண்டத்தின் பிரதமர்களாக வருவதற்கு துளியும் இடமில்லை.

திருமதி இந்திரா நேருவின் மகள். காங்கிரஸ் தலைவரின் செல்லப்பிள்ளை. மாநில முதல்வர்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பவர். வயதில் இளையவர். ஆனுல் பதவியில் நெருக்கடியின்றி நிலைத்திருப்பாரா என்பதும் கேள்விக்குரியதே. நேரு காலத்திலும் அவருக்கெதிராக அவ்வப்போது திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றையெல்லாம் அவர் உடனுக்குடன் தகர்த்தெறிந்தார். எதிர்த்திட்டங்கள் நேருவைப் பொறுத்தவரையில் வெற்றிபெற முடியாது போனமைக்குக் காரணம் அவரின் சமர்த்தியம் மட்டுமல்ல, அவரின் பின்னணிச் சூழ்நிலைகளுமே காரணமாகும். இந்திராவைப் பொறுத்தவரையில் இத்தகைய எதிர்த்திட்டங்களையோ-சதித்திட்டங்களையோ எப்படி முறியடிப்பார் என்பது முக்கிய கேள்வியாகும்.

### அடுத்த தேர்தல்

அடுத்த பொதுத் தேர்தல் வரையும் திருமதி இந்திராவுக்கு எதிராக எத்தகைய நெருக்கடிகளும் உருவாக மாட்டாது என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. அடுத்த பொதுத்தேர்தலுடன் ஒரு சில மாநிலங்களிலிருந்து காங்கிரஸ் நிர்வாகம் கைமாறும் என்று பலரும் நம்புகிருர்கள். இதைக் காங்கிரசாரும் உணருகிருர்கள். காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் இதைத் தெளிவாக உணர்ந்திருக்கிருர். எனவேதான் அவர் திருமதி இந்திரா பிரதமராக வரவேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்ருர்.

மத்திய அமைச்சர்களும் ஒருசில மாநிலங்களில் காங்கிரஸ் நிர்வாகம் ஆட்டங்கண்டிருப்பதை உணர்ந்திருக்கிருர்கள். எனவேதான் பொதுத்தேர்தல் முடிகிற

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

வரையிலும் திருமதி இந்திராவுக்கு எதிராக நெருக்கடிகள் உருவாக மாட்டாது என்று அரசியல் அவதானிகள்கருதுகிருர்கள்.

திருமதி இந்திராவிடம் நிர்வாகத் திறமை உண்டா--இல்லையா என்று நாம் பிரச்சினைப்பட்டாலும், தேர்தற் தந்திரத்தை நன்கு உணர்ந்தவர் என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. 1946ம் ஆண்டு அவரின் தேர்தற் பிரச்சாரம் காங்கிரசுக்குப் பெரிய வெற்றியை ஈட்டிக்கொடுத்ததை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

கடந்த ஆண்டு தென்னுட்டில் குறிப்பாக சென்னை மாநிலத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த பொதுத் தேர்தலில் பெரிய பிரச்சினையைக் கொடுக்கப் போகிறது. பாகிஸ்தான் எல்லைக் கிளர்ச்சிக்குப் பின்னர் இப்பிரச்சினை மண்ணோடு மறைந்து விட்டதாக சிலர் கருதியிருக்கலாம். அந்த முடிவு தப்பானது என்பதை இருவாரங்களுக்கு முன்னரும் சென்னைச் சர்வகலாசாலை மாணவர்கள் உணர்த்தியிருக்கிருர்கள். மத்திய கல்வி அமைச்சர் ஐனுப் சாக்ளா அவர்களுக்கே மாணவர்கள் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி இப்பொழுதுஇரட்டை வேடம் போடத் தொடங்கியுள்ளது. இலங்கையில்உள்ள இடதுசாரிக் கட்சிகள் 1956 முதல் 1964 வரை நடந்து கொண்டது போலவே காங்கிரஸ் கட்சியும் வடக்கில் ஒன்றையும், தெற்கில் ஒன்றையும் கூறத் தொடங்கியுள்ளது. இந்தவிலாங்குவேடமும் நீண்டகாலம் பயன் கொடுக்காது. எத்தனை வேடங்களைக்காங்கிரஸ்கட்சி போட்டாலும் குறிப்பிடக்கூடிய சில தோல்விகளை இம்முறை பெறப்போவது என்னவோ தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

### சனநாயக சர்வாதிகாரி

மத்திய அமைச்சரவைக்குள்ளும் கட்டுப்பாடான உறுதியில்லை. இதை டி. டி. கே. ராஜினுமாச் செய்த பொழுது விடுத்த அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. எனவே, இந்திரா தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எப்பொழுதும்

(14ம்- பக்கம் பார்க்க)

# திரை மறைவில் தீயசக்திகள்

## இடதுசாரிகளுக்கு தமிழ் எம். பி. கள் உதவியா?

வட பகுதியிலுள்ள ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் திரைமறைவில் தேசிய அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனராம். சனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தம் மேற்கொள்ளுமாறு பகிரங்கமாகத் தூண்டிய ஒருவரை அரசாங்கம் இடமாற்றஞ் செய்ததாகவும் அந்த இடமாற்றத்தை இவர்களில் ஒருவர் தலையிட்டு நிறுத்தியுள்ளதாகவும் அறியப்படுகிறது. இதுபோன்று வேறு சில தகவல்களும் வெளியாகியுள்ளன.

தேசிய அரசாங்கத்தில் உறுப்பினராக இருக்கும் வடபிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் இப்பொழுது தேசிய அரசாங்கத்திற்கு விரோதமான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்களாம். கடந்த மாதம் 8-ம் திகதியன்று தமிழ்மொழி மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்யுமாறு பகிரங்கமாகவே யாழ்ப்பாணம் கச்சேரி வட்டத்தில் வேண்டுகோள் விடுத்த ஒரு தமிழ் அரசாங்கஊழியருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்த எம். பி. கள் சிலர் தலையிட்டு நிறுத்தியுள்ளார்களாம்.

இந்த அரசாங்க ஊழியர் சமசமாஜக்கட்சி ஆதரவாளராகவே இருந்து வந்திருக்கிருர். இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் அரசாங்க லிகிதர் சேவைச்சங்கத்தை கட்டிக்காக்க இவரே பகிரதப் பிரயத்தனம் எடுத்துவருகிருர். இவரின் 8-ம் திகதியநடவடிக்கையை எழுதுவினைஞர் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறதாம் அரசாங்கம் இந்த ஊழியரை உடனடியாக யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றும்வண்ணம் உத்தரவிட்டிருந்ததாம். உத்தரவு கிடைத்ததும் ஒருதமிழ் எம். பி. சம்பந்தப்பட்ட அரசாங்க ஊழியர் தங்கள் ஆதரவாளர் என்றும் அவரைப் பற்றிக் கூறப்பட்ட புகார் தவருனது என்றும் கூறி இடமாற்றத்தை ரத்துசெய்துள்ளாராம்.

இதேபோன்று வேறுசில இடதுசாரி ஆதரவாளர்களின் இடமாற்றத்திலும் குறிப்பிட்ட எம். பி. கள்தலையிட்டுள்ளார்களாம். இதனுல், யாழ்ப்பாணம் கச்சேரி இடதுசாரிகளின் ஒரு குகையாக இன்றும் விளங்குவதுடன், தமிழ்மொழி மசோதா அமுலிலும் முந்தகங்கள் விளையவாம் என்றும் நமது யாழ்ப்பாண நிருபர் எழுதியுள்ளார்.

வேறுசில விடயங்களிலும் இந்த எம். பி. கள் தேசிய அரசாங்கத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிருர்கள் என்று நமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

## என்னைநாடி வந்தாள்

"அண்ணல்"

கலையோடு உயிராகிக் கலந்தோடக் கண்டேன்—அவள்
கண்ணேடி என்னைநாடிக் கதைபேச உண்டேன்
சிலையாகி நடமாடி மயிலாகி நின்ருள்—என்
சிந்தைக்குள் விளக்காகிச் சுடர்பாய்ச்சி வென்ருள்.

வானத்து நிலவென்னும் வதனத்தைக் காட்டி—அதில்
வழிகின்ற ஒளிவெள்ள நகைசேர்த்து நீட்டி
தேனைத்தன் இதழுக்குள் ஊற்றுகச் சாட்டி—அவள்
தருகின்ற தமிழ்ப்பேச்சில் அமிழ்தத்தை ஊட்டி

கவிதைக்குள் எமைகின்ற சுவையாகி வந்தாள்—தெய்வக்
கருணைக்குப் பொருளாகிக் காதலைத் தந்தாள்
புவிநின்று நயக்கின்ற கனியாகச் செந்தாள்—உயர்
பொறுமைக்கு இலக்காக வடிதூக்கி வந்தாள்.

இடைமின்னற் கொடியாட எழிலாகி நின்ருள்—வானத்
தெழுவில்லின் இயலாகி இதயத்துட் சென்ருள்
சடைபின்னல் உருவாக்கி விளையாடி வந்தாள்—அந்தத்
தமிழ்கண்ட புகழ்வெள்ளம் என்னைநாடி வந்தாள்.

வருகின்ற புதுவெள்ளம் வழிகின்ற இன்பம்—இனி
வரட்சியிற் துடிக்கின்ற பயிருக்கென் துன்பம்
தருகின்ருள் உயிர்கொண்ட நெறிகொண்டு கொண்டு
—தெய்வத்
தமிழுக்குத் துணையாவேன் அதையுண்டு உண்டு

உயிருக்குள் உறவாகி உரமாகி வந்தாள்—இந்த
உலகுக்கு உயிரின்பம் உருவாக்கித் தந்தாள்
மயிருக்கு விலைபேசும் மனிதர்க்குள் அண்டாள்—அவள்
மணிவாக்கை ஒளியாக்கும் மனத்துக்குள் நின்ருள்.

சுவையள்ளி வந்திங்கு தருகின்ருள் கோடி—வாழ்க்கைச்
சூத்திர ஒழுங்கெல்லாம் வளமாகத் தேடி
நவையற்ற அமிழ்தான பொதிகைத் தேன்தமிழால்—தன்னை
நாடார்கள் தமைஎள்ளித் தூவென்றே உமிழ்வாள்.

**'மாய ஜோதி' ஊது பத்திகள்**

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்!
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

**'இலவசம்'! 'இலவசம்'!!**

உத்தியோகத்தில் உயர்வு பெற, எதிரிகளை அடிபணியச் செய்ய, எதிர்பார்க்கும் இளைஞன்—இளம் பெண் மனதை வெல்ல, வயது வந்தோரின் விருப்பத்தைப் பெற முதலிய எப் பிரச்சினையும் எம்மால் நீங்க வேண்டுமா?

இன்றே கேளுங்கள்

**பண்டார மந்திராச்சாரியார்**

அன் கம்பெனி,

தலாவ (வழி) அநுராதபுரம்.

# தன்மொழித் திணைக்களமும் தமிழ்மொழி பெயர்ப்புக்களும்

தாய் மொழிக் கல்வி பல்கலைக் கழகம் வரை பரவி விட்டது. மேல் வகுப்பு மாணவர்களின் கல்வி வசதிக்கு ஏற்ப பிறமொழி நூல்கள் உடனுக்குடன் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இலங்கையில் பிறமொழி நூல்களை தமிழில் மொழி பெயர்க்கும் பொறுப்பு தன்மொழி (அரசகரும மொழி)த் திணைக்களத்தினுடையதாகும். தமிழ் நாட்டிலும் இதே பிறமொழி நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. இரண்டும் தமிழ் மொழி பெயர்ப்பே. என்றாலும், மொழி பெயர்ப்பில் வேறுபாடு. மொழிபெயர்ப்பு நூல்களின் விலையில் வித்தியாசம். நமது நாட்டு மாணவர்கள் தமிழ் நாட்டு மொழி பெயர்ப்பு நூல்களை நாடியோடுகிறார்கள். பொருளை எளிதாக விளங்கிக் கொள்ள தமிழ் நாட்டு நூல்களே மாணவர்களுக்கு உதவியாக இருக்கின்றன. ஈழத்து மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வதிலும் பார்க்க மூல நூல்களைப் படித்துப் புரிந்து கொள்வது சுலபம் என்கிறார்கள் மாணவர்கள். "இந்தியாவின் மொழிபெயர்ப்பு மாணவர்களுக்கு சுயமொழிக் கல்வியில் ஆர்வததை ஊட்ட இலங்கையின் மொழி பெயர்ப்பு சுயமொழி மூலம் கற்பதில் ஆர்வத்தை இழக்கவே செய்கிறது" என்கிறார் கட்டுரையாசிரியர். தமிழ் மொழி பெயர்ப்பை எங்ஙனம் சீர்படுத்த வேண்டுமென்பதற்கும் ஆசிரியர் இங்கு வழி கூறியுள்ளார்.

—o—

## தாய் மொழி மூலம் உயர்தரக் கல்வி சாத்தியமா?

கே. எம். எச். காலிதீன்

ஒரு நாடு தேசிய ரீதியில் எழுச்சியுறும் பொழுது அந்நாட்டின் தனித்தன்மையை மேலோங்கச்செய்ய அரசியலாளர் மட்டுமல்ல அறிஞர்களும் முன்னிற்றல் இயல்பு. தேசிய எழுச்சி நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு, இலக்கியம் மொழி இன்னோரன்ன வற்றை பாதிக்கும தன்மை வாய்ந்தது. இவ்வெழுச்சி இல்லையேல் முன்னேற்றம் என்பது மிகக்குறைதலாகவே காண நேரிடும். இம்முன்னேற்றங்கள் ஆரம்பத்தில் சில இடையூறுகளை எதிர்நோக்கிய போதும், அது அளவுடன் இருந்துவிட்டால் படிப்படியாக அதன் செல்வாக்கு அதிகரிப்பது கண்கூடு. மொழியில் மலர்ச்சி ஏற்படும் பொழுது அம்மலர்ச்சிமூலம் மொழி பல்வேறு துறைகளில் அதன் செல்வாக்கைப் பெருக்க முனைகின்றது. இதுவேதான் வரலாற்று உண்மையும்கூட.

### மொழியும் தாய்மொழியும்

மொழி என்று நாம் கூறும் பொழுது ஒவ்வொரு நாட்டிலும் அல்லது தேசத்திலும் பல்வேறு இனமக்கள் பல் வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர். அவற்றில் சில செல்வாக்குப்பெற்றும், இன்னும் சில செல்வாக்குக் குறைந்தும் காணப்படுகின்றன. சில மொழிகள் பேச்சு வழக்கில் மட்டும் இருக்க மற்றவை இலக்கிய வழக்கையும் பெற்றுள்ளன. மனிதனது சிந்தனைக்குக் களமாக அமைவது அல்லது சிந்தனைகளை வெளியிடு சாதனமாக அமைவது அவன் பேசும் மொழியாகும். ஒருவனுக்குப் பல மொழிகள் தெரிந்திருந்த போதும் உண்மையில் அவன் சிறந்த கல்வியைப் பெறுவது அவனது தாய்மொழி மூலம் என்பது உளவியலாளர் கருத்து. ஒருவனது சிந்தனை அவனது தாய்மொழியிலேயே அமைவதை சிலஎடுத்துக்காட்டுமூலம் உணரலாம்.

மொழி வரலாறு எனும் நூலில் கலாநிதி மு. வ. அவர்கள் குறிப்பிடுகையில் 'தாய் மொழியைக் கற்கும் போது கல்வி ஒரு சுமையாக இருப்பதில்லை. தேவையே கற்கத் தூண்டுவதால், கல்வி எளிதாகின்றது. மூளையில் வேறு சுமைகள் சேர்ந்து நெருக்காத இளமையில் தாய்மொழிபதிந்து விடுவதால் என்றும் நீங்காமல் நிலைபெறுடையதாகின்றது, தாய்மொழிக் கல்வியில் சொற்களைப் பொருள்களுக்கு நேரே இயக்கும் இயற்கையான நன்முறை வாய்ந்திருக்கின்றது. பிறமொழி கற்கும்போது ஒருமொழிச் சொற்களோடு இன்னொரு மொழியின் சொற்களை இயைத்துக் கற்கும் செயற்கையான முறையே உள்ளது. தாய்மொழியில் மரம் எனும்போது மூளை நேரே கவரும் இலையுமாக வளர்ந்த இயற்கைப் பொருளைக் கருதுகின்றது. ஆங்கிலத்தில் ட்ரீ (Tree) எனும் சொல்லைக் கருதும்போது உடனே மரம் எனும் வேறொருசொல்லின் தொடர்பே ஏற்படுகின்றது. ஆதலின் இடர்ப்பாட்டுடன் அவற்றைக் கற்கவேண்டியுள்ளது' எனக் குறிப்பிடுகின்றார். இக்கூற்றில் இருந்து நாம் விளங்கிக்கொள்வது யாதெனின் முன் கூறியமை போன்று தாய் மொழியில் தான் சிந்தனையை விரிவாக விளக்கமுடியும் என்பதாகும்.

தமிழ்மொழியில் ஒரு கம்பனைப்போன்றும், ஆங்கிலத்தில் ஒரு செகப்பிரியரைப் போன்றும் இவ்வாறே ஒவ்வொரு மொழியிலும் சிறப்புற்று விளங்கும் அறிஞர்கள் அவர்களது தாய்மொழிச் சிந்தனைதான் அவர்களைசிறப்புற வைத்ததேஅன்றி, அவர்கள் தாய்மொழியை விட்டு இன்னோர் மொழியில் தங்களது சிந்தனைகளை, அவை போன்று அழகாக வெளியிட்டிருக்க முடியாதென்ற உறுதியையும் எமக்கு ஏற்படுத்துகின்றது. இதுதான் தாய்மொழியின் முக்கியமுமாகும். ஆகவே தாய்மொழியின் பிரதான முக்கிய அம்சத்தை அறிந்த நாம் உயர்தரக் கல்வியைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

### தாய்மொழியும் உயர்தரக் கல்வியும்

ஆரம்பத்தில் கூறிய அது போன்று எழுச்சிகள் தேசியத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது கண்கூடாக இருந்தபோதும் சில சமயங்களில் அவ்வெழுச்சிகள் தீய சக்திகளுடன் இணையும் போது தீமை பயப்பதும் உண்டு. ஒன்றில் பற்று அதிகரிக்கப்படும்போது மற்றவற்றைப் புறக்கணிப்பது தவறு என்றே பெரும்பாலும் கணிக்கவேண்டிய சந்தர்ப்பம் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு. இதை எதற்காகக் கூறினேனென்றால் தாய்மொழியில் பற்றுவைக்கும் ஒருவர் மற்ற மொழியைப் புறக்கணிப்பது சில சமயங்களில் தவறாகி விடுகின்றது என்பதை உணர்தற்கேயாகும். உதாரணமாக சிங்களத்தை தாய்மொழியாகக்கொண்டு கற்கும் மாணவனொருவன் ஆங்கிலத்தைப் புறக்கணித்தால் அவன் ஒருவகையில் நட்டமடையவே செய்வான் என்பது வெளிப்படையல்லவா? இதுவே தமிழுக்கும் பொருந்தும்.

தாய்மொழிமூலம் உயர்தரக்கல்வி பெறுவதால் இரு விதங்களில் நன்மையை முக்கியமாக எதிர்பார்க்கலாம். ஒருவகையில் மாணவன் தன் அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், அதைப் பிறருக்கு இலகுவில் விளங்கிக்கொள்ள மாறு புலப்படுத்தவும், விளக்கம் கொடுக்கவும் முடிகிறது. மற்றவகையில் மொழியில் புதுச்சொற்கள் தேவைப்பட நேரிடும்போது பிறமொழிகளில் இருந்து கடன் வாங்குவதன் மூலமும், கலைச்சொற்களைச் சேர்த்து புதுச்சொற்கள் உண்டாகுவதன் மூலமும் மொழியை வளர்க்கலாம். ஆங்கில மொழியை நாம் எடுத்து ஆராய்ந்தால் பெரும்பாலும் முதற்கூறிய காரணத்துடன் (கடன்வாங்கல்) தொடர்புபட்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆகவே அவர்கள் (ஆங்கிலேயர்) தங்கள் மொழியை தாம்சென்ற தேசங்களுக்கும் நாடுகளுக்கும் கொண்டு சென்று அதன் மேன்மையைப் பரப்பியதுமன்றி அவ்வனுடுகளின் மொழிகளில் உள்ள சொற்கள் சிலவற்றை முக்கியமாகக் கண்டபோது தம் மொழிகளுடன் சேர்த்துக்கொள்ளத் தயங்கவுமில்லை, இதுபோன்றுதான் தேசிய மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்போது அம்மொழிகள் முக்கியத்துவம் அடைவது மாத்திரமல்ல அம்மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட மாணவர்களின் கல்வித்தரம் கூடுவதுடன் அந்நாட்டின் கல்வித்தரமே உயர்நிலை அடையக்கூடிய சூழலும் அங்கு ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. இந்த நிலையில் மொழியில் மாற்றம் ஏற்படக்கூடாது. எல்லாம் ஒவ்வொரு மொழியின் தன்மையிலேதான் அமையவேண்டும்.

இன்னோர் மொழியில் இருந்து கடன்வாங்கல்தவறு என வாதிப்போரும் உளர். மனிதனது சிந்தனைகளே, காலத்துக்காலம் மாறி புதுக் கருத்துக்கள் நுழையும்போது மொழியியலிலும் மாற்றம் ஏற்படாது அல்லது கூடாது என்ற கருத்து எவ்வளவு தவறு என்பதற்கு எமக்குவரலாறுகள் விளக்கம் தருவதை உணர்தல்வேண்டும். அடிப்படை உண்மைகள் ஓர நிலையில் இருக்க அதை யொட்டிய கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் எவ்வாறு மாற்றம் அடைகின்றனவோ அதுபோன்றே மொழியியலிலும் மொழிக்கு அடிப்படையான எழுத்துக்களில் மாற்றம் ஏற்படாதபோது சொற்கள், கருத்துக்கள் இவைகளில் மாற்றம் ஏற்படுவதை மொழியியல் வரலாறு எமக்குணர்த்தத் தவறுவதில்லை. சுருங்கக்கூறின் சிந்தனை வளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் தாய்மொழிக் கல்வி முக்கியம் பெறுகின்றது; எனக் கூறுவது அறிஞர் கண்ட அனுபவ மூல உண்மையாகும். ஆகவேபல்கலைக் கழகங்களில் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிப்பது இங்கு அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும்.

### தமிழும் உயர்தரக் கல்வியும்

இலங்கையில் இன்று, பெரும்பாலும் இரு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டமக்கள் வாழ்கின்றார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். ஆகவே தற்போது ஆரம்பக் கல்வி முதல் பல்கலைகழகக் கல்விவரை இவ்விரு மொழிகளுக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துள்ளதையும் நாம் அறிவோம். இவை குறிப்பாக தேசியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த ஒரு பகுதியினரின் சேவையாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் இதுவரை ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆங்கிலத்தால் தான் எதையும் சாதிக்கமுடியும் என்ற எண்ணம் கொண்ட சிலரின் போக்கே இம்மாற்றத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்ற மொழியாக விளங்கும் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதென்பது தவறு என்பதை உணர்தல் அவசியமானபோதும் போதனை மொழிகளாக சிங்களமும் தமிழும்தான் இருக்கவேண்டும் என்பதும், ஆங்கிலமும் அறிந்திருத்தல் அவசியம் என்பதும் அறிஞரின் பொதுக் கருத்தாகும்.

தமிழ் மொழி மூலம் உயர்தரக் கல்வி கற்கக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றதை அறிந்துதான இந்தியா, இலங்கை போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் அல்லது தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் தமிழைப் போதனு மொழியாகக் கொள்ளப்பட்டு முக்கியத்துவம் பெற்று வருவதை நாம் அறிவோம். இது இந்தியாவில் முக்கியத்தும் அடைந்து கலை, அறிவியல் ஆகிய துறைகளுக்கும் பரவி நமது கவனத்தை ஈர்ப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதே கொள்கையை இலங்கை பின்பற்றிய போதும் அதனைச் செயல் முறையில் கடைப்பிடிப்பதில் தான் வித்தியாசத்தை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் மொழி பெயர்க்கப்படும் நூல்களுக்கும் இந்தியாவில் மொழி பெயர்க்கப்படும் நூல்களுக்கும் மொழி[illegible]ப்பு தலையில் அதிக வி[illegible]ாசத்தை காணக் கூடிய[illegible]க இருக்கின்றது. இந்[illegible]யாவின் மொழி பெயர்ப்பு மாணவர்களுக்கு சுயமொழிக் கல்வியில் ஆர்வத்தை ஊட்ட இலங்கையின் மொழி பெயர்ப்பு சுயமொழி மூலம் கற்பதில் ஆர்வத்தை இழக்கவே செய்கின்றது. இது மறுக்க முடியாத உண்மையாகும். அதுமட்டுமன்றி ஒரு ஆங்கிலப் புத்தக மொழி பெயர்ப்பை இந்தியாவில் இருந்து பதினொரு ரூபாவுக்கு வாங்கும்போது இலங்கையில் அதன் விலை இருமடங்காகவோ அல்லது சில சமயங்களில் இரு மடங்கிற்கும் அதிகமாகவோ விலை கூடியிருப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைதான் தொடர்ந்து நீடிக்கும் என்று சுருதினல் இலங்கையில்மொழிபெயர்ப்பாகும் புத்தகங்கள், தேங்க வேண்டிய நிலை ஏற்படலாம். தற்போதுகூட மொழி பெயர்ப்பை விளங்கிக் கொள்ள முடியாத மாணவர்கள் இந்திய வெளியீடுகளையே வாங்கிப் படிக்கின்றனர். உண்மையாகக் கூறப்புகின் விலையைப் பற்றி மாணவர்கள் அக்கறை கொண்டுள்ளனர், ஆகவே தான் இலங்கையில் வெளியாகும் புத்தகங்களை வாங்க மறுக்கின்றனர் என்று மொழி பெயர்ப்புப் பகுதி கருத்துக் கொண்டிருந்தால அது தவறு. உண்மையில் அவர்களின் மொழி பெயர்ப்பை விளங்குவதை விட ஆங்கில நூலை வாசித்து விளங்கிக் கொள்வது இலகு எனக் கருதுபவர்கள பல்கலைக் கழகத்தில் பெரும்பான்மையாக உள்ளனர்.

மொழியை வளர்க்க வேண்டுமெனில் தேவைப்படும் சொற்கள்பிறமொழிச் சொற்களாக இருப்பின் நமது தேவைக்கேற்ப முக்கியமானவற்றைப் பிற மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு ஆக்குதலில் தவறில்லை. இதனால் எமது மொழிக்கு இழுக்கு ஏற்படும் என்று கருதுவதற்கும் இடமில்லை. இதைதத் தன்மொழி இயல் அறிஞர்களும் வற்புறுத்துவர். இலக்கண நூல் வகுத்தோரும் குறிப்பாக தொல்காப்பியம் முதல்,பின் வந்த இலக்கண நூலாரும் இதையே கூறுகின்றனர். தொல்காப்பியர் இதைப்பற்றிக் கூறும் பொழுது,

"வட சொற் கிளவி
வட வெழுத் தொரீஇ
எழுத் தொடு புணர்ந்த
சொல்லாகும்மே"

எனக் கூறும்பொழுது காலத்திற்கேற்ப வழக்குகள் மாறுபடும் உண்மையை வலியுறுத்தியுள்ளார்.

தொல்காப்பியத்துக்குப் பின் வந்த நன்னூலார் கூட இதை வலியுறுத்தத் தவறவில்லை. வட மொழியும் தமிழும் சமத்துவத்துடன் கணிக்கப்பட்ட சோழர் காலத்தில் சிறந்த இலக்கியங்கள் ஏழ விசயநகர நாயக்க மன்னர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை போற்றுமல் விட்டதற்கு அவர்கள் கையாண்ட நடைதான் முக்கிய காரணம் என்பதை நாம் அறிவோம், ஏன் இதை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் மொழி பெயர்ப்புப் பகுதியாரின் நடையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கே யாகும். வ—

(14-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN

1966 பெப்ரவரி மாதம் 19-ந் தேதி

194 ஏ. [illegible]டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை[illegible] எண் - 3411 த. பெ. 1183

# கோரிக்கையின் பின்னணி

இலங்கை சுதந்திரம் பெற்று 18 ஆண்டுகளுக்குப் பின்னர், மக்கள் பிரதிநிதிகளால் நாட்டின் எதிர்கால நலனை முன்னிட்டு ஓர் அரசியற் திட்டம் தயாரிக்கப்படுவதை எல்லா அரசியல் வட்டாரங்களும் வரவேற்கின்றன. அத்தகைய ஓர் அரசியற் சட்டம் நாட்டில் ஜனநாயக வளர்ச்சிக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிப் பிடிப்பிலிருந்து பூரணமாக விடுதலை பெறுவதற்கும் அத்தியாவசியமென்பதில் இருவித கருத்துக்கள் கிடையா.

சுதந்திரமாக ஆட்சி புரிய இந் நாட்டுக்கு அனுமதி வழங்கியவர்களே ஓர் அரசியல் அமைப்பையும் ஆக்கித் தந்தனர். அது தற்காலிகமானதே. சில ஆண்டுகளுக்கு முன்பே இந் நாட்டு மக்கள் தங்களுக்கென பூரணமான ஓர் அரசியற் சட்டதை திட்டியிருக்கலாம். இந்தியா சுதந்திரம் பெற்றதும் ஓர் அரசியல் நிர்ணய சபையை நிறுவி ஒரு சிறந்த அரசியற் சட்டத்தை உருவாக்கிக் கொண்டது. அந்நாட்டில் இன்று ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு அந்த அரசியற் திட்டமே அடிப்படையாக அமைந்துள்ளது. ஆயினும் இலங்கை அவ்வாறு செய்யவில்லை. இங்கு கட்சிப்பூசல்களும், சிறுபான்மையோரின் உரிமைகளை நசுக்குவதால் அரசியல் இலாபம் பெறும் குறுகிய தேசிய வாதமும் எவ்வளவு தீவிரமாக வளர்ந்துவிட்டதென்றால், அரசியல் நிர்ணய சபையை நிறுவி, ஒரு புதிய அரசியற் சட்டம் தீட்டும் முயற்சி ஒரு புறமிருக்க—தற்போதைய அரசியற் சட்டத்தால் ஒரு சில திருத்தங்களைக் கூட செய்ய முடியாமல் போயிற்று.

எந்த உபாயத்தைக் கொண்டாவது பாராளுமன்றத்தைக் கலைத்து ஒரு பொதுத் தேர்தலை நடத்த முயற்சி செய்து கொண்டிருக்கும் எதிர்க் கட்சியினர் ஒரு வழக்குத் தீர்ப்பையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்றனர். இலங்கை பூரண சுதந்திரம் பெறவில்லை என்றும், சுதந்திர ஆதிபத்திய உரிமையைப் பெறுவதற்காக ஒரு புதிய அரசியற் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்றும், அதனைச் செய்ய பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு ஓர் அரசியல் நிர்ணய சபையைத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் அவர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே கிளர்ச்சி செய்தனர்.

இக் கிளர்ச்சிக்கு பதிலளிக்கு முகமாகவே, இரு சபைகளும் விரும்பினால் தற்போதைய பாராளுமன்றமே அரசியல் நிர்ணய சபையாகச் செயற்படலாமென்று சபைத் தலைவர் திரு. சில்வா யோசனை கூறினார். இதனால் எதிர்க் கட்சிகளின் அந்த முயற்சியும் பலிக்கவில்லை. சுதந்திரம் பெற்றதும் ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியிருக்கலாம். அதனைச் செய்யத் தவறிவிட்டனர். இப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டதால், அந்தப் பணியை ஒரு பொறுக்குக் கமிட்டியே நிறைவேற்ற முடியும்.

அரசியற் சட்டத்தைத் திருத்தி அமைப்பதையே ஆதரித்து வந்த எதிர்க் கட்சியினர் திடீரெனத் தங்களின் கொள்கையை மாற்றிக் கொண்டு, புதிய அரசியல் சட்டம் வேண்டுமெனக் கோருவதின் மர்மமென்ன? இதில் ஓர் உள்நோக்கம் இருக்கிறதென்பது அவர்கள் சிங்கள மக்களிடையே நடத்திய பிரசாரத்திலிருந்து ஊகிக்கலாம்.

29வது சரத்து அரசியற் சட்டத்திலிருந்து அகற்றினாலன்றி சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாதென அவர்கள் பிரசாரம் செய்தனர். பாராளுமன்றத்தால் அந்தச் சரத்தை திருத்த முடியாது. ஆகவே முழு அரசியற் சட்டத்தையே அகற்றிவிட வேண்டுமென்று அவர்கள் மக்களிடம் கூறினர். புதிய அரசியற் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையின் பின்னணி இதுதான்.

எனவே அவர்கள் நன்னோக்கத்துடன் புதிய அரசியற் சட்டமொன்றினைக் கோரவில்லை என்பது தெளிவு. இதுவும் அவர்களின் அந்தரங்க நோக்கத்தை அடைவதற்கான ஓர் உபாயமென்றே கருதலாம்.

29-வது சரத்தை நீக்குவதின் மூலமும், மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் சரத்தொன்றினைப் புதிய அரசியற் சட்டத்தில் இடம் பெறாமல் தடுப்பதின் மூலமும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை அபகரிப்பதுடன், பௌத்த சிங்களவர்களின் உரிமைகளை மீட்டுக் கொடுத்து விட்டதாகப் பிரசாரம் செய்வதும் எதிர்க்கட்சியின் நோக்கமாகும். எதிர்க்கட்சியிலுள்ள மார்க்சீய வாதிகளைப் பொறுத்தவரையில், பௌத்த உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர்களுக்கு விசேட அக்கறை எதுவும் கிடையாது. காரணம் மார்க்சியவாதிகள் மதவிரோதிகளாக இல்லாவிட்டாலும், மதச் சார்பற்றவர்களாக இருப்பதுதான். அவர்களின் நோக்கமெல்லாம் புதிய அரசியற் சட்டம் உருவாக்கும் முயற்சியை அரசாங்கத்தை வீழ்த்த எப்படி பயன்படுத்தலாம் என்பதே தவிர, பௌத்த உரிமைகளைப் பெறுவதன்று.

புதிய அரசியற் சட்டத்தின் மூலம் சிங்கள பௌத்தர்களிடையே ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஒரு சங்கடமான நிலையை உண்டாக்குவதும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையேயுள்ள சுமுக உறவைக்கெடுத்து இரு கட்சிகளிடையே மனக்கசப்பை ஏற்படுத்துவதும், அதன் மூலம் தேசிய அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதுமே மார்க்சிய வாதிகளின் திட்டமாகும்.

உதாரணமாக புதிய அரசியற் சட்டத்திலே சேர்ப்பதற்காக எதிர்க் கட்சியினர் கொண்டுவரும் குறிப்பிட்ட ஒரு சரத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தால், கட்சி சிங்கள பௌத்தர்களின அதிருப்திக்கு ஆளாக வேண்டியிருக்கும், அச்சரத்தை ஆதரித்தால் தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டிருக்கும். இத்தகைய ஒரு சங்கடமான நிலைக்கு ஐ. தே. கட்சியைத் தள்ளி, தேசிய ஆட்சியைச் சிதைப்பதற்கே மார்க்சீய வாதிகள் புதிய அரசியற் சட்டம் கோருகின்றனர். எனவே இது பற்றி ஐ. தே. கட்சியினர் விழிப்புடனிருக்க வேண்டியது அவசியமாகும்.

உத்தேச அரசியற் திட்டம் இந்த நாட்டில் சனநாயகம் தழைத்தோங்கவும், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அடிப்படையாக அமைதல் வேண்டும். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அச்சட்டம் உத்தரவாதமளித்தாலன்றி, சனநாயகத்தின் வளர்ச்சிக்கு இடம் கிடைக்காது. ஆதலின், மக்களின் உரிமைச்சாசனமொன்று அரசியற் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில், புதிய அரசியற் சட்டம் இந்நாட்டில் சர்வாதிகாரம் தோன்ற வழிவகுக்கக் கூடியதாகவே இருக்குமென்று சனநாயக சக்திகளை எச்சரிக்கின்றோம்.

# வட-கிழக்கின் அரசியல் அந்தஸ்து உயருமா?

கடந்த பல ஆண்டுகளாக வட-கிழ் மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்து வந்திருக்கின்றன என்பதைக் கடந்த வாரம் இப் பந்திகளில் குறிப்பிட்டிருந்தோம். பொருளாதார நிலையில் மட்டுமின்றி, அரசியல் அந்தஸ்த்து நிலையிலும் இப் புறக்கணிப்பு இருந்து வந்திருக்கிறது.

இலங்கைக்கு விஜயம்செய்யும் எந்த வெளிநாட்டு இராசதந்திரிகளையும் வட—கிழ் மாகாணங்களுக்கு அழைத்துச் சென்றது கிடையாது. அன்றைய நாட்டுப் பிரதமரான ஆசிய ஜோதி அமரர் நேரு இலங்கைக்கு வந்த சமயங்களில் எல்லாம அவரைப் பார்ப்பதற்கு, அவரின் பேச்சை நேரிடையாகக் கேட்பதற்கு வட-கிழ் மாகாண மக்கள் விரும்பினார்கள். ஆனால் பதவியிலிருந்த கட்சிகள் வட-கிழ் மாகாண மக்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டன.

முன்னரும் இங்கிலாந்து நாட்டு அரசி இலங்கைக்கு வருகை புரிந்தபொழுது வட-கிழ் மாகாண மக்கள் அவரைப்பார்க்க விரும்பினார்கள். ஆனால் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இது போன்ற அனேக சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

பதவியிலிருந்த ஆட்சியாளர்கள் வட-கிழ் மாகாணங்கள் ஏதோ தீண்டத்தகாதார்-பார்க்கத்தகாதார் இருப்பதாகவே கருதியிருந்திருக்கிறார்கள். சட்டப்படி உடலைவிற்றுச் சீவியம் நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நாடுகளில் அங்ஙனம் தொழில் நடாத்துபவர்கள் வசிக்கும் இடத்தை 'சிவப்பு விளக்கு'ப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தியிருப்பார்கள். இதேபோன்றுதான் கடந்த காலங்களில் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள், வட-கிழ்மாகாணங்களையும் ஓரளவு சிவப்பு விளக்குப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள் என்று கூறினால் தவறாகாது.

### வேதனைக்குரியது

நாடு விடுதலைபெற்ற நாட் தொடக்கம் தமிழ்பேசும்மக்கள் பூரணமாக எந்த அரசாங்கத்திற்கும் ஆதரவு கொடுக்காத நிலை நீடித்த காரணத்தினால் ஆட்சியிலிருந்தவர்களும் வட-கிழ் மக்களைப் புறக்கணித்திருக்கலாம். இன்று நிலைமை மாறியுள்ளது. வட-கிழ் மாகாண மக்கள் பதவியிலிருக்கும் தேசிய அரசாங்கத்தை நூற்றுக்கு நூறுவீதம் ஆதரிக்கிறார்கள். எனவே இன்றும் பழைய சிவப்பு விளக்குப் பிரதேசமாக வட-கிழ் மாகாணங்கள் கருதப்படுவது வேதனைக்குரியதாகும்.

பர்மிய முதல்வர் திரு. நீவின் அவர்கள் இலங்கையில் பல பாகங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். ஆனால், வட-கிழ் மாகாணங்களின் எல்லைக்குத்தானும் அவர் கூட்டிச்செல்லப்படவில்லை. இதற்கு நாம் தேசிய அரசாங்கத்தைத் தனியாகக் குறைகூறவிரும்பவில்லை. திரு. நீவின் அவர்களை வட-கிழ் மாகாணங்களுக்கும் அழைத்துவரும்படி யாரும் இதுவரை அரசாங்கத்தைக் கேட்கவில்லை, தமிழ்ப் பிரதிநிதிகள் தானும் கேட்கவில்லை. அதற்குச் சில காரணங்களும் இருக்கலாம்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

வட-கிழக்கு இலங்கை மக்களிலும் பார்க்க தென்னிலங்கை மக்கள் திரு நீவின் மீது அதிகஅபிமானம்கொண்டிருக்கலாம். அவர் ஒரு பௌத்த நாட்டு முதல்வர் என்ற காரணத்தால் பௌத்தர்கள் அவரைப் பார்ப்பதற்கு அதிகம் விரும்பலாம். இக்காரணங்களால் திரு. நீவினின் வட-கிழ மாகாண விஜயம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், இத்தகைய சிறு தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறாது இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

### பிரதமர் கவனத்துக்கு...

இச்சந்தர்ப்பத்தில் பிரதமரின் கவனத்திற்கு ஒரு விடயத்தைச் சமர்ப்பிக்கவிரும்புகிறோம். பாரதநாட்டு முதல்வர் திருமதி இந்திராகாந்தி அவர்களை இலங்கைக்கு திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் அழைத்திருக்கிறார்கள். திருமதி இந்திரா இலங்கை வரும்பொழுது முன்னைய அரசாங்கம் இழைத்த தவற்றை மீண்டும் தேசிய அரசாங்கம் இழைக்காது, ஒரு விரிவான நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்து அவரை வட-கிழ் மாகாணமக்கள் அனைவரும் காணக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இதுவரை இலங்கைக்குவந்த இராசதந்திரிகள் எவரையும் விட திருமதி இந்திராவைப் பார்ப்பதற்கு வட-கிழ் மாகாணமக்கள் பெரிதும் விரும்புவார்கள். எனவே, அவர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய தேசிய அரசாங்கம் குறிப்பாக பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள்தவறிவிடக் கூடாது என்பதை இப்பொழுதே நினைவூட்டிவைக்க விரும்புகிறோம்.

# தமிழ் ஒழிப்புக்கு தடை வேண்டும்

அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றும் சிங்கள வெறிமிக்க கீழ்மட்ட ஊழியர்கள் ஒருவகைப் புதுப்போராட்ட இயக்கமொன்றைத் தொடக்கியிருக்கிறார்கள். இப்போராட்ட நடவடிக்கைகள் இரண்டு பிரிவாகச் செயற்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

அஞ்சற் திணைக்களத்தில் கடமையாற்றும் இச்சிங்கள வெறியர்கள், தமிழில் முகவரியிடப்பட்டுள்ள கடிதங்களை எவ்வளவு தாமதமாகப் பட்டுவாடா செய்யமுடியுமோ அவ்வளவு தாமதமாகச் செய்து வருகிறார்களாம். தமிழில் முகவரியிடப்பட்ட கடிதங்கள் மட்டுமல்ல, தமிழர்களுக்கு முகவரியிடப்பட்ட கடிதங்களுக்கும் இதே கெதிதானும்.

அஞ்சற் திணைக்களம் தவிர்ந்த ஏனைய திணைக்களங்களில் ஒரு சில மேல் அதிகாரிகளின் துணையுடன் கீழ்மட்ட ஊழியர்கள் (எழுதுவினைஞர்கள்) தமிழர் சம்பந்தப்பட்ட கடிதங்களை இரண்டாம் பேருக்கும் தெரியாது கிழித்தெறிந்து விடுகிறார்களாம். இந்தப் புதிய போராட்டம் சனவரி 8ம் திகதிக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இப்பொழுது சற்று வேகமாக நடைபெற்றுவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### பழிக்குப்பழி

எட்டாம் திகதி வேலை நிறுத்தஞ் செய்தவர்களை இடை நிறுத்தம் செய்ததற்குப் பழிவாங்கும் நோக்கத்துடனேயே இந்தப் புதிய போராட்டம் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது தமிழ் மொழிச் சட்ட விதிகளுக்கெதிராக இந்த நாசவேலைகள் நடப்பதாகவும் இன்னொரு கருத்து நிலவுகிறது. எது எப்படியிருந்த போதிலும், இந்த நாசவேலையில் ஈடுபட்டிருப்பவர்களை உடன் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் கடந்த கூட்டத்தில் தமிழில் கையொப்பமிடும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பற்றி பின்வரிசைப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர் பிரச்சினை யெழுப்பியிருந்தார்கள் தமிழில் கையொப்பமிடுபவர்கள் எதையும்ஒழிவு மறைவாகச் செய்யவில்லை. பகி

(9-ம் பக்கம் பார்க்க)

# மத்திய வங்கியில் மீண்டும் கெடுபிடி

## பெயர் மாற்றம் பிரச்சினையாகவே இருக்கிறது

இலங்கை மத்திய வங்கியின் பெயர்ப் பிரச்சினையால் வங்கி அலுவல்கள் அனைத்தும் தேக்க நிலையடைந்திருப்பதாகத் தெரிகிறது. வருடாந்த ஆண்டறிக்கைகள், மாதாந்தச் செய்தித் திரட்டு அனைத்தையும் உடன் வெளியிட வேண்டாமென்று அரசாங்க அச்சகத்திற்கு மத்திய வங்கி உத்தரவொன்றை அனுப்பியிருக்கிறதாக அறியப்படுகிறது. திறைசேரி 'இலங்கை மத்திய வங்கி' என்று பெயரிடுவதே பொருத்தமானது என்று வங்கி அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டதாகவும் தெரிகிறது.

'சென்றல்பாங்க்' என்பதை தமிழில் எப்படி எழுதுவது என்பதில் வங்கி ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கிடையிலும் வேறுபட்ட கருத்து நிலவியது வாசகர்கள் அறிந்ததே. மத்திய வங்கி என்று வழமையாக எழுதிவந்தது போலவே எழுத வேண்டும் என்று தமிழ் ஊழியர்கள் கூறியதை மறுத்து 'சிறீலங்கா மகா பாங்குவ' என்று தமிழிலும் எழுதுவதே சரியென வங்கி முனைவர் உத்தரவு பிறப்பித்தாராம். வங்கி முனைவரின் முடிவையிட்டு பலரும் அதிருப்தி தெரிவித்திருந்தனர். இப்பிரச்சினை பாராளுமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட்டது.


தமிழரசுத் தந்தை அவர்களுப், நல்லூர் பிரதிநிதி டாக்டர் நாகநாதனும் இப்பிரச்சினையையிட்டு பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். பிரதமர் இவர்கள் இருவரையும் கலந்து பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதாக இப்பொழுது கடிதம் எழுதியிருக்கிறார்.

இதற்கிடையில் திறைசேரி 'மத்திய வங்கி' என்று தமிழில் எழுதுவதே சரியென்று வங்கி முனைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறதாம். திறைசேரியின் உத்தரவு தமக்கு மாறானதாக இருப்பதை கண்டதும் வங்கி முனைவர் வங்கி சம்பந்தப்பட்ட வெளியீடுகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது. இதனால் 1964ம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையும், மாதாந்தச் செய்தித் திரட்டும்வெளிவருவதில் வீணுகக் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது.

ஆண்டறிக்கை அச்சாகி விட்டதாகவும், ஆனால் அப்புத்தகத்தின் அட்டை மட்டும் அச்சாவதில் ஒரு முடிவு ஏற்படாமல் இருப்பதாகவும் இதே போன்று ஏனைய வெளியீடுகளிலும் மத்திய வங்கி என்று குறிப்பிட வேண்டிய இடங்கள் இன்னும் அச்சாகாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மத்திய வங்கித் தமிழ் மொழி பெயர்ப்பு பகுதிக்கு அதிகாரியை நியமிப்பதிலும் தொடர்ந்து 'தில்லு முல்லு'கள் நிலவுவதாகவும் கூறப்படுகிறது. விளம்பரம்செய்து தகைமையுடையவர்களை நியமிக்காது 'பிற்கதவு' வழியால் ஒருவரை நியமிக்க முயற்சிகள் நடை பெற்று வருகிறதாம். எத்தரத்திலான அதிகாரியையும் ரூபா 150/- அடிப்படைச்சம்பளத்திற்கு மேலான பதவியாக இருந்தால்-நியமிக்கும் பொழுது உரிய முறையில் விளம்பரப்படுத்தியே தெரிவு செய்ய வேண்டுமென்பது திறைசேரி உத்தரவாகும். இதற்கு மாருகவே மத்திய வங்கியில் முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் வங்கியிலுள்ள மிக உயர்தர அதிகாரியொருவரை பதவியிலிருந்து ஓய்வு பெறும் வண்ணம் அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. பெரும்பாலும் இந்த அதிகாரி ஏப்ரல் மாதத்துடன் ஓய்வு பெறுவார் என்று நம்பப்படுகிறது.



'என்ன சட்டர்பியார், பேப்பர் என்ன சொல்லுது? சந்திரமண்டலத்துக்குப் போன உம்மடை மருமோனைப்பற்றி ஏதாகிலும் போட்டுக் கிடக்கே?'

'அதுதான் பாக்கிறன் பாருங்கோ, சந்திரமண்டலத்திலே பக்கத்து விட்டுக்காறன் வேலியை அரக்கி அரக்கி மருமோன்ரை காணியைக் கொஞ்சம் கொஞ்சமாய் அமத்துருனும். மருமோன் வழக்கு போட்டிருக்குதாம்.'

## படித்த வாலிபர்களுக்கு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(எ) முதல் வருடத்திற்கு 4 புசல் நெல்லு வழங்கப்படும்.

(ஏ) மேட்டுக்காணியை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 50/-பெறுமதியான மா, தென்னை, முதலிய நிரந்தரப் பயிர்கள் வழங்கப்படும்.

(ஐ) முட்கம்பியும் அதற்குரிய ஆணியும் வயற்காணியின் வேலி அடைப்பதற்கு வழங்கப்படும்.

(ஒ) காட்டை வெட்டித் துப்பரவு செய்து தற்காலிக குடிசை அமைத்ததும் ரூபா 80/- வழங்கப்படும். இக்குடிசை கட்டி முடிந்ததும் குடும்பத்துடன் வந்துவசிப்பதோடல்லாமல், நிரந்தர வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

(ஓ) குறிக்கப்பட்டதொகையான காணித்துண்டுகளுக்கு ஓர் கிணறு வீதம் காணி அபிவிருத்தி இலாகாவால் பொதுக் கிணறுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

(ஔ) சேனைப் பயிர்ச் செய்கையில் குடியேற்ற வாசிகள் நஷ்டம் அடைந்தபடியாலும், அரசாங்கத்தால் வரம்பு வாய்க்கால் முதலியவற்றில் இவர்களுக்கு வேலை கொடுக்க முடியாதபடியினுலும் ரூபா 30/- மாதச் சம்பளமாக 6 மாத காலங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குடியேற்ற வாசிகள் வேறு எந்த வழிகளாலும் சீவனம் நடத்த முடியாதிருப்பின் இந்தச் சம்பளம் வழங்கப்படும்.

### மாதிரி விண்ணப்பம்

இத்திட்டத்தின் கீழ் காணி பெற விரும்புபவர்கள் பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை நிரப்பியனுப்புதல் வேண்டும்:

1. விண்ணப்பகாரரின் முழுப் பெயர்.

2. வயது.

3. தொழில்.

4. வசிக்கும் கிராமமும் காரியாதிகாரியின் பிரிவும்.

5. வசிக்கும் பாராளுமன்றத் தொகுதி.

6. கடிதம் அனுப்ப வேண்டிய விலாசம்.

7. கிராமத்தில் வசித்த வருடங்கள்.

8. கிராம சேவையாளரின் பகுதியும், இலக்கமும்.

9. விவாகமானவரா, ஆயின்:
(அ) பிள்ளைகளின் தொகை ஆண்!— பெண்!—

(ஆ) பராபரிப்பில்உள்ளோரின் தொகை!-

10. மேட்டுக்காணி நெற்காணிகளின் விபரங்கள்!-
1. அரசாங்கக் குத்தகை நிலம்.
(அ) விண்ணப்பகாரரின் பெயரில்
(ஆ) மனைவியின் பெயரில்
(இ) பிள்ளைகளின் பெயரில்
2. சொந்த நிலம்: (அ) விண்ணப்பகாரரின் பெயரில்:
(ஆ) மனைவியின் பெயரில்:
(இ) பிள்ளைகளின் பெயரில்:

11. கிருஷிக அனுபவமும் அதன் விசேட தகைமைகளும்:

படித்த மாணவர்களும், கிருஷிக பாடசாலையில் சித்தி பெற்றவர்களும் மேலே 1-11ம் பந்தி வரை உள்ள விபரங்களைக் கொடுப்பதுடன் கீழ்க் குறிக்கப்பட்ட விபரங்களையும் தருதல் வேண்டும்.
1. தகப்பனுரின் தொழில்.
2. பெற்ருேரின் பெயரில் உள்ள அரசாங்கம் அல்லது சொந்த மேட்டுக்காணி, நெற்காணி, விபரங்கள்:
3. விண்ணப்பகாரரின் சகோதர சகோதரிகளின்தொகை.

## தமிழ்க்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1. தமிழ்மொழி சட்டவிதிகள் அமுலுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இது செய்யப்படுகின்றதாம். தமிழ்க்கடிதங்களையும், தமிழர் சம்பந்தப்பட்ட கடிதங்களையும் அழிப்பதன் மூலம் தமிழர்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொள்வார்கள் என்றும், தமிழ்மொழி சட்டவிதிகள் நிறைவேறிய போதிலும்தமிழ்க்கடிதங்கள் அனுப்ப முடியவில்லையே என்று அவர்கள்ஆத்திரப்படுவார்கள் என்றும் இடதுசாரிகள் நம்புகிருர்களாம்.

2. எட்டாம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள்மீது அரசாங்கம் எடுத்த ஒழுங்கு நடவடிக்கைக்கு எதிராக வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் இது நடப்பதாகவும் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் இப்பொழுது முயன்றுவருவதாகவும் தெரிகிறது.

## அரசியல்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கமாகவே செய்கிருர்கள். அது தங்கள் உரிமையென்று தமிழ் ஊழியர்கள் கருதியிருக்கலாம். ஆனல் தமிழ்க் கடிதங்களையும், தமிழர் சம்பந்தப்பட்ட கடிதங்களையும் கிழித்தெறிபவர்கள்கோழைகள். ஆபத்தானவர்கள். அவர்களின் செயல் தமிழர்களுக்கு மட்டும் எதிரானதல்ல, அரசாங்கத்திற்கும் எதிரான நாச வேலையாகும். இவர்களைக் கண்டு பிடித்து உடன் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கதைத்து இந்த நாச வேலைக்கு முற்றுப் புள்ளி வைக்க முயலவேண்டும்.

## பல்கலைக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பல்கலைக் கழகம் சென்ற பின்னர் ...ர்கள் நல்ல சூழ்நிலையில ...வதற்குவசதிகள் ஆக்கிக் ...ாடுக்கப்பட வேண்டுமென்று கருத்து வெளியிட்டால் அது ஆக்கபூர்வமானதாக இருக்கும்.

### உலக வழக்கு

பல்கலைக் கழகத்துள் தீவிர அரசியல் வாதிகளுக்கு இடமில்லையென்ற வாதம் தர்க்க நிலையில் சரியாகஇருக்கலாம். எதார்த்த நிலையில் உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் தீவிர அரசியல் வாதிகளும் இருப்பதை நாம்காண்கிருேம் இதனுல் சம்மந்தப்பட்ட பல்கலைக் கழகங்களின் நிர்வாகமோ அல்லது கல்வி நிலையோ பாதிக்கப் பட்டதாகக்கூறமுடியுமா?

பிரித்தானியாவில்உள்ளது போன்று சர்வகலாசாலைத் துணை வேந்தரின் பதவி காலத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதும் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஒரு சிபார்சாகும்.

சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தராக டாக்டர் ஏ. எல். முதலியார் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிருர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தரமும் ஆண்டு தோறும் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. உலகப் பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களுள் சென்னைப் பல்கலைக்கழகமும் ஒன்ருக உள்ளது. எனவே, துணை வேந்தரின்பதவிகாலத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பிரச்சினை தீர்ந்து விடுமா? என்பதும் சிந்தனைக்குரியது.

இலங்கைப்பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் தரக் குறைவுக்கோ மூல காரணம் வேறு. அதை யாரும் இது வரை தேட முயலவில்லை. மூலநோயைக் கண்டு அதற்கு மருந்து செய்வதே பிரச்சினைகளுக்கு உண்மையான பரிகாரமாகும்.

## எதிர்க்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மத்தியில் ஒரு எழுச்சியை உருவாக்கி விடலாமென்று இவர்கள் நம்புகிருர்களாம்.

எதிர்க்கட்சிகளின்மேதினக் கூட்டம் சனவரி 8-ம் திகதிய சம்பவத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களின்பிரச்சினையை ஒட்டியதாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது. வகுப்புவாதப் பிரச்சாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதான சட்டத்தைக் கொண்டுவந்த பின்னரே அரசாங்கம் அவசரகாலநிலையை வாபஸ் பெறும் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.


சவால்! சவால்!! சவால்!!!

முற்பணம் வேண்டாம்!

மனம் விரும்பும் காரியங்கள் அத்தனையும் நிறைவேற
இலவசமாக
யந்திர மந்திர விஷயங்கள் செய்து தரப்படும். பலன் கிட்டிய பிறகு பணம் தாருங்கள்!
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்.
—மாந்திரீக கலாநிதி—

பி. எம். திசாநாயக்க,
நான்கு கோவில்களின் தர்மகர்த்தா
கம்பளை. போன் : 454.

சீட்டுச் சேர்த்தார் தில்லையம்பலம்.

சீட்டுக் காசைப் பெற கால் தேய நடந்தாள் இராசம்மா. விமலா வீட்டிலிருந்தபடியே சீட்டுக் காசை மட்டும் பெற்று விடவில்லை, தில்லையம்பலத்தின் ஆஸ்திக்கும் அதிபதியாகி விட்டாள்.

—து. வைத்திலிங்கம் வளர்ந்து வரும் எழுத்தாளர். அவரின் முதற் சிறுகதை கடந்த ஆண்டு சுதந்திரனில் வெளியாகியது.

# சீட்டுக் காசு

து. வைத்திலிங்கம்

எமது சிறுகதை

'ஆடைசியாய் என்ன சொல்லுகிறீர்கள்? காசு எப்போ தாறதாய் முடிவு?'

ராசம்மாவின் உதடுகள் துடித்தன. கண்களின் ஓரங்களில் கண்ணீர் திரையிட்டது. அவளைப் பார்க்கவே மிகவும் பாவமாய் இருந்தது. இப்படித்தான் கடந்த ஆறுமாத காலமாக அலைந்து கொண்டிருக்கின்றாள்.

அவள்முன்னால் போஸ்ட் மாஸ்டராய் உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்றவரான தில்லையம்பலம் சற்றும் அசையாமல் நின்றார். அவர் இப்படித்தான் நின்று நின்று தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டாரே!

'பொறுத்தனி தானே ராசம்மா இன்னும் இரண்டு மாதம் பொறு! எங்கடை கனகசபையும் பொன்னனும் காசு தரேல்லை. தந்தவுடனே நானே வீட்டுக்கு கொண்டு வந்து தருகிறேன் நீ போ! நான் வாறன், கொஞ்சம் அலுவல் இருக்கு!'

அவர் உள்ளே போய் விட்டார். ராசம்மாவும் இனி நிற்பதில் பயனில்லை என்று உணர்ந்து வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

வழியெல்லாம் தான் இப்படி இக் கல்நெஞ்சக்காரனிடம் மாட்டிக் கொண்டேனே என்று சிந்தித்த வண்ணம் போய்க் கொண்டிருந்தாள்.

தளர்ந்த நடையுடன் வீட்டுக்கு வந்த தாயைக் கண்டதும் பணம் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் அவளின் மகள் விமலா.

'அவன் எங்கை தரப் போறானடி! அழிஞ்சு போவான் இப்படி வயித்திலை அடிச்சானே! காணியை மீட்டு உன்ரை கலியாணத்தை வடிவாய் செய்ய நினைச்சேன்! ஏதோ அந்த அம்மாள் ஆய்ச்சிதான் கேட்கவேணும்'

அவளுக்கு தொண்டை கரகரத்தது. என்ன செய்வதென்றே புரியவில்லை.

'மோனை அந்த லோட்டாவிலே கொஞ்சம் தண்ணி கொண்டு வா!'—இப்படிச் சொல்லி விட்டு பக்கத்தில் இருந்த மேடையிலே அமர்ந்து கொண்டாள்.

ஒரு கையால் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

தாளாத கவலைகள் ஏற்பட்டால் இப்படி ஒரு இடத்தில் இருந்து கொண்டு தலையைக் குனிந்து கொண்டே இருந்து விடுவாள். அதில் அவளுக்கு ஒரு ஆறுதல்.

தான் கணவனுடன் சிறப்பாக இந்த ஊரில் வாழ்ந்ததும், அவர் இறந்த பின், உறவினர்களால் ஒதுக்கப்பட்டதும், கடனை அடைக்க காணியை ஈடு வைத்ததும், அவள் ஞாபகத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன.

பேராசை கொண்ட தில்லையம்பலத்திடம் போய் சீட்டுக் கட்டினதன்னை நொந்து கொண்டாள்.

சீட்டுக் காசு கிடையாமல் அதனால் தன் காணியை மீட்க முடியாமல் மகள் விமலாவின் கல்யாணம் நடக்காமல் போய் விடுமோ என்ற எண்ணம் அவளைக் கலங்கச் செய்தது.

'இந்தா அம்மா தண்ணீர்!' என்ற விமலாவின் குரலைக் கேட்டதும் தண்ணீர் லோட்டாவை கையில் வாங்கிக் குடித்தாள்.

'ராசம்மா!' என்று அழைத்தபடி வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு ராசம்மாவின் தோழியான சொர்ணம் வந்தாள். அவள் தில்லையம்பலத்தின் வீட்டுக்கு அருகில் இருப்பவள்.

'ராசம்மா உனக்கு சங்கதி தெரியுமோ?' என்று கூறிக்கொண்டே மேடையில் அமர்ந்தாள்.

'தில்லையம்பலத்தார் சீட்டுக் காசு தந்திட்டாரே?'—இப்படிக் கேட்டாள் சொர்ணம்.

'அதுதானே சொர்ணம் இப்பவும் போட்டு வாறன். வயித்தைப் பத்தி எரியுதனை—அவன் தாறதெண்டால் எப்பவோ தந்திருப்பான். என்னைப் போட்டு அலைக்கிறானடி' என்று சொல்லிவிட்டு கண்களில் துளிர்த்த கண்ணீரை சுண்டி எறிந்தாள்.

'அந்தக் கூத்தை ஏன் கேட்கிறாய்? நான் முந்த நாள் தில்லையம்பலத்தார் வீட்டுக்கு புழுங்கல் குத்தி கொடுக்கப் போனனான். அவர் உன்ரை சீட்டுக் காசை தராமல் அமத்திற நோக்கம் போல கிடக்கு! உன்ரை சீட்டுக்காசை குடுக்கச் சொல்லி அவருடைய மனுசிக்காரி சொன்னவுடனே, அவவோடை சரியான சண்டை பிடிச்சார். நான் எல்லாத்தையும் கேட்டுக்கொண்டு தான் நிண்டேன்'—என்றாள் சொர்ணம்.

'அவன் என்னவாகிலும் செய்யட்டும்! நான் இனி காசுக்கெண்டு அவன்ரை படலை திறக்கமாட்டேன்' இப்படி ஒரு வைராக்கியத்துடன் சொல்லிவிட்டு ராசம்மா எழுந்தாள்.

'நான் போறன். இஞ்சை நான் சொன்னதெண்டு ஒண்டையும் கேட்டுப் போடாதை! பிள்ளை விமலா! கொஞ்சம் மிளகாய் தூள் தா மோனை நாளைக்கு இடிச்சுப் போட்டு கொடுக்கிறன்'—என்று சொல்லிய சொர்ணம் விமலா கொடுத்த மிளகாய் தூளையும் வாங்கிக் கொண்டு சென்றுவிட்டாள்.

ஒரு வாரம் சென்றது. அன்று வைகாசி விசாகப் பொங்கல். வெள்ளிக்கிழமை. அம்மன் கோவிலில் ஒரே கூட்டம். கோவில் வீதியில் ஊர்ப் பெண்களுடன் ராசம்மாவும் பொங்கிக் கொண்டிருந்தாள். விமலாவும் அவளுடன் கூட கோவிலுக்கு சென்றிருந்தாள்.

ஏதோ ஒரு காரியமாக ராசம்மா கோவில் வடக்கு வீதிக்கு போக அங்கு ஒரு காட்சியைக் கண்டு திகைத்து நின்று விட்டாள்.

அவள் மகள் விமலா தில்லையம்பலத்தின் மகன் குலசிங்கத்துடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தாள். ஏதோ அனேகம் நாட்கள் பழகியவர்கள் போல் கதைத்துக் கொண்டு நின்ற அவர்களைக் கண்டதும் ராசம்மாவுக்கு பல சிந்தனைகள் சந்தித்தன.

பொங்கல் முடிந்து வீட்டுக்கு போனதும் இது பற்றிப் பேசலாமென்று பேசாமல் திரும்பிவிட்டாள்.

வீட்டுக்குத்திரும்பியதும் இரவு சாப்பாட்டுக்கு பின்னர் படுக்கைக்கு போகும் போது ராசம்மா விமலாவைக் கூப்பிட்டாள்.

'தங்கச்சி உனக்கு அவன் குலசிங்கத்துடன் என்ன கதை? நான் கோவிலில் எல்லாத்தையும் கண்டனான். ஒண்டும் ஒழியாமல் என்ன நடந்தது சொல்!' என்றாள்.

விமலா ஒன்றும் பேசாமல் இருந்தாள். பின் ஏதோ யோசித்துவிட்டு, 'அம்மா நீ கோபிக்காதே. படிக்கிற காலத்தில் இருந்து அவரை எனக்கு தெரியும்! அவர் நல்லவர் அம்மா...!'

வார்த்தைகள் ஒவ்வொன்றாக வெளிவந்தன.

ராசம்மாவுக்கு மகளின் மனம் புரிந்து விட்டது.

'தங்கச்சி வீணாக உன்னைக் கெடுக்காதே! நீ சின்னப்பிள்ளை. உனக்கு உலகம் தெரியாது. தில்லையரோ காசுக்காரர் அவைக்கும் எங்களுக்கும் ஏணி வைச்சால் கூட எட்டாது! இப்படியான வீண் எண்ணத்தை மாத்திரம் வைச்சிருக்காதே! நீ போய் படு!'-இப்படி சொல்லி விட்டு விளக்கை அணைத்து விட்டு தானும் படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

இரண்டு நாள் சென்றது. இரண்டாம் நாள் காலை முற்றத்தைக் கூட்டிக் கொண்டு நின்றாள் ராசம்மா.

'ராசம்மா கூட்டுகிறாய் போல கிடக்கு!'-என்று சொல்லிக் கொண்டே சொர்ணம் வீட்டுப் படலையைத்திறந்து கொண்டு வந்தாள்.

'ராசம்மா ஒரு பெரிய கதை இருக்கு வா உள்ளுக்குள்ளை' என்று சொல்லிக் கொண்டே வீட்டு வாசலுக்கு சென்ற அவளை ராசம்மாவும் பின் தொடர்ந்தாள்.

வாசலில்இருந்த மேடையில் இருவரும் இருந்தவுடன், பேச்சுச் சத்தத்தைக் கேட்ட விமலா அங்கு வந்தாள்.

விமலாவைக் கண்ட சொர்ணம், 'மோனை விமலா உள்ளைபோ! நான் அம்மாவோடை ஒரு கதை கதைக்க வேணும்' என்றதும், விமலாவும் குறிப்பறிந்து உள்ளே சென்று விட்டாள்.

'ஏன் ராசம்மா உன்ரை மோளுக்கு கல்யாணம் ஒன்றும் செய்யிற எண்ணம் இல்லையே?' சொர்ணம் கேட்டாள்.

'என்னெண்டு செய்யிறது? ஈட்டுக்காணியை மீழ இரண்டாயிரம் ருபாய் தேவை, இவன் தில்லையம்பலம் சீட்டுக் காசு இரண்டாயிரமும் தந்தால்தானே காணி மீண்டு கல்யாணத்தைச் செய்யலாம்! அதுசரி இப்பகாலமை இருந்தால் போலை என்ன சங்கதி வந்தனி?'-ராசம்மா கேட்டதும், 'அந்தக் கூத்தை ஏன் கேட்கிறாய் அது பெரிய கதை!'- சற்று நிறுத்தி விட்டு சொர்ணம் தொடர்ந்தாள்.

'ராத்திரி தில்லையம்பலத்தார் வீட்டிலை சரியான அமளி! அவற்றை மகன் 'குலசிங்கத்துக்கு ஒரு கலியாணம் பேசி வந்ததாம். அவன் ஒரேயடியாய் உன்ரைமோள விமலாவைத்தான் கட்டப் போறன் எண்டு சொல்லி தன்ரை ஆசைப்படி நடக்காவிடில் பொலிடோல் குடிக்கப் போறன் எண்டெல்லாட தகப்பனோடை சரியான சண்டை. இரண்டு பேருக்கும் சரியான பேச்சு வார்த்தை நடந்தது! அவன் பொடியன் ஒரே பிடிவாதமாய் நிற்கிறானடி! பொடியன்ரை மாமன்காரனும் வந்து நிற்கிறா. அவரும் பொடியன்ரை விருப்பப்படி நடக்க வேணும் எண்டு தான் சொல்லுறார் போலை கிடக்கு! அப்படித்தான் என்ரை காதிலை விழுந்தது. நான்உன்ரை மோளின்ரை விசயம் எண்டவுடனே வேலிக்குபக்கத்திலை போய் நிண்டுதான் கேட்டனான். தில்லையருக்கு சரியான பாடம் மகன் படிப்பிப்பான் போலைகிடக்குது!'

இப்படி நீட்டி இழுத்துக் கொண்டு போனாள் சொர்ணம்.

ராசம்மாவுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

'தற்செயலாய் தில்லையர் மனம் மாறி சம்பந்தம் பேசி வந்தால் விடாதே ராசம்மா! அவன் குலசிங்கம் நல்ல குணமான பொடியன்! நான் வாரன் அலுவல் இருக்குது' என்று கூறிவிட்டு சொர்ணம் சென்று விட்டாள்.

அன்று மாலை தில்லையம்பலம் 'ராசம்மா!' என்று அழைத்தபடி வீட்டுக்கு வந்தார். ராசம்மாவுக்கு அவர் ஏன் வந்தார் என்று புரியவில்லை.

'இந்தா ராசம்மா-நீ கடுமையாய் கோபித்து விட்டாய் போல கிடக்கு. பொன்னுவும் கனகசபையும் காசு நேற்றுத்தான் தந்தவை. இந்தா பிடி! இரண்டாயிரம் சரியோ என்று எண்ணிப்பார்' என்று சொல்லிக் கொண்டே கற்றை நோட்டுகளை நீட்டினார்

பணத்தை வாங்கிக் கொண்ட ராசம்மா தில்லையம்பலத்தாரின் கள்ளத்தனத்தை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

மனதிலுள்ள காரணங்களை
தனக்கே செய்துகொள்ள ஒரு சிறந்த வழி
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

தனக்கு தேவையான காரணங்கள் இருக்கின்றனவா என பார்த்துக் கொள்ளவும். அக் காரணங்களை நிவர்த்தி செய்து கொள்ளவும். உங்களது முழு விலாசம் எழுதி முத்திரை ஒட்டப்பெற்ற ஒரு கடித உறையை அனுப்பி எமது இலவசப் பிரசுரத்தை இன்றே தபாலில் பெறுங்கள்.

கவர்ன்மென்ட் ரெஜிஸ்டர்
மகா மந்திராச்சாரி
பி. எம். திசாநாயக்க,
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கண்டி ரோட், கம்பளை. டெலிபோன் : 454.

கருத்துமேடை —[4]— வள்ளலார் மறைவு

# இறந்தாரைப் புதைப்பது பண்டைய மரபு

சக்தீ அ. பாலையா

'உலக உறவு' எது என அறியமாட்டாத மனிதர்கள் எத்தனை நூலாராய்வு கொண்ட பாண்டித்யமுடையவராயினுஞ் சரி, அவர்களினது நுண்ணறிவு நூலறிவிற்ருன் இருக்குமேயன்றி சுய அறிவாக இருந்ததில்லை. சித்திகள் யாது என்பதனையும் அறிந்துணர்ந்ததுமில்லை. பாரதி சொல்கிருன்:—

'மனம் தெய்வம்; சித்தம் தெய்வம்; உயிர்-தெய்வம்; காடு, மலை, அருவி, ஆறு, கடல், நிலம், நீர், காற்று, தீ, வான், ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் எல்லாம் தெய்வங்கள்.'

இந்த உண்மை உறவினைக் கூறிய நம் காலத்திய மகா கவி சுப்ரமண்ய பாரதியாரையே புறக்கணித்த வைதீக உலகம், அரை நூற்ருண்டுக்கு முன் எந்த நிலையிலிருந்திருக்கும் என்பதும்-அதற்கு முன் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளுவப் பெருமான் புறக்கணிக்கப் பட்டதும் இங்கே கவனத்திற் கொள்ளற் சிறப்பு.

## சர்வாதிகாரம்

ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே சகல செயல்களுக்கும் தலைமைப் பீடந்தாங்கிச் சர்வாதிகாரிகளாக இருந்துள்ளனர் என்பதும், தமிழ்ச் சங்கப்புலவர்கள் எழுதிய நூல்களே போற்றப் பெற்று வந்ததுமாகிய எத்தனையோ குறுகிய நோக்குப் போக்குகளை அக்காலம் கொண்டிருந்தது நமக்கு வரலாறு காட்டும் உண்மைகள்.

சென்ற நூற்ருண்டில் நமது வள்ளலாற் பெருமானை எதிர்த்த சர்வாதிகாரத்தின் வேகமும் அதுதான். 'கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தின் முன் தோன்றிய மூத்தகுடி' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட தமிழினம், இடையிற் புகுந்த மதக்கோட்பாடுகளால்—வீரவணக்கத் திருப்பத்தால்— போலிப்புராணக் கதைகளினுல் தமிழனின் தனித்துவத்திற்கே முற்றுப் புள்ளி வைப்பதில் முன்னின்றவர்களின் மாயவலையில் வீழ்ந்தது. ஆனுல் இந்த மாயம் முதலில் உயர்ந்த சாதி எனப்பிரிக்கப் பெற்றவர்களிடம் பரவி சர்வாதிகாரத்தை வளர்த்தது. இதனுல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்— மதவாதிகளுக்கும் இடையே ஓயாத போர் எழுந்தது.

## சித்தர்கள் வந்தனர்

தாழ்த்தப்பட்டிருந்த மக்களிடையே தமிழரின் 'தனித்துவம்' பரவ வகை செய்தனர் பரமஞானிகள் இந்த மகா சித்தர்களுக்கு மதவாதிகளுக்குரிய பெரிய இடங்களும், புகழ்ப்பட்டங்களும்கிடைக்கவில்லை. ஆனுல் பொது மக்களின் அன்பும் ஆதரவும் இருந்தன. இந்த மகா சித்தர்களின் தத்துவக் கருத்துக்களை மதவாதிகள் அதிகாரங்களினுல் புறக்கணித்துவந்தனர். அரண்மனை சுகபோகத்தில் வாழ்ந்த மடாதிபதிகளும், அவர்கள் தாசர்களும் கோயில்களுக்கு மக்களை அழைத்துப் பிழைப்பதில் கவனஞ் செலுத்த, மகாசித்தர்களோ மக்களை இறைவனிடம் அழைத்துச் செல்லத் தம்மையே தியாகஞ் செய்தார்கள். பாரதியும்:—

'சூத்திரனுக் கொரு நீதி—
தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு
வேருெரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின்—
அது
சாத்திரம் அன்று சதி
என்று கண்டோம்.'

என்றும்,

'காலத்திற் கேற்ற வகைகள்—
அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும்
நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்ருய்-
எந்த
நாளும் நிலைத்திடும்
நூலென்றும் இல்லை'

என்றும் அவர் வாழ்ந்த காலத்தில் சொல்வதென்ருல் வள்ளலாற்பெருமான் வாழ்ந்த சூழ்நிலை எத்தனை பயங்கரமான போலிமதப் பிரச்சாரங்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதும் நம் கவனத்தை ஈர்ப்பதாகும்.

வெள்ளையர்களின் கொடுமை — மதவாதிகளின் எதேச்சாதிகாரம்—சாதி வெறியர்களின் ஆர்ப்பாட்டம்—எளியோர் வாழமுடியாத நிலை பட்டினி, பஞ்சம், கொடுமை ஆகியன தாண்டவமாட அங்கே தமிழனின் தனித்துவமும், ஆரிய மதவாத எதேச்சாதிகாரமும் உரிமைப்போர் நடத்தின. மதவாதம், தனித்துவத்தை ஒழிக்க மூடபக்தியை வளர்த்தது. தனித்துவமோ ஏக ஒருமைப் பாட்டினை வளர்த்தது. இது இன்று நேற்று ஏற்பட்டதன்று. ஆரியநுழைவு வடக்கிலிருந்து தெற்கே காலெடுத்து வைத்தது முதல் ஏற்பட்டதாகும்.

## செத்துக் கொண்டிருக்கும் சமுதாயமா?

இப்படியான சூழ்நிலையில் எளியாரைக்காக்க மகான் இயேசு எழுந்தது போல்— மூடவழக்குகளை ஒழித்து தமிழனின் தனித்துவ நெறிக்கு வழிகாட்டி, பொய்மையாம் மதங்களை நம்பாதீர்கள் என்று குரலெழுப்பிய அருட்பிரகாச வள்ளலாரை வைதிகர்கள் புறக்கணித்ததிலும்-போலிக் கதைகளை அருக்கெதிராகப் புனைந்து பரப்பியதிலும் வியப்பில்லை. வள்ளுவப் பெருமானும், தாயுமானுரும் இருப்பார்களானுல அவர்களுக்கு நிச்சயமாக 'நாத்திகர்' என்ற பட்டமே கிட்டியிருக்கும். ஆனுல் அவர்களின் பாக்களை வைதிகர்களும் விரும்புகிருர்கள் என்ருல் இடையிற் சேர்க்கப் பெற்ற அநிற்காணும் செருகல்களாலேயாம்.

இன்றும் நம்மவர் பண்டைய மூடக்கொள்கைகளிலிருந்து விடுபடாமல் செத்துக் கொண்டு தானிருக்கிருர்கள் என்பதற்கு இன்றும் நிலவும் மூட நம்பிக்கைகளே சான்று அப்படியானுல் செத்துப் போய்க் கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தைப் பார்த்துத்தான் வள்ளலாற் பெருமான் பாடுகிருர்.

'இறந்தவர்கள் பலருமிங்கே எழுகின்றதருணமிதே' என்று. இதனை வைத்துக் கொண்டு பிராமணர்கள் கூட இறந்த தங்கள் உறவினர்களின் பிரேதங்களைப் புதைத்தார்கள் என்பது மதவாதிகளின் குறும்புச் செயல் என்பதில் ஐயமில்லை.

'பிறந்த வரை நீராட்டிப்
பெருக
வளர்த்திடுகின்றீர் பேயரேநீர்
இறந்தவரைச் சுடுகின்றீர்
எவ்வணைஞ் சம்மதித்திரோ
இரவிற்றூங்கி
மறந்தவரைத் தீமூட்ட
வல்லீரால்
நும்மனத்தை வயிரமான
சிறந்தவரை எனப் புகழச்
செய்து கொண்டீர்
ஏன் பிறந்து திரிகின்றீரே!

என்று வள்ளலாற்பெருமான் இரங்குகிறார்- உயிரோடு இருக்கும்போது உறவாடிப் பேசிக்களித்து ஆசாபாசத்தால் கட்டுண்டு வாழ்ந்த நீவிர், இறந்துபோன உமது உறவினர்களைத் தீயிலிட்டு எரிப்பதனுல் உமது மனத்தில் எத்தனைக் கொடிய கொடூரம் சூழ்ந்துள்ளதோ! மனிதனை மனிதன் நேசிக்கும் உறவு மனம் இல்லாமையால் மட்டுமன்றி, மனிதனைத் தன்னில் ஒருவனுகக் காணுதிருக்கும் விழி-ன் குருடர்களாகி வாழ்கிறீர்களே! கருணையும், அன்பும் இல்லாதவர்களாக வாழும் நீவிர் அதனைப் பிணத்தைக் சுடுவதிலே வெளிப்படுத்தி உதவி செய்து விடுகிறீர்களே என்று இரங்கினுர் வள்ளலார்.

## சித்தசாமி

செத்தவர்களனைத்தும் சித்தசாமி என்ருர். காட்டுமிராண்டிகள் மனிதரை உயிருடன் சுட்டுத் தின்பதாக இக்காலத்தும் கேள்விப்படுகிருேம். அதைப்போலே நாகரிக மனிதர்கள் என்று கூறும் நாம் நம்முடனிருந்தவர்கள் இறந்துவிட்ட காரணத்தால் தீயிலிட்டுப் பொசுக்குவதில் சாந்தி தேடுகிருேம். இதிலிருந்து நாம் உண்மையுடனும் கருணையுடனும் அவர்களுடன் உறவு பூண்டிருந்ததாகக் கூறமுடியாது. கருணையேயில்லாது வாழ்ந்த காட்டுமிராண்டிகளுக்கு ஒப்பானவரே நாம் என்பதும் மறுத்தற்கேற்றதன்று. ஆன்மநேய ஒருமையை அறியாதார் தெரிந்து கொள்வதற்காகவே 'இந்தத் தேகம் பரனளித்தது சுடுவது அபராதம்' என்று வள்ளலாற் பெருமான் அருளினுர். இதனை ஞானி விவேகானந்த வேதாந்தியும் 'வாழும் கடவுள்' என்ற தமது கவிதையிலே:-

'உனது உள்ளும் புறமும்-
இருக்கும் பரனே
நமது எல்லோரினது
கரங்களாலும் செயல்படுகிருன்
நமது எல்லோரினது
பாதங்களினுலும் நடக்கிருன்
நமது எல்லோரினது
உடலாகவுமிருக்கிருன்
அவனை வழிபடுவீர்
மற்ற சிலைகளை உடைத்திடுவீர்.'

என்றும்,

'பேதை மனத்திரே!
வாழும் கடவுளின்
அறிவில்லாமையால்
இவ்வுலகம் பூரணத்வமுடைய
தாயுள்ளது
அதைப் புறக்கணிப்பதோ!
என்று பகர்ந்துள்ளதும்.

மனிதனே தெய்வம், அவன் உடலும், உயிரும் தெய்வத் தன்மையால் நிறைந்தது என்பதும் கருத்து வேற்றுமைக்கு இடமின்றி ஏற்றுக் கொள்ளற்பாலதாம். இவ்வகையாகும் உடலை-பரனிருந்த உடலை தீயிலிட்டுப் பொசுக்கும் அளவு நாம் கொடியவர்களாக வாழ வேண்டுமா.. என்பதுவே வள்ளலார் பெருமான் சுட்டிக்காட்டியஉண்மையாகும்.

இதனைத்தான் குறிப்பாக 'செத்தவர[illegible] நல் பற்பலரும் சித்தசா[illegible]ருர் வள்ளலாற்பெரு[illegible] இவர்களைச் சுடாதீர்கள், [illegible]புதையுங்கள் என்கிருர்.

'எவ்வுயிரும் பொது எனக் கண்டிரங்கி யுபகரிக்கின்ருர் யாவரந்தச் செவ்வியார்தஞ் செயலனைத்துந் திருவருளின் செயலெனவே தெரிந்தேனிங்கே' என்று அருட்பா கூறுவதிலிருந்து எல்லா உயிர்களும் தம்மில்வேறில்லை என்றும் ஒவ்வொருவரின் உடலும் பராபரனின் உண்மைநிலையம் என்பதையும் காட்டுவிக்கிருர்.

இந்து சமய யோகிகளை-மகான்களை இறுதியில் சமாதி வைப்பதில் நம்பிக்கை மிக்க நாம் அதனைப் பண்டைய மரபாகப் பார்க்கிருேம். ஆனுல் வள்ளலார் சொல்கிருர் என்பதால் புதைக்கும் கோரிக்கையை ஏற்க மறுக்கிருேம். இதிலும்-இந்துசமயத்தினதும்-தமிழன் கண்ட தனித்துவத்திற்கு முள்ள வித்தியாசம் சுட்டிக்காட்டவும் படுகிறது.

வள்ளலாருக்கு எதிராக மதவாதிகளின் துவேஷம் வளர்ந்து நின்றமையே 'சமாதி' செய்யும்படி வள்ளலார் கூறியதையும், இறந்தவர்கள் எழுகின்ற தருணமிதே என்றதையும் இழிவு படுத்தக் காரணமாயிற்று. இக்குறுகிய நோக்குடன் வள்ளலாரின் அற்புதவாழ்வையும், அற்புத மறைவையும் எதிர்க்கும் எண்ணம் வளருமானுல் இந்துமத வழிபாட்டின் ஒரு பிரார்த்தனையாகவும். அந்த வெறுப்பு மாறலாமென்பது எம் அபிப்பிராயமாகும்.

# இலண்டன் செல்கிருர் இ. தொ. கழக செயலாளர்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. க. சிவானந்த சுந்தரம் இம் மாதம் இலண்டன் செல்லவிருக்கிருர். இவர் கொழும்புத் திட்டத்தின் கீழ் இங்கிலாந்தில் மூன்றுமாத காலம் தொழிற் சங்கப் பயிற்சி பெறுவதற்கெனத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்.



இலங்கையிலுள்ள மூன்று பெரிய தொழிற் சங்களின் பிரதிநிதிகளை பயிற்சிக்கு அனுப்புவது என்ற கொழும்புத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் திரு. க. சிவானந்தசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. க சிவானந்தசுந்தரம் நீண்டகாலமாக தொழிற் சங்கத்துறையில் ஈடுபாடு கொண்டவர். எழுதுவினைஞராக அரசாங்க சேவையில் சேர்ந்த இவர் தமது திறமையால் முன்னேறி பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது சேவையிலிருந்து ஒய்வு பெற்ருர்.

அரசாங்க ஊழியராக இருக்கும் பொழுது 'அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இவர் விளங்கியுள்ளார். அ. லி. சங்கம் வகுப்புவாதத்தை நோக்கிச் செல்கிறது என்பதை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்த திரு. சிவானந்தசுந்தரம் அச்சங்கத்திலிருந்து வெளியேறி தமிழ் ஊழியர்களுக்கெனத் தனி

(12-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# சிவராத்திரியின் மகிமை

மாசிவராத்திரி இந்துக்களின் பெருமைக்குரிய விரதானுட்டானதினமாகும். ஆண்டுக்கொரு முறை வரும் இவ்விரதனுட்டான தினத்தன்று விரதமனுட்டிப்போர் பகற்பொழுதில் நோன்பிருந்து இரவு முழுவதும் கண் விழித்து சிவனின் பெருமை பற்றிப் பேசுவார்கள். சிவன் இராத்திரி முத்தியின்பத்தைப் பெறுவதற்குரிய இன்ப நாளாகும். இந்துக்கள் வாழுமிடமெங்கும் இவ்விரத நாள் புனித தினமாகவே அனுட்டிக்கப்படுகின்றது. இலங்கையில் இப்புனித நாள் நீண்ட காலமாக பொது விடுமுறைத் தினமாக பிரகடனப்பட்டுள்ளது. இப்புனித நன்னாளையொட்டி இக்கட்டுரையை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது. சிவராத்திரியின் மகிமையை இங்கு விளக்கியிருக்கும் கட்டுரையாசிரியர் அவர்கள் கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவராவர். சமயப் பணிக்கே தன்னை அற்பணித்துள்ள இவர் தலை நகரில் வாழும் சைவ வாலிபர்களிடையே சமயப் பற்றை ஏற்படுத்த பெரிதும் உழைத்து வருகிறார்.

சிவம் என்பது உலகங்கள் எல்லாவற்றையும் கடந்து தானே தனியாக நிற்குந் தன்னேரில்லாத் தனிப் பெரும் சோதிப் பிரவாகமாகும். அந்தப் பரம் பொருளை வழிபடும் மக்கள் தான் சைவர்கள். சிவம் என்னும் தனிப்பெரும் தலைவனை அடைவதற்குச் சென்றுகொண்டிருக்கும் பாதையே சைவம் எனப்படும். அந்தச் சைவ நெறிப்படியே சத்தியம், அன்பு, பக்தி, தூய வாழ்க்கை போன்ற பற்றுக்கோடுகளின் துணைகொண்டு செல்வோமானால் இறைவனின் பாதாரவிந்தங்களைக் காணலாம், என்பதும் அவன் திருப்போதுக்கே ஆளாய் வாழலாம் என்பதும் திண்ணம்.

இறை வழிபாட்டிலே விரதானுட்டானங்கள் முக்கியபாகமாக அமைகின்றன. சைவர்கள் அனுட்டிக்கும் விரதானுட்டானங்கள் பல. அவை எல்லாம் ஆன்மா தூய்மைப்பட்டுப் பக்குவநிலைமை அடைவதற்கும், இறைவன் கருணையைப் பெறுவதற்கும் பேருதவி புரிவன. அவ்விரதங்களுள்ளே முதன்மையானதும், மகத்துவம் மிக்கதும் 'சிவராத்திரி' விரதமாகும்.

சிவராத்திரி என்பது சிவன் இராத்திரி என இரண்டு சொற்களைக் கொண்ட பதமாகும். சிவம் என்றால் வடமொழியில் இன்பம் என்றும், இராத்திரி-இரவு என்பதாகவும் கொள்கிறார்கள். எனவே சிவராத்திரி என்றால் இன்ப இரவு ஆகும்.

எப்பொழுமே சிவனை வழிபடும் நாளாகவும் சிறப்பாகச் சிவராத்திரி என்ற பெயர் குறிக்கப்பட்ட ஒரு தினமாகிய மாசி மாதத்தில் அபரபக்கத்தில் சதுர்த்தசி கூடிய தினத்து இராப்பொழுதுக்கு மாத்திரம் சூட்டப்பட வேண்டியதின் அர்த்தமென்ன? ஏன் இந்த இரவு மாத்திரம் முக்கியமானது? என்பது வினுக்களாகின்றன. ஆம். சிவனுக்குரிய பல சிறப்பான விசேஷ அம்சங்கள் அமைந்து விளங்கும் நாளானபடியால் இப்பெயர் பெற்றது. இந்நாளில் சோதிப் பிழம்பாய் சிவபெருமான் நின்று பிரம—விஷ்ணுக்கு அருள் புரிந்தபடியாலும் அன்றைய தினத்தை விரதமாக அனுட்டித்துச் சிவபதமடைந்தவர்களின் மேன்மையினுலும் இந்நாள் சிவராத்திரி எனவும் படும். சிவபெருமானுக்கு அத்தியந்த பிரியமுள்ள இராத்திரி சிவராத்திரி என்பதனுல் மகா சிவராத்திரி எனவும் கூறப்படும்.

இவ்வுலகின்கண் ஆன்மாக்கள் மாயையின் தோற்றமாகிய பலவகையான உடம்புகளிலே வந்தவதரித்து பாவம், புண்ணியம் என்ற இரு வினைகளையும் இயற்றி அவற்றின் நிமித்தமாக மீண்டும் மீண்டும் தொலையாத பிறவிகளை எடுத்து உழலுகின்றன. இந்த ஆன்ம பேதங்களின் இயக்க காலம் இறுதி நிலையையடையும். அந்தக் காலத்தைத்தான் யுகாந்த காலமென்றும், ஊழிக்காலமென்றும் உலகமுடிவுக்காலமென்றும் இயம்புவர். அற்றை

**வே. ச. சுப்பையா**

நாளில் உலகம் முழுவதையும் ஒரு பேரிருள் வந்து கவ்வும். அப்பேரிருள் உலகம் முழுவதையும் மறைக்கும். எங்கும் சுடுகாடு மயமாக்க காட்சியளிக்கும். அப்போது தான் இறைவன் சுடலையாண்டியாக ஊழிக் கூத்தை ஆடுவான். இவ்வாறு நடனம் புரியும் எம்பிரான் பாததாமரைகளிலே ஆன்ம கோடிகள் எல்லாம் அடைக்கலம் புகுந்து இருக்கும். எல்லாம் வல்ல இறைவன் அருள் சுரந்து நிற்பான். இச்செயல் எல்லாம் நிகழ்ந்த ஒரு இருள் சூழ்ந்த நாள் தான் மாசி மாசத்து வரும் சிவராத்திரியாகும் என்பது சைவத்தின் கொள்கையாகும். எம்பெருமானிடம் தஞ்சம் புகுந்து அவரடி போற்றி ஆன்மகோடிகள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து ஈடேற்றமடைந்த இரவு மற்ற இரவுகளிலும் பார்க்க மகத்துவம் பெற்றதாக வில்லையா? உலகத்தின் சங்கார காலமும், சிருஷ்டியும் ஒரே நேரத்தில் நடந்த இரவுதான் சிவராத்திரி தினமாகும்.

பேரின்பமென்னும் மறு கரையையடைய பிறவி என்னும் பெருங்கடலைக் கடந்தாக வேண்டும். இதற்கு சைவசமயமென்றும் தோணியிலேறி, சிவ, சிவ என்னும் தண்டு கொண்டு, பிறவிக் கடலைக் கடந்து பேரின்பமென்னும் நிலையையடைந்து என்றுமழியா அமரர் ஆக வேண்டும். இறைவன் அடியைத் தஞ்சமெனக் கொண்டு வீட்டின்பத்தைப் பெற்றுய்ய வேண்டியது, நாம் பிறவி எடுத்ததின் நோக்கத்தை நிறைவேற்றுவதன்றோ.

முன்பு ஒரு முறை ஊழியில் உலகமெல்லம்மா அழிந்து போக உமை இறைவனை வழிபட்டுப் பழையபடி உலகம் உய்யும் பேற்றைப் பெற்றார். இவ்விரதத்தை திரயோதசி தினத்தில் ஒரு போதுண்டியும் உண்டொருமனமாயா சதுர்த்தியில் உபவாசமிருந்து துயில் நீக்கி நான்கு சாமமும் சிவனை அருட்சித்து அடுத்த நாளில் அன்னதானம் செய்து வர பல சம்பத்துக்களை எய்துவர் என்பது இதிகாசம் பகர்வதாகும்.

ஆன்மா உலகமென்னும் காட்டில் வாழ்க்கை என்னும் வேட்டைக்குச் செல்கிறது. ஆணவம் என்னும் வேங்கை அவ்வான்மா என்னும் வேடனைத் துரத்துகிறது. அதற்கு இடம் கொடுக்கில் அழிவு தான் முடிவு, ஆனால் ஆத்மா இறைவனை வணங்குகின்றது. வீட்டின்பமடைகின்றது.

இறைவனின் திருவருட் சக்தியே உமையவள். சக்தியின்றிச் சிவனில்லை. சிவமின்றிச் சத்தியில்லை. சக்தியின் அருட்பார்வையுடன் தான் ஆன்மா சிவஞான ஒளியினுள் மூழ்கி இறைவனை அடைந்து மலபரிபாகம் அடைந்து ஈடேறுகின்றது.

சிவராத்திரி அன்று நான்கு சாமப் பூசை நடைபெறும். இது எமது மனம், புத்தி, சித்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களையும் அழித்து இறைவன் எமது உடலென்றும் உலகில் கவ்விய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாகிய இருட்டை நீக்குவதற்கு ஆக தமது சிவஞான ஒளியை சிவராத்திரியிலன்று காட்டியருளி சுடர்சுட ஒளிரும் பொன்போல எமது தேகத்திலுள்ள அழுக்குகளைத் தமது ஞான ஒளியால் நீக்கி சுத்த ஆன்மாவாக்கித் தமது திருவடியின்கண் சேர்த்து அருளுகின்றார். இவ்வுண்மையினையே சிவராத்திரி எமக்கு இயம்புகின்றது. எம்மைப் பீடித்துள்ள இருள் அகல இறைவன் சிவஞான ஒளியினை நாம் பெற வேண்டும். சிவஞான ஒளியினை நாம் பெற வேண்டுமானால் எம்பெருமான் பாததாமரைகளில் தஞ்சம் புகுந்து அவன் திருப்போதுக்கே என்றும் ஆளாகி வாழ்வோமாக!

## என்னதான் முடிவு

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்ததும், மானேஜர் ஊருக்கும், தன் குடும்பத்தினருக்கும் செய்த நல்ல காரியங்களை எண்ணிப்பார்க்கிறான். கடைசியில் அவரை நேரில் கண்டதும், பழிவாங்கும் எண்ணம் மறந்து திருந்தி விடுகிறான். ஒருவன் உனக்குத் தீமை செய்தால் அவனுக்குத் திருப்பி நீயும் அதே தீமையை செய்யாதே; அவனை மன்னித்துவிடு; இந்தப் போதனையுடன் கதை முடிகிறது.

நட்சத்திர நடிகர்கள் யாரும் இன்றி சாதாரண நடிகர்களைக்கொண்டே தரமான ஒரு படத்தைக் கோபாலகிருஷ்ணன் உருவாக்கியிருக்கிறார்.

குமாராகவரும் ஏ. வி. எம். ராஜன், தனது பாகத்தைக் கச்சிதமாக செய்திருக்கிறார். குமாரின் அண்ணனாக வரும் வி. எஸ். ராகவன் வெகு இயல்பாக நடித்துள்ளார். நிர்வாகியாக வரும் குணசித்திர நடிகரான டி. எஸ். பாலையா, முன்னுக்குகெட்டவராகவும் பின்னுக்குதிருந்திவிட்ட நல்ல மனிதராகவும் வருகிறார். திருந்திவிட்ட பெரிய மனிதராக நடிக்கும் கட்டங்களில் பாலையாவின் பண்பட்ட நடிப்பைப்பார்க்க முடிகிறது. ரங்கராஜனாக வரும் வி. கே. ராமசாமி வழக்கம்போலவே நடித்திருக்கிறார். அஞ்சலிதேவி சிறிது நேரம் தோன்றினாலும், தனது பாகத்தை பாராட்டும்படி செய்திருக்கிறார். தமிழ்க் கலையிலுள்ள கலையெடுப்பீர் என்ற சீர்காழி கோவிந்தராசனின் பாடலைத்தவிர ஏனைய பாட்டுக்கள் ஒன்றும் மனதில் படியும்படியாக இல்லை. ஆனால் இந்தப் படத்துக்குப் பாட்டு அவசியம் என்பதும் இல்லை.

கோபாலகிருஷ்ணனின் பொருள் பொதிந்த வசனங்களை ஆங்காங்கே கேட்கமுடிகிறது. 'என்னதான் முடிவு' 1965ம் ஆண்டு குடியரசுத் தலைவர் கேடயம்பெறும் படமாக அமைந்தாலும் ஆச்சரியப்பட இடமில்லை.

என்ன இருந்தாலும், கோபால கிருஷ்ணன் கோபாலகிருஷ்ணன் தான்!

—கோவை மகேசன்.

## இலண்டன்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யான சங்கம் அமைத்தார். இன்று இச்சங்கமே ஆல் போற்தழைத்து அறுகுபோல் வேர் ஊன்றியுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கமாகும். திரு. சிவானந்தசுந்தரம் அவர்களே மொழிவழித் தொழிற் சங்கங்களின் காரணகர்த்தராவர்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளராக கடமையாற்றினார். இப்பொழுது தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சிக்கு தமது பெரும் பகுதி நேரத்தை ஒதுக்கியுள்ளார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முதல் தலைவராகவும், இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதல் இணைப் பொருளாளராகவும். அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் துணைத்தலைவராகவும், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ள இவர் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவர்.

## கண்ணதாசனின் 1001 வது பாடல்

உமையாள் புரொடக்ஷன்ஸ் 'அவன் பித்தனா?' படத்திற்காக கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல் ஒன்று சமீபத்தில் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் பதிவாகியது. கண்ணதாசனின் 1001-வது திரைப் பாடல் இதுவேயாகும்.

மேற்படி பாடலை பி. சுசீலா, டி. எம். சௌந்தரராஜன் பாட, இசை அமைப்பாளர் ஆர். பார்த்தசாரதி 75க்கு மேற்பட்ட வாத்தியக் கோஷ்டியுடன் இசையமைத்திருக்கிறார்.

## சர்வர் சுந்தரம்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்திரத்தின் அப்பாவித்தனத்தைக்கண்டு அவன் மீது ஒருவகைப் பரிதாப உணர்வு கொள்கிறாள்ராதா. சுந்தரம் அதை உணராது, அவள் தன்னைக் காதலிப்பபதாக எண்ணிக் கொள்கிறான். அவளை மணம் முடிப்பதற்கு தனது தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமே சுந்தரத்தை நட்சத்திர நடிகன் நிலைக்கு உயர்த்தியுள்ளது. என்றாலும் இயற்கையாகவே சுந்தரத்திடம் சினிமாப் பைத்தியமும் உண்டு.

சுந்தரத்தின் மூலம் ஒருவரையொருவர் அறிமுகமான ராதாவும், ராகவனும் காதலர்களாக மாறி ஈற்றில் திருமணம் செய்து கொள்கிறார்கள். சுந்தரம் முடிவுவரை தன்னை ராதா காதலிப்பதாகவே எண்ணுகிறான். முடிவில் உண்மை தெரிந்ததும் அவனே முன்னின்று இருவர் திருமணத்தையும் முடித்தும் வைக்கிறான்.

புதுமையான கதை. துணிகரமான முயற்சி. நகைச்சுவை நடிகரான நாகேசைக் கதாநாயகனாக வைத்து படம் எடுப்பதென்றால் அசாதாரணத் துணிச்சல் வேண்டும். ஆனால், நாகேஷ் முதலாளிகள் எதிர்பார்த்ததற்கு மேலாக தனது கடமையை முடித்து 'சபாஷ்' பெற்றுவிட்டார்.

திரைப்படம் எப்படி எடுக்கப்படுகின்றது என்ற நுணுக்கங்கள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றிக் காட்டி விட்டார்கள். இது இரசிகர்களுக்கு திரைப்படத்தின் மீது இருக்கும் மோகத்தை தணித்துவிடும் ஆபத்தான விளையாட்டு.

சர்வர் சுந்தரமாக நாகேசும், ராதாவாக கவர்ச்சிப் பாவை கே. ஆர். விஜயாவும ராகவனாக முத்துராமனும் வருகிறார்கள். இடையிடையே ரங்கராவ், மனோரம்மா ஆகியோர் தோன்றுகிறார்கள்.

விஜயாவும், முத்துராமனும் காதற் கட்டங்களில் வெழுத்து வாங்கி இருக்கிறார்கள். கண்ணதாசன், வாலி ஆகியோரின் பாடல்களுக்கு இரட்டையர்கள் இசை அமைத்திருக்கிறார்கள். பாடல்கள் உள்ளத்துக்கு உவகையூட்டுகின்றன.

சர்வர் சுந்தரம் மூலம் நாகேஷ்தான் ஒரு சிறந்த குணசித்திர நடிகன் என்பதையும் நிலை நிறுத்தி விட்டார்.

சினிமாஸ் திரைகளில் ஓடும் இப்படம் எத்தகைய இரசிகத் தன்மையுடையோருக்கும் விருந்தாக அமையும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

# "சொந்த வாழ்க்கையில் கை வைக்காதீர்"

## பத்திரிகையாளரிடம் சிறீதர் வேண்டுகோள்

"திரையுலகத்தினருக்கும், பத்திரிகையாளர்களுக்குமிடையில், கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. பத்திரிகையாளர்கள், படத்துறையைத் தாக்கினால் நடிப்பில், டைரக்ஷனில், மற்றும் திரைப்படம்சம்பந்தமான விஷயங்களில்உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டினால்—அதைநாங்கள் இரு கைநீட்டி வரவேற்கக் காத்திருக்கிறோம். ஆனால், பத்திரிகையாளர்களே! தயவுசெய்து எங்கள் சொந்த வாழ்க்கையைத் தாக்காதீர்கள்."

சமீபத்தில் போர்முனைக்குச்சென்று திரும்பிய திரைப்படக் கலைஞர்களுக்கு சினிமாப் பத்திரிகையாளர் சங்கம் அளித்த வரவேற்பொன்றில் பேசுகையில், பிரபல இயக்குனரான சிறீதர் மேற்கண்டவாறு கூறினார். சிறீதர் தனது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:—

'பத்திரிகையாளருக்கும் எமக்கும் கருத்து வேறுபாடுகள் இல்லாமற் போகமுடியாது. அந்தப்படத்தில் அப்படி நடித்தது சரியில்லை; இந்தப்படத்தில் இப்படிச்செய்தது நன்றாக இல்லையென்று எடுத்துக்கூறவும் கண்டிக்கவும் உங்களுக்குபூரண உரிமை உண்டு.

வாழ்க்கையில்...

'ஆனால் அதைவிட்டு தனிப்பட்ட முறையில்திரைப்படக் கலைஞர்களைத் தாக்குவது அவர்கள் வாழ்வையேபாதிப்பதாகும். தயவு செய்து எங்கள் சொந்த வாழ்வைத் தாக்காதீர்கள்.

குறைகளைக் கூறுங்கள்

படத்துறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் நாங்கள் அதைத் தலைவணங்கி ஏற்று திருத்திக் கொள்ளக்காத்திருக்கிறோம். அப்படிச் செய்வதால் எங்களுக்கும் நல்லபயன் கிடைக்கும்.

பெருமை

இவ்விழாவில் கலந்து கொண்ட திருஏ. எல். சீனி. வாசன் பேசுகையில் கூறியதாவது:—

'பம்பாயைவிட சென்னையில் உள்ள பத்திரிகைகள் சினிமாவுக்கு அதிகமுக்கியத்துவம் அளித்து வருவது காரணமாக, திரைப்படத் துறைக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. இது பெருமைக்குரிய விஷயம்.

மனநிலை

'திரைப்படக் கலைஞர்களைக் குறைகூறுபவர்களின் கருத்துக்களை பத்திரிகைகளில் வெளியிடும்போது, குறை கூறுபவர் எந்தவிதமான மனநிலையில் அப்படிக் கூறுகிறார் என்பதைத் தெரிந்து வெளியிட்டால் நல்லது.

## சபதத்தை நிறைவேற்றுவேன்

### நாரதர் சபதம்

பிரம்மனும் சரஸ்வதியும் அமர்ந்திருக்கிறார்கள். நாரதர் பிரவேசிக்கிறார். 'தாயே! வணக்கம். உங்களை இன்று பார்க்கவே மகிழ்ச்சியாக இருக்கிறது. லட்சுமிகளை சொட்டுகிறது உங்கள் முகத்திலே' என்று வர்ணிக்கத் தொடங்குகிறார். உடனே சரஸ்வதியின் முகம் மாறி விடுகிறது

'நிறுத்து நாரதா! நான் அறிவின் தெய்வம். என் பெருமையேதனி. அதை மறந்த லட்சுமிமாதிரி இருப்பதாக நீர் எப்படி சொல்லலாம்? அறிவில்லாமல் வெறும் செல்வத்தோடு மட்டும் யாரும் சுகமாகவாழ முடியாது தெரியுமா? என்று கடுமையுடன் கேட்கிறாள் கலைவாணி.



விஜி, உன்கனியிதழ் தரும் சுவையைவிட எனக்குப் பிடித்தது எதுவும் இல்லையென்று ராஜேந்திரன் விஜயகுமாரியிடம்சொல்லுகிறாரோ? விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்குவரவிருக்கும் 'வழிகாட்டியில்' ராஜேந்திரனும், விஜயகுமாரியும் இப்படிக் காட்சி தருவார்கள்.

'தாயே! நாஸ் சொன்னதை நிரூபித்தேதீருவேன். இல்லாவிட்டால் நானும் நாரதன் இல்லை' என்று சபதம் செய்துவிட்டு நாரதர் அங்கிருந்து புறப்படுகிறார்.

இந்தக்காட்சி, வானுலகில் நடக்கவில்லை; சமீபத்தில் சாரதா ஸ்டுடியோவில் நடைபெற்றது. ஏ. பி. நாகராஜன் தயாரிக்கும், 'சரஸ்வதி சபதம்' படத்திற்காகத்தான் இக்காட்சி படமாக்கப்பட்டது. இந்தக் காட்சியுடன் சரஸ்வதியின் சபதத்தை வைகுண்டத்திலே லட்சுமியிடம் நாரதர் எடுத்துச்சொல்லும்காட்சியும்படமாக்கப்பட்டது. சரஸ்வதியாக சாவித்திரியும், லட்சுமியாக தேவிகாவும், நாரதராக சிவாஜியும் நடிக்கும் இப்படம் வண்ணத்தில் தயாராகிறது.

## பாராட்டு விழா

நடிகர் திலகத்தைப் பாராட்டி இம்மாதம் 11ம் திகதி ஓர் கூட்டம் நடத்தியிருக்கிறது தென்னிந்திய நடிகர் சங்கம். சிவாஜியைப் பாராட்டி பல முன்னணி நடிக நடிகைகளுடன், டெல்லி சட்டசபை உறுப்பினரும் தி. மு. க. தலைவர்களில் ஒருவருமான திரு. கி. மனோகரனும் பேசினார்.



"என் காதலுக்கு என்ன முடிவு சொல்கிறாய்?" என்றுகவர்ச்சிப் பாவை கே. ஆர். விஜயாவிடம் கேட்கிறார் நட்சத்திர நடிகரான நாகேஷ். விஜயா என்னதான் சொன்னார் என்பதைசினிமாஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் "சர்வர் சுந்தரம்" தான்விளக்கவேண்டும்.



## 'சர்வர் சுந்தரம்'

பொருளும் புகழும்மனிதனின் அமைதியைக் கெடுத்துவிடுகின்றன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது ஏ.வி. எம். தயாரிப்பான 'சர்வர் சுந்தரம்'.

சாதாரண ஓட்டல் சர்வராக இருந்த சுந்தரம், திடீரென பெரிய நட்சத்திர நடிகனாகி விடுகிறான்.

சர்வராகஇருந்த பொழுது அவனுக்கு இருந்த குறையெல்லாம் 'தான் அழகனல்ல' என்பதே.

நட்சத்திர நடிகனாக அவன் உயர்ந்ததும் ஓய்வு ஒழிச்சலற்ற வேலை. தாயுடன் சற்று நேரம் பொறுமையாக இருந்து பேசுவதற்கே நேரம் கிடைப்பதில்லை. ஆண்டுக்கொருமுறை வரும் தந்தையின் திவசத்திற்குக் கூட அவனால் வீட்டில் இருக்க முடியவில்லை. முடிவில்பெற்ற அன்னையின் மரணத்தின் போதுகூட அவனால் அருகில் இருக்க முடியவில்லை.

இந்த வாழ்க்கையில் வெறுப்படைந்த நட்சத்திர நடிகனான சுந்தரம் மீண்டும் அமைதியைத் தேடி சர்வராக மாறுகிறான்.

சுந்தரம் நட்சத்திர நடிகனாக உயர்வதற்கு ராதாவும், ராகவனும் உதவுகிறார்கள். ராகவன், சுந்தரத்தின் பள்ளித் தோழன். பெரியகம்பனியின் முகாமையாளர். தனது செல்வாக்கைக் கொண்டு சுந்தரத்திற்கு சினிமா உலகை அறிமுகப்படுத்திவைக்கிறான்.

ராதா, சுந்தரம் சர்வராக ஆரம்பத்தில் கடமையாற்றிய கிறீன்லண்ட்ஸ் ஓட்டல் முதலாளியின் செல்வமகள்.

(12-ம் பக்கம் பார்க்க)

## 'என்னதான் முடிவு'

தமிழ்த் திரையுலகில், இப்பொழுது சில காலமாக நல்ல கதைகளையும், மக்களுக்கு வேண்டிய கருத்துக்களையும் கொண்ட படங்களைக் காண்பது அரிதாகிவருகிறது. ஆங்கில நடனங்களையும் ஆபாசமான காதற் காட்சிகளையும், அடிபிடிக் காட்சிகளையும் பார்த்துப் பார்த்து அலுத்துவிட்ட ரசிகர்களுக்கு கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் வெளியீடான 'என்னதான் முடிவு' ஒரு புதுத் திருப்பத்தை நிச்சயம் ஏற்படுத்தும் என்றே கூறலாம்.

நல்ல தமிழ்ப் படங்களை வெளியிட்டு தமிழ்த் திரையுலகின் மானத்தைக் காப்பாற்றி வரும் ஒரு சில தயாரிப்பாளர்களில் திரு. கே. எஸ். கோபாலகிருஷ்ணனும் ஒருவர் என்பது பலரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மையாகும். 'என்னதான் முடிவு' அவருடைய கைவண்ணத்தில் உருவாகி வெளிவந்திருப்பதால் அதில் நல்ல கருத்துக்களுக்குக் கொஞ்சமும் பஞ்சமில்லை. இந்தப்படத்தின் கதை ஏனைய தமிழ்ப்படங்களின் கதைகளைவிட முற்றிலும் மாறுபட்டிருக்கிறது.

பொய் சொல்லாத தன்னைப் பொய்யன் எனத் தன் அண்ணன் சொன்னதைச் சகிக்கமாட்டாத குமார் வீட்டைவிட்டேகிறான். ரங்கராஜன் என்ற பணக்காரர் தொடர்பேற்பட்டு, அவரது காரியதரிசியாகிறான். ரங்கராஜனின் சொத்தை அபகரிக்க அவரது மானேஜர் செய்த சதிக்கு இரையாகி, கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு ஆயுள்தண்டனை பெறுகிறான் குமார். மானேஜர் மனம்மாறி நல்லவராகி அவருக்குப் பல நன்மைசெய்கிறார். மானேஜரைப் பழிவாங்கத் துடித்துக்கொண்டிருந்த குமார் சிறையிலிருந்து

(12-ம் பக்கம் பார்க்க)



# உறங்குவதற்கும் விதி முறைகள் உண்டா?




பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

கே. பாலசுந்தரம்,
பருளை.

கே: என[illegible]பர், ஆண்கள் சயனி[illegible]ம்போது மல்லாந்தும், [illegible]ண்கள் சயனிக்கும்போது குப்புறவாகவும் படுக்கவேண்டும் என்கின்றுர். உடலியல் நோக்கிப் பதிலளிப்பீர்களாக. சயனவிதெக்குச் சரியான இலக்கண விதியாது?

ப: உடலியல் தத்துவரீதியில் ஆணோ அன்றிப் பெண்ணோ குப்புறவோ அன்றி மல்லாந்தோ படுப்பது நன்றல்ல. இருபாலாரும் ஒருபக்கமாகச் சாய்ந்து படுப்பதே சிறந்தது. குப்புறப் படுப்பதனுல் சில கெட்ட எண்ணங்கள் ஏற்பட இடமுண்டு ஆனுல், குளிர்காலங்களில் குப்புறப்படுப்பது தவிர்க்க முடியாத ஒன்று. இதனுல் இருதயம் குளிருக்குத் தாக்கப்படாது பாதுகாப்பாக இருக்கும். இஃதேபோல் மல்லாந்து படுப்பதால் சிலருக்கு சுவாசாசயசம்பந்தமான ரோகங்கள் ஏற்படுவதாக அறியமுடிகின்றது.

தன்னைமறந்த உறக்க நிலையில் பொதுவாக யாவரும் சரிந்து ஒருபக்கமாகப்படுப்பதையே காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே பெண்ணுக்குவேறும் ஆணுக்குவேறுமான நிலை இயற்கை நிலை. வரம்புக்கு அப்பாற்பட்டது எனலாம்.

திருமதி. நாதன்,
கல்-எலிய.

கே: திருமணமான என் வயது 20. மாதவிடாய்வரும் போது 2-3 நாட்களுக்குமுன் நாரிக் கொதியும், வயிற்றுக் குத்தும் வருகின்றது. பின்பும் இப்படியே வருகின்றது. மருத்துவரீதியில் கூறவும்.

ப: இது கெர்ப்பை சம்பந்தமாக ஏற்படும் நோயாகும். இது இன்றுள்ள நாரீமணிகள் யாவருக்கும் இருக்கின்றது. கருப்பைக்கு சரியான அளவு அப்பியாசம் இன்மையாலும், தகுந்த போஷாக்கின்மையாலும், மாதவிடாய் காலங்களில் ஓய்வின்மையாலும் ஏற்படுகின்றது. இதை ஆங்கிலத்தில் 'டிஸ் மனேறியா' என்பார்கள் இக்காலங்களில் அடிவயிற்றில் சுடுநீர் ஒத்தடம் சிறந்தகுணத்தைததரும். இலகுவில் செமிக்கக்கூடிய உணவு அவசியம்.

குறிஞ்சாய் இலை, அல்லது நழுந்தாளி இலை இவற்றின் சாறுவிட்ட பிட்டு, களி, கூழ், சிறந்த குணத்தைத்தரும்.

க. கயலா, நெல்லியடி.

கே: பதினன்கு வயதினனுகிய எனக்கு கடந்த இரு வருடங்களாக கால் நரம்புகளும், கை நரம்புகளும் அடிக்கடி வலிக்கின்றன. என்ன செய்தல் வேண்டும்.

ப: நீங்கள் தகுந்த வைத்தியரிடம் நேரடிச் சிகிச்சை பெறுதல் நன்று.

சு. சிவகுமார்,
சுன்னுகம்.

கே: நான் ஒரு மாணவன், கால்சட்டை அணிந்தவுடன் எனது இரு விதைகளும் நன்ருகக் கடிக்கின்றன. இதற்கு என் செய்யலாம்.

ப: நன்கு சுத்தமான கால் சட்டை அணிதல் நலம். சிலேப்பேன் முதலியவை அவ்விடங்களில் இருந்தாலும் மிகவும் கூடுதலாக கடிக்கும். எனவே தினசரி குளித்தல் அவசியம் அத்துடன் உடுப்புகள் சுத்தமாக இருப்பது அவசியம். கால்சட்டை அணியுமுன் மென்மையான துணியிலாலான சஸ்பென்ரர் அணிவது நன்று. இறுக்கமான உடை நன்றல்ல.

ம. அன்னம்மா,
சில்லாலை.

கே: என் வயது 15. இன்னும் மணமாகவில்லை. இருமலும், இழுப்பும் உண்டு. நெஞ்சு முட்டாக இருக்கின்றது. விரிவான ஆலோசனை கூறவும்.

ப: இது ஆஸ்மா ரோகத்தின் அறிகுறியாகும். எனவே குளுமையான உணவுவகை நன்றல்ல. இறுல், நண்டு, பால்—முட்டை—வெண்டிக்காய் நன்றல்ல. இரவில் வயிறு புடைக்கச் சாப்பிடக் கூடாது. குளிப்பு மிதமாக இருத்தல் அவசியம். வெந்நீர் பாவிக்கவும். வீட்டில் பூனை—நாய் வளர்ப்போருக்கும் அலேஜிக் தன்மையால் ஏற்படுமாதலால் அவற்றை விரும்பி வளர்ப்பது நன்றல்ல. சிலருக்கு ஒருவகை பூவின் மணத்தினுலும் இந்த ரோகம் ஏற்படும். எனவே அனுபவத்தின்படி எவை எவை கூடாதனவோ அவற்றைத் தவிர்க்கவும்.

எஸ். தவபாலன்,
அன்னமலை.

கே: மணமான அக்காவுக்கு இரு காலும், இரவில் எரிவதுபோன்ற வேதனை. இதற்கு என்ன செய்யலாமென தயவுசெய்து கூறுங்கள்.

ப: நரம்பு ரோகத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் இவ் வியாதிக்கு தகுந்த நேரடியான வைத்தியமே சிறந்தது.

ஆ. மரியநாயகம்,
யாழ்ப்பாணம்.

கே: எனது வயது 23. 13-14 வயதிலிருந்து வாய்க்குள் புண்கள் இருந்துகொண்டேயிருக்கின்றது. என்ன செய்தல் வேண்டும்?

ப: சிறுவயதிலிருந்து ஏற்பட்டிருந்தால் தகுந்த ஒரு வைத்தியரின் நேரடிச் சிகிச்சை சிறந்தது. உணவுவகை பிரதானம்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

# சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும். பின்னேரம் போலை அவன் நாகனை கையோடை கூட்டியந்து கொத்திப்போட வேணும்' என்று தான் ஆச்சி கூடச்சொல்லுவாள். ஆனுல், செந்தில் நாதன் நாகன் வந்து 'நாலு காசு அடிச்சுக் கொண்டு' போகாதபடி செய்துவிடுவார்.

குளிச்சு முடிந்து, ஈரம் துடைத்து, சாரனை கட்டி நல்லவடிவாக நெற்றி முழுவதும் விபூதியை அப்பிக் கொண்டு அடுக்களைப் பக்கம் வருகின்றுர். அவர் கந்தோருக்குப் போகும் பொழுது கூட ஒரு பொட்டுக் 'கணியம்' விபூதி அணிந்து செல்வது வழக்கம்.

'என்ன, இஞ்சை அடுப்படியுக்கை வாறீங்கள். நான் மேசைக் கல்லோ எடுத்தரலாம் எண்டு யோசிச்சம்.'

'இனிச் சாப்பாட்டை மேசைக்கு இழுத்துப்பறியுங் கோவன். திருவலைக் குத்தியை எடுத்துப் போடனை. நான் குசினிக்கை இருந்து சாப்பிடறன்.'

குசினிக் குந்திலே கிடந்த திருவலைக் குத்தியைத் துடைத்துப் போடுகிருள். செந்தில் நாதன் அதில் குந்துகிறுர். அவருக்கு முன்னுல் ஓலைப்பெட்டியொன்று கவிழ்த்துப் போடப்படுகின்றது அதன்மேல் வாழை இலைத்துண்டு போடப்பட்டு, உணவுபரிமாறப்படுகின்றது.

செந்தில்நாதனுக்கு 'ஆருத'க் கறியோடு சாப்பிடுவது சற்றுக் கஷ்டமான சங்கதி. வெளளிக்கிழமை மத்தியானம்மட்டும் ஒருமாதிரியாகச் சரிக்கட்டுவார் இரவு நேரத்திற்கு ஒரு முட்டையென்ருலும் பொரிக்கச் சொல்லித்தான் சாப்பிடுவார்.

'கறியளும் கொஞ்சம் அருமபட்டுத்தான். ராவைக்குப் புள்ளையளுக்கு இடியப்பம் புடிக்கும் எண்ட நிலைப் பிலை அள்ளி வைச்சுட்டன்... கிரைக்கறிதுப்பரவாமுடிஞ்சு போச்சு. ராவைக்கும் வைச்சால் கிரைக்கறி சழிச்சுப் போறது...உங்களுக்காகத் தான் இப்ப அப்பளத்தையும் மோர் மிளகாயளையும் பொரிச்சன்...பசிக் கேட்டுக்குச் சமாளிச்சுக்கொண்டு சாப்பிடுங்கோ...ராவைக் குப்பாப்பம்...' என்ற அன்னலட்சுமி சொல்லிக்கொண்டிருக்க, செந்தில்நாதன் ஒரு மாதிரியாகத் தமது சாப்பாட்டை முடித்தார்.

சாப்பிட்டு சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்தார். அன்னலட்சுமி வெற்றிலைத் தட்டுடன் வந்து சுவரிலமுதுகைச் சாத்தியபடி குந்தினுள்.

காசைப் 'பெட்டக'த்தில் பத்திரப்படுத்தி, அதனுடன் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளை மனதிலே பதித்துக்கொண்டு செல்லப்பாக்கிய ஆச்சி வெளியே வந்தாள்.

'இதென்ன புள்ளை? நீ உதிலை ஆறுதலாய்க் குந்தியிருக்கிருய்? ரயிலில் அடிபட்டுவந்த மனுஷனல்லே. பாயைத் தட்டிப்போட்டு விடன் ஆறுதலாக் கொஞ்சம் சரியட்டன்' என்று செல்லப்பாக்கிய ஆச்சி சொல்லுகிருள்.

'ஓமப்பா, எனக்கும் நித்திரைமயக்கமாக கிடக்குது.'

செந்தில்நாதன் பாயிலே படுத்துக் கண்களை மூடிக்கொண்டு சயனிக்கத் தொடங்கினுர்.

'புள்ளை, புள்ளையளைச் சத்தம் போட்டு விளையாட விடாதை...நல்லா அயந்து போனுல், விளக்கு வைக்கிற நேரத்துக்கு எழுப்பி விடு' என்று செல்லப்பாக்கிய ஆச்சி கட்டளை பிறப்பிப்பது அயர்ந்துபோகும் செந்தில் நாதனின் செவிகளிலே விழுகின்றது.

செல்லப்பாக்கிய ஆச்சியை நன்றியறிதலுடன் நினைத்துக் கொள்ளுகின்றுர். 'சாயந்திரம் போலை ஒருக்காக் கடற்கரைப் பக்கம் போவம்' என்ற எண்ணத்தை மனதிலே இருத்தியவாறு அயர்ந்து நித்திரை கொள்ளலானுர்.




# தன்மொழித் திணைக்களமும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியில் பற்றுக்கொண்ட ஒருவர் 'ஆட்டுகுட்டி வேட்டியைக் கடிக்கின்றது ஓட்டு ஓட்டு" என்பதற்குப் பதிலாக 'ஆஷ்ட்டுக் ஒஷ்ட்டி வேஷ்ட்டியைக் கடிக்கின்றது ஒஷ்ட்டு, ஒஷ்ட்டு' என்ருராம் அந்த நிலை அரசாங்க மொழி பெயர்ப்புப் பகுதியினருக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகும். மொழி பெயர்ப்புப் பகுதியினர் மொழியை வளர்க்க வேண்டுமெனில் பின்வரும் கருத்துக்களை ஏற்க முடியுமானுல் ஏற்றுக் கொள்ளலாம்.

(1) மொழி பெயர்க்கும் போது எல்லாவற்றுக்கும் நேரடிச் சொல்லை தேர்ந்தெடுக்க அதிகம் செலவு செய்ய வேண்டியதில்லை. முக்கியமானவற்றுக்கு கடன் வாங்கும் சொல்லைத் தமிழுருப்படுத்தலாம்.

(2) மொழி பெயர்ப்பில் கலைச் சொற்களைப் படிப்படியாக கொண்டுவரல். தற்போதய நிலை திணிக்கப் படும் நிலையை ஒத்திருக்கின்றது.

(3) இயன்றவரை இலகுவான, எளிதில் விளங்கக் கூடிய நடையைக் கையாளுதல். அதிகமாக புத்தகங்கள் விலைப்பட வேண்டுமெனில் விலையுயர்ந்த கடதாசித்தாள்களை வாங்கிப் பணத்தை விரயம் செய்யாமல் இந்தியாவில் எவ்விதமுறையைக் கையாளுகின்றனரோ அவ்வாறே மொழி பெயர்ப்புப் பகுதியாரும் செய்யலாம். அதைத்தான் கீழ் வகுப்பு முதல் பல்கலைக் கழகம்வரை மாணவர்களும் விரும்புவர்.

### கல்விக் கொள்கை

கல்விக் கொள்கை, மாறும் அரசாங்கங்களின் தன்மைக்கேற்ப அமையுமாயின் அது ஒழுங்கற்ற தன்மையாகவே அமையும். நாட்டின் நலன் கருதி வகுக்கப்படும் கல்வி சகல இன சமூக மக்களுக்கும் பொதுவான தன்மையை உடையதாக இருக்கவேண்டும். அத்துடன் மனிதனது சிந்தனையின் வளர்ச்சிக்கும். ஒரு மாணவனின் ஆற்றலுக்கேற்ப அவனை அத்துறையில் ஈடுபடுத்தும் தன்மையிலும் அமையவேண்டும். இக்கொள்கைதான் இன்று பெரும்பான்மையான நாடுகளில் கடைப்பிடிக்கும் கொள்கையாக அமைந்திருக்கின்றது. கல்வி இலாக்காவின் திட்டங்கள் நாட்டின் நன்மை கருதி இருக்கவேண்டும். அத்துடன் அது அரசியல் ரீதியில் பாதிப்புறுமலும் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

மொழியைப் பொறுத்தவரை எல்லா மொழிகளையும் ஒரே தன்மையில் கணிக்கும் நிலைதான் இன்று கல்வி இலாக்கா கடைப்பிடிக்கும் கொள்கையாக அமைந்த போதும் அதுதான் தொடர்ந்திருக்க வேண்டும் என்பது நமது பூரண முடிவாக அமையாது. எல்லா மொழிக்கும் சமத்துவம் கொடுக்கும் போது அங்கு எல்லா மொழிகளையும் அதே நோக்கில் தான் கணித்தல் வேண்டும். சாதாரண கல்விப் பொதுத் தராதரப் பத்திர தகுதியுடைய மாணவனிடம் மொழியியலைப் பொறுத்தவரை அவன் எல்லா இலக்கணங்களையும், அறிந்திருக்க வேண்டும் என்பதையும் எதிர்பார்க்க முடியாது. இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவன் தமிழை அறிந்து கொண்டான் அல்லது அவன் கற்கும் மொழியை அறிந்து கொண்டான் என்பதமல்ல. மொழியைப் பற்றி பொதுவாக மேலோட்டமாகத் தான் சாதாரணப் பரீட்சையில் (ஜி. சி. ஈ) சித்தியடைந்த மாணவனுக்குத் தெரியும். பல்கலைக் கழகத்தில் அவனது படிப்பு முடியும் போது குறிப்பாக ஒரு மொழியைவிசேடமாகக் கற்றுத் தேர்ச்சியுறும் போது தான் அம்மொழியைப் பற்றிய பெரும்பான்மை அறிவையும் பெற்றுக்கொள்கின்றுன்.

இறுதியாக நமது நோக்கு தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் அதே வேளையில் மற்றப் பிரதான மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து கல்விப் பகுதியும் மொழி பெயர்ப்புப் பகுதியும் நாட்டின் நன்மைக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும் என்பதாகும். அவ்வாறு செயல்படும் பட்சத்தில் தான் எமது தாய் மொழி மூலம் கற்கும் கல்வியின் சிறப்பு மேலும் அதிகரிக்க வாய்ப்பாக அமைவதுடன் உண்மையான தாய் மொழிக் கல்வியின் சாத்தியத்தைப் பெறவும் வாய்ப்பேற்படும்.

# முதலாளிகள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலரது துணையைப் பெற்றேயாக வேண்டும்.

இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணமாக இருப்பவர் காங்கிரஸ் கட்சித் தலைவர். இப்பிரச்சினைகள் பூதாகாரமாக உருவெடுக்கா திருப்பதற்கும் காரணம் காங்கிரஸ் தலைவர்தான். சூத்திரப் பாவையை எப்பொழுது ஆட்ட வேண்டுமென்ற சூட்சுமத்தை உணர்ந்தவராக இந்திய அரசியலில் விளங்குகிருர் திரு.காமராஜர். அகில இந்தியாவையும் ஆட்டிப் படைக்கும் ஒரு சனநாயக சர்வாதிகாரியாக நம்மவர் ஒருவர் இருப்பது நமக்கும் மகிழ்ச்சியே.

(முற்றும்)




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

காதரின் தனது தந்தையின் வீட்டுக்கு வந்துவிட்டாள். தந்தையும் ஒரு பண்ணைச் சொந்தக்காரர். அவரது பண்ணையில் ஏராளமான செம்மறி ஆடுகளும், உயர்ந்த இனக் கோழிகளும், பசுக்களும்வளர்க்கப்பட்டன அவற்றை வளர்க்கப் பல வேலையாட்களும் இருந்தார்கள். அவரிடம் ஒரு அழகான அரேபியன் குதிரையொன்று இருந்தது. வெண்மையும், மண்ணிறமும் கலந்து தயாரித்த வர்ணத்தைப் பூசினாற் போல அவருடைய குதிரை அழகாக இருந்தது. சாயங்காலங்களிலே அதன் மீதுஏறி எட்வர்ட் மன்னர் போலத் தனது பண்ணையைச் சுற்றி வருவது தான் அவரது வேலையாக இருந்தது. ஏனையநேரத்தில் வீட்டிலுள்ள முதிய மனைவியுடனும், வருவோர் போவோருடனும் அலட்டிக் கொண்டிருப்பார். அவரது அலட்டலுக்கும், மோல்டனிற்கும் சிறிதும் ஒத்துப் போகாது. அதனாலேதான் மோல்டன் தனிமையான வயல் வெளிவீட்டைத்தேர்ந்தெடுத்தார்.

இப்பொழுது காதரின் அவரது வீட்டுககுப் போனதும் அவருக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. 'ஏன்வந்தாய்? 'மோல்ட்' எங்கே? லோமைன் எங்கே'? என்றெல்லாம் கேள்விக்கணைகளைத் தொடுத்தார் பொலிஸ் அதிகாரிஎச்சரித்தகாரணத்தினால் பறக்கும் தட்டு விவகாரத்தை வெளியில்விட இப்பொழுது இருக்கும் வீட்டிற்கு வந்தது. அதை உடைத்துப் பார்க்காமலேயே, அவளிடம் கொடுத்து விட்டார் தந்தை. அவள் அதை உடைத்து வாசித்தாள். ஒருசிறிய வெண்ணிறத் தாளிலே பச்சை மையினால் எழுதப் பட்டிருந்தன:—

'விரைவில் மோல்டன் விடு வருவார்; புதிய மனிதராக. பழைய வீட்டுக்குச் சென்று வசிககவும்... புதிய வீட்டிலே வசித்தால் லோமைன் திரும்புவது சந்தேகம் எந்த விஷயத்தையும் எவருக்கும்

## அரியாலையூர் த. இந்திரலிங்கம்

வில்லை. மோல்டன் லோமைனுடன் இங்கிலாந்துக்குஉலக சர்வதேசப் பொருட்காட்சியைப் பார்க்கப் போய் விட்டார் என்று கூறிச் சமாளித்தாள். 'அப்படியெதுவும் அங்கே நடப்பதாகத் தெரியவில்லையே' என்று அவர்கேட்கமாட்டார். ஏனெனில் அவருக்கும் செய்திப்பத்திரிகைக்கும் வெகு தூரம். அதாவது அவரது கண் சமீபத்தில் உள்ள பொருட்களைத் தெளிவாகப் பார்க்கமாட்டாது.

காதரின் ஜாஸ்மைனிடமும் நன்ருக எச்சரித்து விட்டிருந்தாள. அவள் அறிவு வளரும் பருவத்தில் இருந்ததால் விஷயத்தை இலகுவிற்புரிந்து கொண்டாள். எனினும் காதரின், ஜாஸ்மனையும் தந்தையையும் தனியே இருக்க விடவில்லை. அவர் ஏதாவது பூச்சாண்டி காட்டி விஷயத்தை வரவழைத்துவிட ககூடியவர் இப்பொழுது,காதரி-னுக்கு அந்த வயல வெளித் தனி வீட்டைப் பற்றி நினைக்கவே பயங்கரமாகஇருந்தது' எனினும் இன்னும் அவளது குடும்பப் பொருட்கள் யாவும் அங்கே தான் இருந்தன.

சில நாட்களின்பின் காத-ரினுக்கு ஒரு கடிதம் அவள் கூற வேண்டாம்...கூறினல் நம்பவும் மாட்டார்கள்' வாக்கியங்கள் எண்ணிஎழுதியதைப் போலச் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தன. வாக்கியத்தின் கீழே பச்சை மையிலே புரியாத ஒரு மொழியிலே கையெழுத்து இடப்பட்டிருந்தது. முதலில் கடிதத்தின் எழுத்துகள் ஜப்பானிய மொழியில் முறித்து, எழுதப் பட்டிருந்தன. அதைப்பார்த்த காதரினுக்கு அந்தப் பச்சை மயினூடாகப்பறக்கும் தட்டிலிருந்து இறங்கிய மனிதனின் பசுநீல விழிகள் தன்னையே உற்றுப் பார்ப்பது போலத் தோன்றியது. அதை மடித்து உறையினுள் வைத்து, ஸ்டெலின் வந்ததும் அவனிடம் கொடுத்தாள். ஸ்டெலின் அதைக் கவனமாக வாசித்து விட்டு அதைத் தன்சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். பின்பு தாயிடம், 'அம்மா! நாம் இங்கு இருப்பதால் விஷயம் வெளியாகுமே தவிர வேறெதுவும் பயனில்லை. ஆதலினல் நாம் அங்கேயே போய் இருந்து விடலாம். நம்மால் ஏன் வீணாக நமது லோமைனுக்குத் துன்பம் வரவேண்டும்? அதைவிட, நாம் அங்கு இருந்தால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முதலானோர் எம்மிடம் வருவதும் தொல்லையாயிருக்கும்...' என்ருன்.

காதரின் யோசித்தாள். பின்னர், 'இந்தப் பாவிகள் எவருக்கும் விஷயம் தெரியக் கூடாது என்று பயமுறுத்தியிருக்கிருர்களே! அப்படியிருக்கப் பொலிசுக்கு அறிவித்தது தெரிந்தால் அவருக்கும், லோமைனுக்கும் என்ன செய்வார்களோ!' என்ருள். ஸ்டெலினிற்கும் கவலையாகத்தானிருந்தது, பிறகு, 'அப்படியெதுவும் நேராதம்மா! இந்த விஷயத்தைத் துப்பறியும் அதிகாரி மகா நிபுணர்...நாம் அங்கே பழைய வீட்டுக்கே போய் விடுவோம்...' என்ருன். பின்னர் அக்கடிதத்தை எடுத்து நோக்கினன், அக்கடிதம் டோக்கியோவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறதென பலத, அதனில் அச்சிட்டிருந்த தேதி முத்திரையைக் கொண்டு (DATESTAMD) அறிந்துகொண்டான். அப்படியானல்...அவர்களும் டோக்கியோவிற்ருன் இருக்கவேண்டும்... ஸ்டெலின், ஜோர்ஜின் ஸ்கூட்டரை இப்பொழுது தானே வைத்துக்கொண்டான். அவனுடைய தேவைகளை யுணர்ந்த ஸ்டெலினும் ஸ்கூட்டரைக் கேட்கவில்லை

காதரின் தன்னுடைய பொருள்களையெல்லாம் எடுத்து ஒரு டிரங்க்பெட்டியினுள் போட்டுப் பூட்டித் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள். காதரினின் தந்தைக்கு எதுவும் புரியவில்லை. திடீரென வந்தாள்; திடீரெனப்போகிருள் என்று எண்ணியபொழுதிலும் விபரீதமாக எண்ணவில்லை. ஜாஸ்மைனின் கன்னத்தில் ஒரு முத்தமும், கையில் ஒரு பியேர்ஸ் பழமும் கொடுத்து மகிழ்ச்சியுடன் அனுப்பிவைத்தார்.




## இளமையும் உலகமும்

குரங்கின் வயிற்றில் தலைகீழாய்த் தொங்கிக் கொண்டிருந்த குட்டி, ஒரு நாள் தன் தாயைப் பார்த்து 'அம்மா, நீயோ நிலம் கீழே இருக்கிறது என்கிருய்... எனக்கு என்னமோ வானந்தான் கீழே தெரிகிறது. நீ வேரிலிருந்தே மரம் ஆரம்பமாகிறது என்கிருய்...எனக்கு இலைகளிலிருந்துதான் மரம் துவங்குவதாகத் தோன்றுகிறது...இதேனம்மா இந்த மாற்றம்?' என்று கேட்டது

அதற்குத் தாய்க்குரங்கு பதில் கூறியது, 'மகனே! சின்ன வயதில் எல்லோருக்கும் உலகம் தலைகீழாகத் தெரிவது இயற்கைதான்... வயது போகப்போக அனுபவத்தில் நீ சரியான உலகத்தைக் கண்டு கொள்வாய்!'

—காசி. ஆனந்தன்

## நல்ல பாடம்

—சாரதா கையூம்—

வெள்ளை வெள்ளை நாய்க்குட்டி
வாங்கி வந்த நாய்க்குட்டி
தொல்லை இல்லா நாய்க்குட்டி
தோழனான நாய்க்குட்டி

சின்னப் பிள்ளைப் போலவே;
சேர்ந்து வாழும் நாய்க்குட்டி
சொன்ன வேலை முழுவதையும்,
செய்யு மிந்த நாய்க்குட்டி.

நன்றி கெட்ட மாந்தர்க்கு,
நல்ல பாடம் நாய்க்குட்டி
உண்மை யாக உழைத்திட,
உறுதி யான நாய்க்குட்டி.

# உங்களுக்குத் தெரியுமா?

## பட்டியல் தயாரிக்க 105 வருடங்கள்

உலகிலே உள்ள வாசிகசாலைகளில் அதிகமான நூல்களைக் கொண்ட வாசிகசாலை பிரிட்டனில் உள்ளது. அவ்வாசிகசாலையில் உள்ள [illegible] களின் தொகை ஐம்பது லட்சமாகும். வருடத்[illegible] ஐம்பதினுயிரம் நூல்கள் வரை வாசிகசாலைக்கு [illegible] சேர்கிறது இந்நூல்களின் பட்டியல் 1931-ம் [illegible]ண்டில் தயாரிக்க ஆரம்பித்தனர். இன்னும் அப்பட்டியல் முற்றுப் பெறவில்லை. அப்பட்டியலை எழுதி முடிக்க 2036-ம் ஆண்டுவரை செல்லுமென எதிர்பார்க்கின்றனர் அப்பட்டியலைத் தயாரிப்பவர்கள். அவ்வாசிகசாலையிலுள்ள நூல்களை ஒன்றன் பின் ஒன்ருக அலுமாரியில் வைத்தால் எவ்வளவு தூரம்வரை செல்லும் தெரியுமா? அறுபது மைல் வரை நீளுமாம்.

## நத்தையின் வேகம்

நம் நாட்டிலே உள்ள நத்தை ஒரு இடத்தில் இருந்து இன்னெரு இடத்துக்கு நகருவதற்கு எவ்வளவு நேரம் செல்கிறது தெரியுமா? மணித்தியாலம் இருபத்திமூன்று அங்குல தூரமே அதன் குறைந்த வேகம் என்று பிரிட்டன் கணக்கெடுப்பாளர்கள் கணித்துள்ளார்கள். அதன் கூடிய வேகம் எவ்வளவு தெரியுமா? மணிக்கு ஐம்பத்திஐந்து கஜம் செல்லுமாம்.

## மூளையின் சக்தி

நமது மூளையின் சக்தி அபாரமானது. மனிதன் மூளையில் எவ்வளவு விஷயங்கள் வேண்டுமானலும் புகுந்து தங்கி இருந்துகொள்ளும். மனிதன் எழுபது வயதை அடையும் போது அவன் மூளைக்குள் 15,00,000,00,00 000 நினைவுகள் புகுந்து கொள்கின்றன. இவ்வளவு அபார சக்தி வேறு எந்த உயிரினத்துக்கும் கிடையாது.

## அதி சிறிய பூச்சி

உலகத்தில் உள்ள சீவராசிகளின் தொகை எவ்வளவு தெரியுமா? 8600 என உயிரியல் ஆராய்ச்சியாளர் அறிவித்துள்ளனர். இவற்றில் மிகச் சிறியது எது தெரியுமா? 'பேட்புல் டேர்விங்' என்ற பூச்சியாம். இதன் நீளம் ஒரு அங்குலத்தில் 128ல் ஒரு பாகமாகும். ஊசித் துவாரம் இதிலும் பெரியதாகும். அதனல் ஊசித் துவாரத்தின் ஊடாய் இப்பூச்சி சென்றுவிடுமாம்.

## காற்றின் வேகம்

இனிமையான தென்றல் என்கிறோம். அவ்விதத் தென்றலின் வேகம் எவ்வளவு தெரியுமா? மணிக்கு சுமார் ஆறுமைல் வேகம், சாதாரணமாக வீசும் காற்றின் வேகம் மணிக்கு பன்னிரண்டு மைல் வேகம் கடுமையான காற்றின் வேகம் மணிக்கு சுமார் இருபது முதல் இருபத்தைந்து மைல் வரை வீசும். புயல் காற்றின் வேகம் நாற்பது மைல் வேகத்திலும், சூறுவளி சுமார் அறுபது முதல் எழுபது மைல் வேகத்திலும் வீசுமென வானிலை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

## பெரிய மீன் எது?

உலகிலேயுள்ள மீன்களில் பெரிய மீன் எது தெரியுமா? 1929-ம ஆண்டில் கேப்டவுனில் கண்டு பிடிக்கப்பட்ட 'வேல் ஷார்க்' என்ற மீனே! இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? நாற்பத்தைந்து அடி நீளமும் 60 டன் எடையும் கொண்ட இம் மீன்தான் மிகப் பெரிய மீனுகக் கண்டுபிடிக்கப்பட்டது.

## சிறிய மீன் எது?

உலக மீன்களில் மிகச் சிறிய மீன் பிலிப்பைன் தீவுக் குப்பத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இச் சிறிய மீனின் பெயர் 'கோபி' என்பது. ஒன்பது மில்லி மீட்டர் நீளமும், ஆறு மில்லி கிராம் எடையுமுள்ள இம் மீனைத்தான் சிறிய மீனெனக் கண்டு பிடித்துள்ளனர்.

## ரொக்கட்டின் வேகம்

அண்மைக் காலங்களில் நம் இலங்கையின் மீது பறந்த ஜெட்டின் வேகத்தைக் கண்டு அங்கலாய்த்தவர்கள் பலர். இவர்கள் ரொக்கட்டின் வேகத்தைக் கேட்டால் அதிர்ச்சியடைவர். ரொக்கட்டின் வேகம் மணிக்கு 25,000 மைலாகும். இவ்வேகம் போதாது இன்னும் மணிக்கு 30,000 மைல் போக வேண்டுமென்று இப்பொழுது ஆராய்ச்சி நடந்து வருகின்றது. இவ்வாராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகளும், ரஷ்ய விஞ்ஞானிகளும், ஈடுபட்டுள்ளனராம்.


தொகுப்பு:
சி. சண்முகலிங்கம்

## இப்பொழுது காட்[?]க்கப்படுகிறது

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாசா [வெள்ளவத்தை] நவா [கும்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] மொடேன் [பண்டாரவளை]

மோடேன் [பதுளை] விஜிதா [அட்டன்]




ஏவிஎம் புரொடக்‌ஷன்ஸ்

# சர்வர் சுந்தரம்

AVM PRODUCTIONS

டைரக்‌ஷன் கிருஷ்ணன் பஞ்சு

இசை விஸ்வநாதன் ராமமூர்த்தி. பாடல்கள் கண்ணதாசன். கதை வசனம் K.பாலசந்தர். காமிரா S.மாருதிராவ். தயாரிப்பு குகன் பிலிம்ஸ்

# எழுச்சியூட்டும் 8வது வாரம்!

செல்லமகால் (கொழும்பு) வின்ட்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு)

றீகல் (கம்பளை) பிறின்செஸ் (அட்டன்) றீகல், (நுவரெலியா) கிங்ஸ் (பதுளை)

ஆகிய திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்—ஜெயலலிதா—நாகேஷ்

ஆகியோர் நடித்த

பத்மினி பிக்சர்ஸ்

# ஆயிரத்தில் ஒருவன்

(ஈஸ்ட்மென் கலர்)



## கொழும்பில் 10வது வாரம் கெபிட்டி திரையில்

ஜெமினி கணேசன்—தேவிகா—முத்துராமன்—நாகேஷ்—ரங்கராவ்—ராஜம்மா

நடிக்கும்

ஜெமினியின்

# வாழ்க்கைப் படகு

# இப்பொழுது ஜனசமுத்திரம் முட்டி மோதும் தியேட்டர்களில்

ஜெஸீமா [கிராண்பாஸ்] ஈரோஸ் [பாமன்கடை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] லிபேர்டி [ஹட்டன்] ஆனந்தா [கம்பளை]

சனி 26-ம் திகதி முதல்: ஜோதி திருகோணமலை

★ கையினில் சக்தி வேலெடுத்தே - எம்
★ கலை தனில் விழுந்த களையெடுக்கவே
★ வாரீர்! ரசிகப் பெருமக்களே! திரண்டு வாரீர்!

★ தமிழ்ப்பட உலகின் மானத்தைக்காப்பாற்றும் விதத்தில் 'என்ன தான் முடிவு' மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது." —கல்கி.



'எந்தமிழர் நல்ல தமிழ்ப்படம் எடுப்பாரா?' என்று ஏங்கி நின்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் இன்று உயிருடன் இருந்தால் 'இதோ ஒரு நல்ல தமிழ்ப்படம்' என்று ஏத்திப் புகழ்ந்திருப்பான்!

தமிழ்த்திரை ஜாம்பவான் துடிப்புள்ள இளைஞர்

## டி. எஸ். பாலையா - ஏ. வி. எம். ராஜன்

வி. எஸ். ராகவன் - வி கே. ராமசாமி
அஞ்சலிதேவி - வசந்தி பி. ஏ. - ஜி. சகுந்தலா
நிர்மலா - கே. கண்ணன் - மாஸ்டர் ஸ்ரீதர்
பேபி மகாலட்சுமி,

இசை: ஆர். சுதர்சனம்

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், சிர்காழி கோவிந்தராஜன், பி. சுசிலா - எல், ஆர். ஈஸ்வரி



பாடல்கள்: கொத்தமங்கலம் சுப்பு, மாயவநாதன்

ரவி புரொடக்‌ஷன்ஸ்

# என்னதான் முடிவு

திரைக்கதை-வசனம் டைரக்‌ஷன்..... K.S.கோபாலகிருஷ்ணன்

இறுதி முடிவை யாருக்கும் சொல்லி விடாதீர்கள்!

படம் பார்க்கும் ரசிகர்க்கு ஒரு தயவான வேண்டுகோள்!

★ ★ ★ படத்தின் உயிர் நாடியே அந்த முடிவுதான்! ★ ★ ★

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ இலக்கத்தில் 1965-ம் வருடம் பெப்புரவரி மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.